


தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www. tamilnaduepaper.com




CHENNAI | Volume- 3 | Issue:83 | 08-10-2025 | புதன்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

08.10.2025 புரட்டாசி 22
புதன் கிழமை

சூரிய உதயம் 6.02

திதி:
இன்று காலை 7.40 வரை
பிரதமை பின்பு துவிதியை.

நட்சத்திரம்:
இன்று அதிகாலை 3.41 வரை
ரேவதி பின்பு அசுவினி

யோகம் :
இன்று காலை 8.35 வரை
வ்யாகாதம் பின்பு ஹர்ஷனம்.

கரணம் :
இன்று காலை 7.40 வரை
கௌலவம் பின்பு மாலை 5.44
வரை தைதுலம் பின்பு கரசை

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.01 வரை
சித்த யோகம் பின்பு யோகம்
சரியில்லை.

சந்திராஷ்டமம்
இன்று அதிகாலை 3.41 வரை
பூரம் பின்பு உத்திரம்

நல்ல நேரம்
காலை 9.15 – 10.15.
மாலை 4.45 – 5.45
இராகு காலம்
பிற்பகல் 12.00 – 1.30.
எமகண்டம்
காலை 7.30 – 9.00

குளிகை
காலை 10.30 – 12.00.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# தொழில் துறையில் இரட்டை இலக்க வளர்ச்சி

## முதல்வர் ஸ்டாலின் பெருமிதம்




**சென்னை, அக்.8:**
சென்னையில் வான்வெளி மற்றும் பாதுகாப்பு துறைக்கான சர்வதேச மாநாட்டை தொடங்கி வைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின் தமிழகம் உலகை ஈர்க்கும் மாநிலமாக உயர்ந்திருக்கிறது என்று தெரிவித்தார்.

சென்னையில், டிட்கோ, பிசிஐ ஏரோஸ்பேஸ் (பிரான்ஸ்), மற்றும் தமிழ்நாடு ஏரோஸ்பேஸ் தொழில் வளர்ச்சி கூட்டமைப்பு இணைந்து நடத்தும் வான்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில்துறை சார்ந்த நிறுவனங்களுக்கான - ஏரோ-டெஃப்-கான் 25 (*AeroDefCon 2025*) என்ற மூன்று நாள் சர்வதேச மாநாட்டை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார். இம்மாநாட்டில் 19 நாடுகள் மற்றும் 300 நிறுவனங்கள் பங்கேற்றுள்ளன.

தொழில்துறை, கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கிடையே 5,000-க்கும் மேற்பட்ட வணிக சந்திப்பு கூட்டங்களும் நடைபெறுகின்றன. இம்மாநாட்டின் கண்காட்சியில் முன்னணி நிறுவனங்கள், நடுத்தர ரக நிறுவனங்கள் மற்றும் பாதுகாப்பு பொதுத்துறை நிறுவனங்கள் தங்கள் அரங்குகளை அமைத்துள்ளன.

மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: வான்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில்துறை சார்ந்த நிறுவனங்களுக்கான - ஏரோ-டெஃப்-கான் 25 என்ற இந்த மாநாட்டை தமிழகத்தில் முதன்முறையாக நாம் தொடங்கி வைத்திருக்கிறோம். தமிழகம் இன்றைய தினம், இந்தியாவை ஈர்க்கும் நிலையில் இருந்து, உலகை ஈர்க்கும் மாநிலமாக உயர்ந்திருக்கிறது. இப்படிப்பட்ட முன்னோடியான மாநாடுகளை நம்முடைய தொழில் துறை சார்பில் நடத்துவதால் தான், இந்த மாநாடுகள் எல்லாம், உலகளவில் பேசப்படுகிறது. மேலும், அனைத்துவிதமான வளர்ந்துவரும் தொழில்களையும் கொண்ட மாநிலமாக தமிழகம் இருப்பதன் அடையாளம்தான் இந்த மாநாடு. இது வெறும் கண்காட்சி இல்லை. புதிய தொழில்நிறுவனங்கள், உற்பத்தியாளர்கள் ஆகியோரை கண்டறிந்து, அவர்களிடையேகூட்டு முயற்சியில் புதிய தொழில் ஒப்பந்தங்களை ஏற்படுத்துவதற்கான தளம்.

> தொழில் முனைவோருக்கும், முதலீட்டாளர்களுக்கும் தமிழக அரசு எப்போதும் துணை நிற்கும். இந்தியாவின் பாதுகாப்பை மட்டுமல்ல, உலக அமைதி, வளம் மற்றும் முன்னேற்றத்தை இயக்கும் ஆற்றலாகவும் தமிழகம் திகழும்.

தமிழகம் உற்பத்தி துறையில் லீடராக மாறிக்கொண்டு வருகிறது. தமிழ்நாடு பாதுகாப்பு தொழில்துறை வழித்தடம் எதிர்காலத்தில் முக்கிய பங்காற்ற இருக்கிறது. உயர்தர ஜெட் இன்ஜின் பாகங்களில் இருந்து, டிரோன்கள் உற்பத்தி வரை நடைபெற இருக்கிறது. வளர்ந்து வரும் விண்வெளி தொழில்நுட்பம் சார்ந்த உற்பத்தி பிரிவுகள் இதில் இருக்கின்றன. தமிழ்நாடு பாதுகாப்பு தொழில்துறை வழித்தடத் திட்டத்தை செயல்படுத்த தொடங்கியதில் இருந்து, இதுவரை ரூ.23 ஆயிரம் கோடிக்கு மேல் முதலீடுகள் ஈர்க்கப்பட்டிருக்கின்றன. இதில், ரூ.5 ஆயிரம் கோடி மதிப்பிலான திட்டங்கள் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டிருக்கிறது. 2032-க்குள், ரூ.75 ஆயிரம் கோடி முதலீட்டை ஈர்க்க நாங்கள் இலக்கு நிர்ணயித்திருக்கிறோம். இந்த வழித்தடத்தில் இருக்கும், ஒவ்வொரு நகரமும் தனித்துவமான மையங்களாக விளங்குகின்றன.

இந்த நிகழ்வில். எங்களோடு இணைந்திருக்கும் 19-க்கும் மேற்பட்ட நாடுகளுடன் சேர்ந்து, தொழில் வளர்ச்சிக்காக செயல்படுவோம். வடிவமைப்பு, மேம்பாடு, உற்பத்தி மற்றும் ஏற்றுமதி ஆகியவற்றுக்கான முன்னணி தளமாக தமிழகம் திகழ வேண்டும். அதற்கு பெரும் ஆதரவும் தேவை. வானூர்தி, விண்வெளி, கப்பல் உற்பத்தி மற்றும் பாதுகாப்புத் துறைகளில் புதுமைகள் நிறைந்த, ஏற்றுமதிக்கு உகந்த, தன்னிறைவு பெற்ற, இந்தியாவை உருவாக்க பாதுகாப்புத் துறையில் பணியாற்றும் அறிவியலாளர்களுக்கும், தொழில் முனைவோருக்கும், முதலீட்டாளர்களுக்கும் தமிழக அரசு எப்போதும் துணை நிற்கும். இந்தியாவின் பாதுகாப்பை மட்டுமல்ல, உலக அமைதி, வளம் மற்றும் முன்னேற்றத்தை இயக்கும் ஆற்றலாகவும் தமிழகம் திகழும். இவ்வாறு அவர் பேசினார்.

தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பேசும்போது, "தமிழ்நாடு பாதுகாப்பு தொழில் துறை வழித்தடம் திட்டத்தில் சர்வதேச தொழில் நிறுவனங்கள் முதலீடு செய்து இணைந்து செயல்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் மூலம் பாதுகாப்பு, சோதனை மற்றும் ஒருங்கிணைப்பு மையங்கள் அமைக்கப்படும். புதிய தொழில்துறை பூங்காக்கள் உருவாக்கப்படும். அடுத்ததாக 2027-ல் நடைபெறும் மாநாடு இன்னும் பெரிய அளவில் நடத்தப்படும்" என்றார்.

இந்த மாநாட்டில் அமைச்சர் தா.மோ.அன்பரசன், டி.ஆர்.பாலு எம்.பி., இ.கருணாநிதி எம்எல்ஏ, கடலோர காவல் படையின் தலைமை இயக்குநர் பரமேஷ் சிவமணி, பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் விஞ்ஞானி பி.கே. தாஸ், தொழில் துறை செயலாளர் வி.அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவன மேலாண்மை இயக்குநர் தாரேஷ் அகமது, டிட்கோ மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, பிசிஐ ஏரோஸ்பேஸ் முதன்மை செயல் அலுவலர் ஸ்டீபன் காஸ்டெட், மற்றும் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

# ஹிமாசல பிரதேசத்தில் நிலச்சரிவு: பலி 18-ஆக உயர்வு!



**பிலாஸ்பூர், அக்.8:**
ஹிமாசல பிரதேசத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 18-ஆக உயர்ந்துள்ளது. பிலாஸ்பூர் பகுதியில் இன்றிரவில் கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவில், நிலச்சரிவு பாதித்த பகுதியில் சுமார் 35 பயணிகளுடன் சென்றுகொண்டிருந்த பேருந்து விபத்துக்குள்ளானது.

இதனையடுத்து, தகவலறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்துள்ள மீட்புக்குழுவினர் அந்தப் பேருந்திலிருந்த பயணிகளை மீட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த விபத்தில் 18 பேர் உயிரிழந்ததாக முதல்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

மரோடான் பகுதியிலிருந்து குமார்வின் நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியார் பேருந்து ஒன்று, பலுகாட் பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கியது. விபத்து நிகழ்ந்த இடத்திலிருந்து 18 உடல்கள் மீட்கப்பட்டிருப்பதகவும் தேடுதல் பணி தொடர்ந்து நடைபெறுவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். மேலதிகத் தகவல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

# அரசு தலைமை பொறுப்பில் 25-வது ஆண்டு: நாட்டு மக்களுக்கு பிரதமர் மோடி நன்றி



**புதுடெல்லி, அக்.8:**
அரசின் தலைமைப் பொறுப்பில் 25-வது ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கும் பிரதமர் நரேந்திர மோடி நேற்று சமூக வலைதளங்களில் வெளியிட்ட பதிவுகளில் கூறியிருப்பதாவது:

கடந்த 2001-ம் ஆண்டு அக்டோபர் 7-ம் தேதி குஜராத் முதல்வராக பதவியேற்றேன். பூகம்பம், புயல், வறட்சி, அரசியல் குழப்பம் நிறைந்த காலத்தில் முதல்வராக பணியாற்றினேன். பல்வேறு சவால்களை கடந்து குஜராத்தை கட்டியெழுப்பினேன். நாட்டு மக்களுக்கு திறம்பட சேவையாற்றினேன்.

நான் முதல்வராக பதவியேற்றபோது எனது அம்மா ஓர் அறிவுரையை கூறினார். ஏழைகளுக்கு சேவை செய்ய வேண்டும். எந்த சூழலிலும் ஒரு பைசாகூட லஞ்சம் வாங்கக் கூடாது என்று அவர் அறிவுறுத்தினார். அவரது அறிவுரை, ஆலோசனை என்னை இன்றளவும் வழிநடத்திக் கொண்டிருக்கிறது.

கடந்த 2014-ம் ஆண்டில் மக்கள் ஆதரவால் நாட்டின் பிரதமராக பதவியேற்றேன். கடந்த 11 ஆண்டு ஆட்சியில் 25 கோடி பேர் வறுமையில் இருந்து மீட்கப்பட்டு உள்ளனர். உலக பொருளாதாரத்தில் நம்பிக்கை நட்சத்திரமாக இந்தியா திகழ்கிறது. அனைத்து துறைகளிலும் சுய சார்பு இந்தியா திட்டம் மிகப்பெரிய வெற்றி பெற்று இருக்கிறது.

நாட்டுக்கு சேவையாற்றுவது எனக்கு கிடைத்த மிகப் பெரிய பாக்கியம். இந்திய அரசியலமைப்பு சட்டம் எனக்கு வழிகாட்டியாக விளங்குகிறது.

வளர்ச்சி அடைந்த இந்தியா என்ற லட்சியத்தை எட்ட இன்னும் கடினமாக உழைப்பேன். என் மீது அன்பும் நம்பிக்கையும் வைத்த இந்திய மக்களுக்கு மனதார நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் .இவ்வாறு பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

பல லட்சம் வாசகர்களை கொண்ட
தமிழ்நாடு இ-பேப்பரை
https://epaper.tamilnaduepaper.com/
இணையதளத்தில்
படித்து பயன்பெறுங்கள்

# அரியானா காவல்துறை ஏடிஜிபி சர்வீஸ் ரிவால்வரால் சுட்டுக்கொண்டு தற்கொலை

**அரியானா, அக்.8:**
அரியானாவின் கூடுதல் காவல்துறை தலைமை இயக்குநர் (ஏடிஜிபி) பூரன் குமார் துப்பாக்கியால் சுட்டுக்கொண்டு தற்கொலை செய்துகொண்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

நேற்று (செவ்வாய்க்கிழமை) மதியம் 1.30 மணியளவில், சண்டிகர் செக்டார் 11-ல் உள்ள அவரது அரசு குடியிருப்பு வீட்டின் அடித்தளத்தில், தனது சர்வீஸ் ரிவால்வரால் சுட்டுக்கொண்டு அவர் உயிரை மாய்த்துக்கொண்டார்.



சண்டிகர் காவல்துறை மூத்த கண்காணிப்பாளர் கன்வர்தீப் கவுர் கூறுகையில், "பூரன் குமாரின் உடல் அவரது வீட்டில் கண்டெடுக்கப்பட்டது. தடயவியல் நிபுணர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து தடயங்களை சேகரித்தனர். இதுதொடர்பான விசாரணை தொடங்கப்பட்டுள்ளது. உடற்கூறு ஆய்வுக்குப் பின்னரே கூடுதல் விவரங்கள் தெரியவரும்" என்று அவர் தெரிவித்தார்.

சம்பவ இடத்தில் இதுவரை எந்த தற்கொலைக் குறிப்பும் கண்டெடுக்கப்படவில்லை என காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்கொலை நடந்த சமயத்தில், பூரன் குமாரின் மனைவியும், மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரியுமான அம்னீத் குமார், அரியானா முதலமைச்சர் நயாப் சிங் சைனியின் தலைமையிலான குழுவுடன் ஜப்பான் நாட்டிற்குப் பயணம் சென்றிருந்தது குறிப்பிடத்தக்கது.






## திருக்குறள் குறள்-403

**கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன் சொல்லா திருக்கப் பெறின்**



கற்றவரின் முன்னிலையில் ஒன்றையும் சொல்லாமல் அமைதியாக இருக்கப் பெற்றால் கல்லாதவர்களும் மிகவும் நல்லவரே ஆவார்.

## சிந்திக்க ஒரு நொடி



பிடித்தவர் என்பதற்காக
பிழைகளை சுட்டிக்காட்ட
தவறாதீர்கள்...
அதுபோல.....
பிடிக்காதவர்
என்பதற்காக
நல்லவற்றை தவறாக
பார்க்காதீர்கள்....

**உஷா முத்துராமன்**

## சத்திய சங்கல்பம் செய்து சத்திய நாராயணா பூஜை



**திருவள்ளூர், அக். 8:**

திருவள்ளூர் மாவட்டம் திருவூர் ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீ ஸ்வர்ண சத்யநாராயணருக்கு புரட்டாசி மாத பௌர்ணமியை முன்னிட்டு சத்திய சங்கல்பம் செய்து சத்திய நாராயணா பூஜை நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார்கள் அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டன. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## பழனிசாமியுடம் நயினார் நாகேந்திரன் சந்திப்பு



அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமியை மாநில பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் நேற்று சந்தித்துப் பேசினார்.

## உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்



ஆவடி சட்டமன்றத் தொகுதி, திருநின்றவூர் நகராட்சியில் நேற்று நடந்த உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை அமைச்சர் நாசர், மக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார்.

## நவீன பகுப்பாய்வு உணவு பரிசோதனை இயந்திரங்களின் செயல்பாடு



பாளையங்கோட்டை உணவு பகுப்பாய்வு அலுவலகத்தில் நவீன பகுப்பாய்வு உணவு பரிசோதனை இயந்திரங்களின் செயல்பாடுகளை முதலமைச்சர் காணொளி காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார். தொடர்ந்து நடந்த கலெக்டர் சுகுமார் குத்துவிளக்கு ஏற்றினார். உடன் அப்துல்வகாப்எம்எல்ஏ, மேயர் ராமகிருஷ்ணன் உள்ளனர்.

## நரிக்குறவர்களுக்காக கட்டப்பட்ட வீடுகள் திறப்பு



காவேரிப்பாக்கம் ஒன்றியம், பாணாவரம் ஊராட்சியில் தாட்கோ மூலம் நரிக்குறவர்களுக்காக கட்டப்பட்ட வீடுகளை முதல்வர் காணொளி காட்சி வாயிலாக திறந்த பிறகு, புதிய வீடுகளில் அமைச்சர் காந்தி,கலெக்டர் சந்திரகலா குத்துவிளக்கேற்றினர்.

## முதலமைச்சர் கோப்பைக்கான கால் பந்து போட்டியில் வென்ற சென்னை அணிக்கு காசோலை



தஞ்சையில் நடந்த முதலமைச்சர் கோப்பைக்கான கால் பந்து போட்டியில் வென்ற சென்னை அணிக்கு காசோலை மற்றும் கோப்பையை முரசொலி எம்.பி. , மாவட்ட வருவாய் அலுவலர் தியாகராஜன், தடகள விளையாட்டு சங்க தலைவர் கிருஷ்ணசாமி வாண்டையார், துணை மேயர் அஞ்சுகம் பூபதி, வருவாய் கோட்டாட்சியர் நித்யா வழங்கினர்.

## வேலூர் பெண்ட்லேண்ட் அரசு மருத்துவமனையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு



வேலூர் பெண்ட்லேண்ட் அரசு மருத்துவமனையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு நடத்தினார்.

## தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அலுவலர்களின் பணித்திறனாய்வுக் கூட்டம்



திருச்சி கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்த தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அலுவலர்களின் பணித்திறனாய்வுக் கூட்டத்தில் அமைச்சர்கள் சி.வி.கணேசன், அன்பில்மகேஷ் பொய்யா மொழி கலந்து கொண்டனர்.

## மாரியம்மன் கோவிலில் அன்னதானம்



தூத்துக்குடி மேலூர் தெப்பகுளம் மாரியம்மன் கோவிலில் அன்னதானத்தை மேயர் ஜெகன் பெரியசாமி துவக்கி வைத்தார்.

## புதிய கிராம அறிவு மைய கட்டடம் திறப்பு



ஜோலார்பேட்டை ஒன்றியம், துரையேறி கிராமத்தில் புதிய கிராம அறிவு மைய கட்டடத்தை முதல்வர் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்ததை தொடர்ந்து திருப்பத்தூர் கலெக்டர் சிவசவுந்தரவல்லி குத்துவிளக்கேற்றி பார்வையிட்டார்.

## தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம்



உச்ச நீதிமன்றத்தில் தலைமை நீதிபதியை அவமதிக்கும் விதமாக செயல்பட்ட வழக்கறிஞர் ராகேஷ் கிஷோரை கண்டித்து வள்ளியூரில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## அதிமுக பூத் கமிட்டி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்



நன்னிலத்தில் அதிமுக பூத் கமிட்டி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் மாவட்ட செயலாளர் காமராஜ் தலைமையில் நேற்று நடந்தது.

## குறள் வழி நடப்பதே சிறந்தது: திருக்குறள் விழாவில் பேச்சு



**வந்தவாசி , அக் 08:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த தெள்ளார் ஜோதி நிதியுதவி தொடக்கப் பள்ளியில் திருக்குறளை வாசிப்போம்..! உரையரங்கம் நடைபெற்றது.

இந்த நிகழ்விற்கு தெள்ளார் வட்டார கல்வி அலுவலர் கோ.குணசேகரன் தலைமை தாங்கினார். ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா. சீனிவாசன் முன்னிலை வகித்தார். பள்ளி தலைமை ஆசிரியர் ப.சீனிவாசன் வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராக, திருவண்ணாமலை திருக்குறள் தொண்டு மைய நிறுவனர் பாவலர் ப. குப்பன் பங்கேற்று சிறப்புரை ஆற்றினார்.

மேலும் திருக்குறளை வாசிப்போம்; மனிதத்தை நேசிப்போம் என்று வலியுறுத்தினார். மேலும் திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். மாவட்ட நிர்வாகம் சார்பில் 1330 திருக்குறளை மனப்பாடம் செய்து ஒப்பிக்கும் மாணவர்களுக்கு 15,000 ரூபாய் வழங்குகிறது என்று கூறினார். நிகழ்ச்சியில் திருவள்ளுவர் வேடமிட்டு திருக்குறள் வாசித்த மாணவர்களுக்கு புத்தக பரிசுகள் வழங்கப்படுகின்றன என்று கூறினார்.

பள்ளி ஆசிரியர்கள் வளர்மதி, பாக்ய லட்சுமி, கோபாலகிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இறுதியில் பள்ளி உதவி ஆசிரியை த.முல்லை நன்றி கூறினார்.

## சேவாலயம் இல்ல மாணவர்களுக்கு தீபாவளி இனிப்பு வழங்குதல்

**மதுரை, அக். 8:**

மதுரை கோரிப்பாளையத்தில் உள்ள சேவாலயம் இல்லத்தில் உள்ள மாணவர்களுக்கு தீபாவளி இனிப்பு மற்றும் விடுதிக்கு சமையல் பாத்திரங்கள் வழங்கும் விழா ஆடிட்டர் சுரேஷ் குமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சமூக சேவகி ஆடிட்டர் ஐஸ்வர்யா முன்னிலை வகித்தார்.



விழாவில் தலைமை ஆசிரியர் தென்னவன், அப்துல் கலாம் வழியில் நண்பர்கள் அமைப்பின் நிறுவனர் செந்தில், சமூக ஆர்வலர் அசோக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு விபத்தில்லா, மாசில்லா தீபாவளி கொண்டாடும் விதம் மற்றும் தீபாவளி வாழ்த்துக்களை வழங்கினர். அனைத்து குழந்தைகளுக்கும் தீபாவளி இனிப்புகள் வழங்கப்பட்டன.

சேவாலயம் விடுதிக்கு சமையல் பாத்திரங்கள், நூலகத்திற்கு புத்தகங்கள் வழங்கப்பட்டன. விழாவில் சேவாலயம் மாணவர்கள் கலந்து கொண்டனர். விடுதி துணை காப்பாளர் அறிவழகன் நன்றி கூறினார்.

## துணை முதலமைச்சர் பாராட்டு

**சென்னை, அக்.8:**

24எச் ஐரோப்பிய சாம்பியன்ஷிப் கார் பந்த யத்தில் அஜித்குமார் ரேசிங் அணி மூன்றாவது இடம் பிடித்த செய்தி அறிந்து பெருமை கொண்டதாக துணை முதல மைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார். சர்வதேச அரங்கில் இந்தியாவுக்கும், தமிழ்நாட்டுக்கும் பெருமை சேர்க்கும் அஜித்குமார் மற்றும் அவரது அணிக்கு மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துள்ளார். இத்தகைய பெருமைக்குரிய போட்டியில் எஸ்டிஏடி லோகோவை ஜெர்சி, வாகனத்தில் பொறித்து விளையாடியதற்கு தமிழ்நாடு அரசு சார்பில் நன்றி தெரிவித்துள்ளார். ரேசிங் களத்தில் இன்னும் பல வெற்றிகளை குவிக்க வாழ்த்துவதாகவும் அவர் தனது பாராட்டுச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## தேர்வு நுழைவுச் சீட்டு வெளியீடு

**சென்னை, அக்.8:**

சென்னை மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் செயல்படும், கூட்டுறவுச் சங்கங்களில் காலியாக உள்ள உதவியாளர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்புவதற்காக சென்னை மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் 6.8.2025 அன்று அறிவிக்கை வெளியிடப்பட்டது. அதற்கான எழுத்துத் தேர்வு அக்.11 அன்று நடத்தப் படவுள்ளது. இத்தேர்விற்கான தேர்வுக் கூட நுழைவுச் சீட்டை, அக்.5 ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) முதல் சென்னை மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய இணையதள முகவரியான WWW.DRBCHN.IN இலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள லாம். கூடுதல் விவரங்களுக்கு ARCHN.RCS@GMAIL.COM மின்னஞ்சல் மற்றும் 044-24614289 தொலைப்பேசி எண்ணைத் தொடர்பு கொள்ளலாம் என்று கூட்டுறவுச் சங்கங் களின் கூடுதல் பதிவாளர், சென்னை மண்டலம் தலைவர் தெரிவித்துள்ளார்.

## எடப்பாடி பழனிசாமி நரித்தனமாக செயல்படுகிறார்: தினகரன்

**திருச்சி, அக்.8:**

அமமுக பொதுச் செயலாளர் திருச்சியில் ஊடக வியலாளர்களுக்கு அளித்த பேட்டியில், “வரும் சட்டமன்றத் தேர்தலில் துரோகி என்ற வார்த்தையை அரசியலில் நினைக்கவே கூடாது என்ற அளவுக்கு எடப்பாடி பழனி சாமிக்கு பதிலடி கொடுப்போம்” என்றார். “இன்றைய அதிமுக, ஜெயலலிதாவின் அதிமுக அல்ல. பொதுச் செயலாளர் பதவிக்கான ஜனநாயக அடிப்படையை தகர்த்துவிட்டார்” என்று விமர்சித்தார். கரூர் சம்பவம் குறித்த கேள்விக்கு, “விபத்தை அரசிய லாக்க வேண்டும் என்பதற்காக தமிழக வெற்றிக் கழகத்தை கூட்டணிக்கு இழுக்க நரித்தனமாகச் செயல்படுகிறார். தூத்துக் குடி சம்பவத்திற்கு பொறுப்பேற்காதவர், இப்போது எப்படி பேச முடியும்?” என்று கேள்வி எழுப்பினார். வரும் தேர்தலில் நான்கு முனைப் போட்டி நிலவும் என்றும் தெரிவித்தார்.

## பிரச்சார வாகன ஓட்டுநர் மீது வழக்கு!

**கரூர், அக்.8:**

கரூரில் தவெக தலைவர் விஜய்யின் பிரச்சார வாகனத்தை பின் தொடர்ந்தவர்கள் கீழே விழுந்து விபத்து ஏற்பட்ட நிலையில், தற்போது பிரச்சார வாகன ஓட்டுநர் மீது வழக்குப் பதியப்பட்டுள்ளது. விஜய்யின் பரப்புரை வாகன ஓட்டுநர் மற்றும் இருசக்கர வாகனங்கள் ஓட்டிச் சென்ற இரு வர் மீது, பிஎன்எஸ் சட்டப் பிரிவு 218-ன் கீழ் விபத்தை ஏற்படுத் தல், உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தல் ஆகிய இரண்டு பிரிவு களில் கரூர் வேலாயுதம்பாளையம் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## ஆட்சியர் குறித்து அவதூறு

**கரூர், அக்.8:**

கரூர் வேலுச்சாமிபுரத்தில் நடந்த தவெக பிரச்சாரக் கூட்டத்தில் நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த னர். இது தொடர்பாக முகநூலில் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் குறித்து அவதூறாக பதிவிடப்பட்டுள்ளது. இது குறித்து கரூர் எஸ்.பி. அலுவலகத்தில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் செந்தில் அளித்த புகாரின்பேரில், தாந்தோணி மலை போலீசார் வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## வால்வோ சொகுசு பேருந்துகள் இயக்க ஏற்பாடு

**சென்னை, அக்.8:**

தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக் கழகத்தில் முதல் முறையாக 20 வால்வோ மல்டி ஆக்சில் சொகுசு பேருந்துகள் பொங்கல் பண்டிகைக்குள் பயன் பாட்டிற்கு கொண்டு வரப்பட உள்ளது. ஒவ்வொரு பேருந்தும் ரூ.1.15 கோடியில் வாங்கப்படுகிறது.

# வடசென்னை கட்டுமான பணிகள்: அமைச்சர்கள் எ.வ.வேலு, சேகர்பாபு நேரில் பார்வையிட்டு ஆய்வு



**சென்னை, அக்.8:**

கீழ்ப்பாக்கம் தமிழ்நாடு மனநலம் மற்றும் நரம்பியல் ஒப்புயர்வு மைய புதிய கட்டிடத்தின் கட்டுமானப் பணிகளையும், கொளத்தூர் ஏரிபூங்கா செல்வதற்கு சேவை சாலையின் பணிகளையும் மற்றும் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் மேம்படுத்தப்பட்டு வரும் கொளத்தூர் ஏரிக்கரை பணிகளையும் அமைச்சர்கள் எ.வ.வேலு மற்றும் பி.கே. சேகர்பாபு ஆகியோர் நேரில் ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினர்.

பொதுப்பணிகள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கேசேகர்பாபு ஆகியோர் வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதி, மேடவாக்கம் டேங்க் ரோடு, கீழ்ப்பாக்கத்தில் பொதுப்பணித்துறையின் சார்பில் கட்டப்பட்டு வரும் தமிழ்நாடு மனநலம் மற்றும் நரம்பியல் ஒப்புயர்வு மையம் புதிய கட்டிடத்தின் கட்டுமானப் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

கொளத்தூர் -பெர ம்பூர் பேப்பர்மில்ஸ் சாலையிலிருந்து வரும் வாகனங்கள் உள்வட்ட சாலையை அடைவதற்கும், கொளத்தூர் ஏரி பூங்கா செல்வதற்கும் 600 மீட்டர் நீளம் மற்றும் 7.50 மீட்டர் அகலம் கொண்ட சேவை சாலையின் இருபுறமும் 2 மீட்டர் அகலத்திற்கு நடைபாதையும் அமைக்கப்பட்டு வரும் பணிகளையும், கொளத்தூர் ஏரிக்கரையை வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் மேம்படுத்தப்பட்டு வரும் பணிகளையும் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

பருவமழை தொடங்க உள்ள நிலையில் நெடுஞ்சாலை துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்தான கேள்விக்கு அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்களிடம் கூறியதாவது:

மழைக்காலம் தொடங்குவதற்கு முன்பே சாலை பணிகளை முடிக்க வேண்டும் என்ற ஆணையை நாங்கள் வழங்குகிறோம். அதன் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சில நேரங்களில் பணி தாமதமாகும் போது, பாதுகாப்பு கருதி, பேரிகேட் போன்றவை அமைக்க வேண்டும். விபத்து ஏற்படக்கூடாது என்பதற்காகவே சில கட்டுப்பாடுகளை வைக்கிறோம். பணிகளை நிறுத்த வேண்டும் என்று எந்த நிலையிலும் ஆணை பிறப்பிக்கப்படவில்லை.

தமிழ்நாட்டில் சுமார் 66,000 கிலோமீட்டர் நீளமான நெடுஞ்சாலைகள் உள்ளன. இதுபோன்ற பெரிய துறையில் கால அவகாசம் பார்க்காமல், எப்போதெல்லாம் நேரம் கிடைக்கின்றதோ அப்போதெல்லாம் சாலை பணிகளை மேற்கொள்கிறோம். மழைக்காலங்களில் பாதுகாப்பு கருதி தேவையான உபகரணங்களை பயன்படுத்தி பணிகளை மேற்கொள்கிறோம். மழைக்காலம் என்பதற்காக நாங்கள் பணிகளை நிறுத்துவதில்லை. பாதுகாப்பை முன்னிலைப்படுத்தி அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன என்றார்.

மத்திய கைலாஷ் மேம்பாலம் குறித்தான கேள்விக்கு அமைச்சர் வேலு பதில் அளிக்கையில், மத்திய கைலாஷ் மேம்பாலப் பணிகள் அக்டோபருக்குள் முடியும் என நம்புகிறேன். அந்தப் பணிகளை கடந்த வாரம் நேரில் சென்று பார்வையிட்டேன். பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன என்று அமைச்சர் கூறினார்.

இந்த ஆய்வுகளின்போது மேயர் ஆர்.பிரியா, நெடுஞ்சாலைத்துறை செயலாளர் ஆர்.செல்வராஜ், முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம் மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

# டாக்டர் ராமதாஸ், வைகோவை நேரில் சந்தித்து நலம் விசாரித்த செங்கோட்டையன்

**நாகை, அக்.8:**



பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்பல்லோ ஆஸ்பத்திரியில் மருத்துவ பரிசோதனைக்காக நேற்று அனுமதிக்கப்பட்டார். இதையடுத்து அவரை ஆஸ்பத்திரியின் டாக்டர்கள் குழுவினர் பரிசோதித்தனர். தொடர்ந்து அவருக்கு ஆஞ்சியோ பரிசோதனை செய்யப்பட்டது.

தொடர்ந்து அவர் டாக்டர்களின் கண்காணிப்பில் உள்ளார். மேலும் சில நாட்கள் ஆஸ்பத்திரியில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே டாக்டர் ராமதாசை, முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று நலம் விசாரித்தார். அப்போது உடல்நிலை குறித்துகேட்டறிந்த மு.க.ஸ்டாலின், விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்று தனது விருப்பத்தை அவரிடமும், அவரது குடும்பத்தினரிடமும் தெரிவித்தார். இந்த நிலையில், உடல்நலக்குறைவால் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் டாக்டர் ராமதாசை அதிமுக முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் நேரில் சந்தித்து நலம் விசாரித்தார். அப்போது உடல்நிலை குறித்து கேட்டறிந்த செங்கோட்டையன், சிகிச்சைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

இதைபோல ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ சளி, இருமல் உள்ளிட்ட பிரச்சினைகளால் கடந்த 4-தேதி அப்பல்லோ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு டாக்டர்கள் குழு தீவிர சிகிச்சை அளித்து வருகிறது. இந்த நிலையில், அதிமுக முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் வைகோவை நேரில் சந்தித்து உடல்நலம் குறித்து விசாரித்தார். இதுதொடர்பான புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வெயிடப்பட்டுள்ளது.

# சென்னையில் மழைநீர் வடிகால் பணிகள்: உதயநிதி ஸ்டாலின் ஆய்வு

**சென்னை, அக்.8:**



மழைநீர் வடிகால் இணைப்பு கால்வாய் பணிகளை விரைந்து முடிக்குமாறு அலுவலர்களுக்கு உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தினார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று இரவு சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வி.பி.ராமன் சாலையில், வருகின்ற பருவமழை காலங்களில் மழைநீர் தேங்காத வகையில், எளிதாக பக்கிங்காம் கால்வாய்க்கு செல்லும் வகையில் மழைநீர் வடிகால் கால்வாயில் தூர்வாரப்பட்டு உள்ளதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து வி.பி.ராமன் சாலை, ராயப்பேட்டை நெடுஞ்சாலை மற்றும் மாசிலாமணி சாலைகள் சந்திப்பு பகுதியில், ராயப்பேட்டை நெடுஞ்சாலை மற்றும் மாசிலாமணி சாலைகளில் புதிதாக கட்டப்பட்டு உள்ள மழைநீர் கால்வாய்களை இணைக்கும் வகையில் கட்டப்பட்டு வரும் இணைப்பு கால்வாய் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மழைநீர் வடிகால் இணைப்பு கால்வாய் பணிகளை விரைந்து முடிக்குமாறு அலுவலர்களுக்கு உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தினார்.

புதிதாக கட்டப்பட்டு வரும் மழைநீர் கால்வாய்கள் மூலமாக வி.பி.ராமன் சாலை பகுதியில் மழைநீர் எளிதாக பக்கிங்காம் கால்வாய்க்கு சென்று அங்கிருந்து கடலுக்கு சென்று விடும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த ஆய்வில் பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மாமன்ற உறுப்பினர் கமலா செழியன், சென்னை பெருநகர மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389



## நலம் தரும் மருத்துவம்

# இழந்த ஆரோக்கியத்தை மீட்கும் ரகசியம்: நம் மண்ணுக்கே உரிய அரிசி(RICE) வகைகள்!

அரிசி(RICE) என்பது அனைவரின் வீட்டில் காணப்படும் ஒரு தவிர்க்க முடியாத உணவுப் பொருள். ஆனால், அது இன்றைய மாடர்ன் இளைய தலைமுறைகளால் உடல் பருமனைக் காரணம் காட்டி கொஞ்சம் கொஞ்சமாகத் தவிர்க்கப்பட்டு வருகிறது. இது நல்லதா?

தென்னிந்திய உணவுப் பொருட்களில் முக்கியமாகக் கருதப்படுவது அரிசி. குறிப்பாக, தமிழ்நாட்டில் தினமும் பல்வேறு வகைகளில் மக்களால் உட்கொள்ளப்படுகிறது. வேகவைத்த அரிசி, இட்லி, தோசை, பொங்கல் மற்றும் பல... வெள்ளை அரிசியின் பளபளப்பான தோற்றம், அதன் மென்மையான அமைப்பு மற்றும் விரைவாகச் சமைக்க முடிவதால் பலதரப்பட்ட மக்களால் அது பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

இன்னொரு புறம் சில பாரம்பரிய அரிசி வகைகள் (HEALTHY RICE VARIETIES) அவற்றின் உயர்ந்த ஊட்டச்சத்து, மருத்துவ மதிப்புக்காக இன்றைய காலகட்டத்தில் குறிப்பாக நகர்ப்புற மக்களிடம் படிப்படியாகக் கவனத்தைப் பெற்று வருகின்றன. இதில் தமிழ்நாடு மட்டும் 160க்கும் மேற்பட்ட பாரம்பரிய அரிசி வகைகளைக் கொண்டுள்ளது. அவற்றில் பல இந்திய அறிவு அமைப்புகள் மையம் (CENTRE FOR INDIAN KNOWLEDGE SYSTEMS) போன்ற அமைப்புகளால் பாதுகாக்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டுள்ளன.

அரிசியில் பொதுவாக காணப்படும் ஊட்டச்சத்துக்கள் அனைத்து அரிசி வகைகளிலும் பொதுவாக கார்போஹைட்ரேட்டுகள் (CARBOHYDRATES), புரதங்கள் (PROTEINS), உணவு நார்ச்சத்து (DIETARY FIBER), வைட்டமின்கள் (குறிப்பாக B-COMPLEX), இரும்பு (IRON), மெக்னீசியம் (MAGNESIUM) போன்ற தாதுக்கள் (MINERALS) மற்றும் ஆக்ஸிஜனேற்றிகள் (ANTIOXIDANTS) இருக்கும். இந்த ஊட்டச்சத்துக்கள் மனிதனுக்குத் தேவையான ஆற்றல் உற்பத்தி, செரிமான ஆரோக்கியம், நோயெதிர்ப்பு சக்தி மற்றும் வளர்சிதை மாற்ற ஒழுங்குமுறைக்குப் (METABOLIC REGULATION) பங்களிக்கின்றன. இருப்பினும் இந்த ஊட்டச்சத்துக்கள் வெவ்வேறு அரிசி வகைகளுக்கு என்று கணிசமாக வேறுபடுகின்றன. குறிப்பாக சில அரிசி வகைகளை உண்பதால் பல தனித்துவமான நன்மைகளைப் பெறலாம்.

தமிழ்நாடு மற்றும் இந்தியா முழுவதும் காணப்படும் ஊட்டச்சத்து நிறைந்த சில முன்னணி அரிசி வகைகள்.

1. மாப்பிள்ளை சம்பா: ஊட்டச்சத்துக்கள்: அதிக அந்தோசயனின்கள்(ANTHOCYANINS), பீனாலிக்ஸ்(PHENOLICS), ANTIOXIDANTS, நார்ச்சத்து.

நன்மைகள்: அதிக ஆற்றலைத் தருகிறது, செரிமானத்தை மேம்படுத்துகிறது, கிளைசெமிக் குறியீட்டைக் குறைக்கிறது(LOWERS GLYCEMIC INDEX), இதய ஆரோக்கியத்தை ஆதரிக்கிறது.

2. கருப்பு கவுனி (கருப்பு அரிசி)

ஊட்டச்சத்துக்கள்: அந்தோசயனின்கள் (ANTHOCYANINS), இரும்பு(IRON), வைட்டமின் ஈ, ANTIOXIDANTS நிறைந்துள்ளன. நன்மைகள்: அலர்ஜியைத் தடுக்கும், தோல் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது, எடை இழப்பை ஆதரிக்கிறது, நீரிழிவு அபாயத்தைக் குறைக்கிறது.

3. கருங்குருவை: ஊட்டச்சத்துக்கள்: அதிக நார்ச்சத்து, ANTIOXIDANTS. நன்மைகள்: நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது, ரத்த சர்க்கரையை ஒழுங்குபடுத்துகிறது, நச்சு நீக்கத்திற்கு உதவுகிறது (AIDS DETOXIFICATION).

4. காட்டுயானம்: ஊட்டச்சத்துக்கள்: நார்ச்சத்து, தாதுக்கள்(MINERALS), ANTIOXIDANTS. நன்மைகள்: நோய் எதிர்ப்பு சக்தியைப் பலப்படுத்துகிறது, கொழுப்பைக் குறைக்கிறது, குடல் ஆரோக்கியத்தை ஆதரிக்கிறது.

5. குல்லாகர்: ஊட்டச்சத்துக்கள்: இரும்பு, துத்தநாகம்(ZINC), நார்ச்சத்து. நன்மைகள்: ரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்துகிறது, நீரிழிவு மேலாண்மைக்கு உதவுகிறது, எலும்பு வலிமையை மேம்படுத்துகிறது.

6. கருடன் சம்பா: ஊட்டச்சத்துக்கள்: நார்ச்சத்து, தாதுக்கள்(MINERALS). நன்மைகள்: நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. செரிமானத்திற்கு உதவுகிறது, வளர்சிதை மாற்ற ஆரோக்கியத்தை ஆதரிக்கிறது.

# மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் ரூ.174 கோடியில் கட்டிடங்கள்: ஸ்டாலின் திறந்து வைத்தார்

**சென்னை, அக்.8:**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் ரூ.173.81 கோடி செலவிலான மருத்துவக் கட்டடங்களை திறந்து வைத்து, ரூ.20.15 கோடி மதிப்பீட்டிலான மருத்துவக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி, தஞ்சாவூர், சேலம், பாளையங்கோட்டைஉணவுப் பகுப்பாய்வு கூடங்களில் 24 கோடி ரூபாய் மதிப்பில் நிறுவப்பட்டுள்ளஅதிநவீன உபகரணங்களை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பயன்பாட்டிற்காக தொடங்கி வைத்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் காட்பாடி அரசு மருத்துவமனை, பழனி மாவட்ட தலைமை மருத்துவமனை, திருப்பத்தூர் மாவட்ட தலைமை மருத்துவமனை, கூடலூர் மாவட்ட தலைமை மருத்துவமனை, சங்கராபுரம் அரசு மருத்துவமனை, மேலூர் அரசு மருத்துவமனை ஆகிய மருத்துவமனைகளில் 108 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டடங்கள்,

தென்காசி, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர்ஆகிய இடங்களில் 42 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாவட்டமருந்துகிடங்குகள், மதுரை உணவு பகுப்பாய்வு கூட வளாகத்தில் 1.49கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய ஆய்வகக் கட்டடம்,

சென்னையில் 14.85 கோடி ரூபாய் செலவில் புதிய மருந்து கட்டுப்பாடு நிர்வாக இயக்கக கட்டடம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 75 லட்சம் ரூபாய் செலவில் உதவி மருந்து கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகக் கட்டடம், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையரகத்தில் சார்பில் 6 கோடியே 22 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை திறந்து வைத்து, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையரகத்தின் சார்பில் 20 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

சென்னை,தேனாம்பேட்டை, டி.எம்.எஸ். வளாகத்தில் மருந்துக் கட்டுப்பாடு இயக்கத்திற்கு 14 கோடியே 85 லட்சம் ரூபாய் செலவில் தரை மற்றும் ஆறு தளங்களுடன் கட்டப்பட்டுள்ள புதிய அலுவலகக் கட்டடம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம்

வாலாஜாபாத் வட்டம், ஊத்துக்காட்டில் 75 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள உதவி மருந்துக் கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகக் கட்டடம் ஆகியவற்றை முதலமைச்சர் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ப.செந்தில்குமார், மருந்து கட்டுப்பாடு இயக்குநர் ஆர்.லால்வேனா, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் அருண் தம்புராஜ், ஓமியோபதி ஆணையர் எம். விஜயலட்சுமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக வேலூர் மாவட்டத்திலிருந்து அமைச்சர்கள் துரைமுருகன், மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜெகத்ரட்சகன், கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் கார்த்திகேயன், அமுலு, மாவட்ட கலெக்டர் சுப்புலட்சுமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள்,

திருப்பத்தூர் மாவட்டத்திலிருந்து சட்டமன்ற உறுப்பினர்கள் தேவராஜ், நல்லதம்பி, மாவட்ட கலெக்டர் சிவசௌந்தரவள்ளி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள், திண்டுக்கல் மாவட்டத்திலிருந்து சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி. செந்தில்குமார், கலெக்டர் எஸ்.சரவணன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528

## அண்ணாமலை திடீர் டில்லி பயணம்

**சென்னை, அக்.8:**

கரூரில் நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக, பாதிக்கப்பட் டவர்களை, கரூருக்கு வந்த பாஜக எம்.பிக்கள் விசாரணை குழுவுடன், அண்ணா மலை சென்று ஆய்வு மேற்கொண்டார். இந்நிலையில் திடீ ரென சனிக்கிழமை கோவையில் இருந்து விமா னத்தில் தில்லி புறப்பட்டுச் சென்றார். அங்கு அவர், அமித் ஷா மற்றும் பாஜக தேசிய அமைப்பு பொதுச் செயலாளர் பி.எல்.சந்தோஷ் ஆகியோரைச் சந்திக்க திட்டமிட்டுள்ள தாகவும், தமிழக அரசியல் சூழ்நிலை குறித்து ஆலோசிக் க இருப்பதாகவும் கூறப்படுகிறது.

## தமிழ்நாட்டில் பிரிவினையை ஏற்படுத்தும் பிரித்தாளும் முயற்சிகளில் அரசியல் கட்சிகள் ஈடுபடுகின்றன: கவர்னர் பேச்சு

**சென்னை, அக்.8:**

தமிழ்நாட்டில் பிரிவினையை ஏற்படுத்தும் பிரித்தாளும் முயற்சிகளில் அரசியல் கட்சிகள் ஈடுபடுகின்றன என கவர்னர் ஆர்.என்.ரவி தெரிவித்துள்ளார்.

சுவாமி திருவருட்பிரகாச வள்ளலாரின் 202-வது அவதார தினத்தையொட்டி, கவர்னர் ஆர்.என்.ரவி பக்தர்களுடன் கவர்னர் மாளிகையின் வள்ளலார் பூங்காவில் வள்ளலாருக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். அதன்பின்னர் கவர்னர் ஆர்.என்.ரவி பேசியதாவது:-

கடந்த 2 நாட்களாக வள்ளலாரின் போதனைகளால் ராஜ்பவன் புனிதமாகிவிட்டது. இன்று காலையில் நான் தூங்கி எழும்போது வள்ளலாரின் போதனைகளை கேட்டேன். உலகில் இருக்கும் பிரிவினைவாதம், வறுமை ஆகியவற்றை போக்கும் வழிகள் வள்ளலார் தத்துவத்திற்கு உள்ளது.



வடலூர் சென்று வள்ளலாரை வணங்கிவிட்டு வந்த பிறகு தான் சிலவற்றை உணர்ந்தேன். அவருக்கு கொடுக்க வேண்டிய மரியாதை இன்னமும் கிடைக்காதது வருத்தமாக இருந்தது. அதனால் தான் 2023 முதல் வருடம் தோறும் ராஜ்பவன் வள்ளலார் விழாவை நடத்துகிறது. வள்ளலாரை தினமும் வணங்க வேண்டும் என்பதற்காக கிண்டி ராஜ்பவனில் வள்ளலார் சிலையை அமைத்தேன்.

"நான் மாநிலம் முழுவதும் பயணிக்கும்போது, 'தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்' என்று சுவர்களில் எழுதியுள்ளார்கள். யாருடன் போராடும் தமிழ்நாட்டை எதிர்த்து யாரும் போராடவில்லை. இங்கு எந்த சண்டையும் இல்லை. நாம் கண்டிப்பாக இணைந்து வாழ வேண்டும். நாட்டின் பல இடங்களில் சாதிய ஏற்றத்தாழ்வு இருந்தாலும் அதிகம் படித்தவர்கள் இருக்கும் தமிழ்நாட்டிலும் அது இருக்கிறது. 50 சதவீத உயர்கல்வி விகிதம் கொண்ட தமிழ்நாட்டில் பட்டியலின மக்கள் மோசமாக நடத்தப்படுகின்றனர். பிரிவினையை ஏற்படுத்தும் பிரித்தாளும் முயற்சிகளில் அரசியல் கட்சிகள் ஈடுபடுகின்றன.

பிரதமர் மோடி சமரச சன்மார்க்கத்தை கடைப்பிடிக்கிறார். இவ்வாறு அவர் கூறினார்.

## கார் விற்பனையில் உச்சம் தொட்ட டாடா மோட்டார்ஸ்

கடந்த செப்டம்பரில் நிறுவனத்தின் 60,907 பயணிகள் வாகனங்கள் விற்பனையாகின. இது, இதுவரை இல்லாத அதிகபட்ச மாதாந்திர பயணிகள் வாகன விற்பனையாகும். முந்தைய 2024 செப்டம்பரில் இந்த எண்ணிக்கை 41,313-ஆக இருந்தது.

உள்நாட்டு சந்தையில் விற்பனையாளர்களுக்கு அனுப்பப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 45 சதவீதம் உயர்ந்து 59,667-ஆக உள்ளது. 2024 செப்டம்பரில் இது 41,063-ஆக இருந்தது.

ஜிஎஸ்டி வரி குறைப்பு, நவராத்திரி பண்டிகை காரணமாக செப்டம்பரில் பயணிகள் வாகனங்களுக்கான தேவை கணிசமாக உயர்ந்தது. இந்தப் போக்கு வரவிருக்கும் மாதங்களிலும் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மதிப்பீட்டு மாதத்தில் நிறுவன வர்தகக வாகனங்களின் விற்பனை 19 சதவீதம் உயர்ந்து 35,862-ஆக உள்ளது. அந்த வகை வாகனங்களின் உள்நாட்டு விற்பனை 16 சதவீதம் உயர்ந்து 33,148-ஆக உள்ளது. 2024 செப்டம்பரில் இது 28,631-ஆக இருந்தது என்று அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அலுவலக குத்தகை 2 கோடி சதுர அடியாகக் குறைவு

**புதுதில்லி:** மனை-வர்த்தக ஆலோசக நிறுவனமான சிபிஆர்இ திங்கள்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த ஜூலை முதல் செப்டம்பர் வரையிலான 2025-ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டில் சென்னை, பெங்களூரு, ஹைதராபாத், தில்லி-என்சிஆர், மும்பை, புணே, கொல்கத்தா, அகமதாபாத், கொச்சி ஆகிய 9 நகரங்களில் மொத்தம் 1.99 கோடி சதுர அடி அலுவலக இடங்கள் குத்தகைக்கு எடுக்கப்பட்டன.

முந்தைய 2024-ஆம் ஆண்டின் இதே காலாண்டோடு ஒப்பிடுகையில் இது 2.5 சதவீதம் குறைவாகும். அப்போது நிறுவனங்கள் 2.04 கோடி சதுர அடி அலுவலக இடங்களை குத்தகைக்கு எடுத்திருந்தன. மதிப்பீட்டுக் காலாண்டில், பெங்களூருவில் அலுவலக குத்தகை 72 லட்சம் சதுர அடியிலிருந்து 43 லட்சம் சதுர அடியாகவும், ஹைதராபாதில் 26 லட்சம் சதுர அடியிலிருந்து 22 லட்சம் சதுர அடியாகவும் குறைந்துள்ளது. சென்னையில் அது 24 லட்சம் சதுர அடியிலிருந்து 15 லட்சம் சதுர அடியாகக் குறைந்தது.

ஆனால், அலுவலக குத்தகை தில்லி-என்சிஆரில் 24 லட்சம் சதுர அடியிலிருந்து 38 லட்சம் சதுர அடியாகவும், மும்பையில் 29 லட்சம் சதுர அடியிலிருந்து 40 லட்சம் சதுர அடியாகவும் அதிகரித்தது. அதே போல் புணேவிலும் அது 19 லட்சம் சதுர அடியிலிருந்து 32 லட்சம் சதுர அடியாக உயர்ந்தது.

## 'கோல்ட்ரிப்' மருந்து தயாரிப்பு நிறுவனத்தின் உரிமத்தை ரத்து செய்ய நடவடிக்கை: அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி

**சென்னை, அக்.8:**

'கோல்ட்ரிப்' மருந்து தயாரிப்பு நிறுவனத்தின் உரிமத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

சென்னை சைதாப்பேட்டை தொகுதியில் நேற்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் 'அன்புக் கரங்கள்' திட்டத்தின் கீழ் பதிவு செய்த 300 குழந்தைகளுடன் ஒரு நாள் சுற்றுலா மேற்கொண்டார். அப்போது, குழந்தைகளுக்கு பிடித்த உடைகளை வாங்கி தந்து இனிப்புகள் வழங்கினார்.




பின்னர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் நிருபர்களிடம் கூறியதாவது:-

அன்புக்கரங்கள் திட்டத்தின் கீழ் 6 ஆயிரத்து 82 குழந்தைகளுக்கு மாதந்தோறும் ரூ.2 ஆயிரம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, சைதாப்பேட்டை தொகுதியில் உள்ள குழந்தைகளை மகிழ்ச்சிப்படுத்தும் வகையில் ஒருநாள் சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டு அது சிறப்பாக அமைந்தது. இது எனது மனதுக்கு மகிழ்ச்சியை தந்தது.

கடந்த 1-ந் தேதி மத்திய பிரதேச மருந்து கட்டுப்பாட்டு துறையிடம் இருந்து தமிழக மருந்து கட்டுப்பாட்டு துறைக்கு அவசர கடிதம் ஒன்று வந்தது.

அந்த கடிதத்தில், சிந்த்வாரா மாவட்டத்தில் குழந்தைகள் இறப்புக்கு தொடர்புடையதாக கருதப்படும் 'கோல்ட்ரிப்' மருந்து தயாரிப்பு நிறுவனம் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

இது தொடர்பாக நடைபெற்ற ஆய்வில் விதிமீறல்கள் கண்டறியப்பட்டு சர்ச்சைக்குரிய மருந்தான 'கோல்ட்ரிப்' உள்ளிட்ட 5 மருந்துகள் ஆய்வுக்கு அனுப்பப்பட்டது. ஆய்வின் முடிவில் 'டைதிலீன் கிளைகால்' என்ற உயிர்க்கொல்லி நச்சு வேதிப்பொருள் 'கோல்ட்ரிப்' மருந்தில் 48.6 சதவீதம் இருப்பதாக கண்டறியப்பட்டது. அன்றைய தினமே தமிழகம் முழுவதும் 'கோல்ட்ரிப்' மருந்து விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டது.

இதேபோல, ஸ்ரீசன் பார்மசியூட்டிகள் நிறுவனத்தின் உற்பத்தியை நிறுத்தி அந்த நிறுவனம் உடனடியாக மூடப்பட்டது.

உரிமத்தை முழுமையாக ரத்து செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த தகவல்கள் அனைத்தும் மத்திய பிரதேச மருந்து கட்டுப்பாட்டு துறைக்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது. தமிழக அரசின் உடனடி நடவடிக்கையால் எந்த பாதிப்பும் தமிழத்தில் ஏற்படவில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

## வேலூர் ஸ்ரீநாராயணி மருத்துவமனை 21-ம் ஆண்டு விழா: நடிகர் வெங்கட்பிரபு பங்கேற்பு

**வேலூர், அக்.8:**

ஸ்ரீ நாராயணி பீடம் ஸ்ரீசக்தி அம்மா தோற்றி வைத்த நாராயணி மருத்துவமனையின் 21-வது ஆண்டு விழா, உலக இதய தினத்தோடு கொண்டாடப்பட்டது. இவ்விழா நாராயணி மகால் அரங்கில் இம் மருத்துவமனையின் இயக்குனர் என்.பாலாஜி தலைமையில் நடைப்பெற்றது. நிகழ்ச்சியின் தொடக்கத்தில் இயக்குனர் என். பாலாஜி அனைவரையும் வரவேற்றார். சிறப்பு விருந்தினராக திரைப்பட நடிகரும், இயக்குனருமான வெங்கட்பிரபு, மற்றும் திரைப்பட நடிகை மிருணாளினி ரவி பங்கேற்று குத்து விளக்கேற்றி தொடக்கிவைத்து சிறப்புறையாற்றினர்.

வெங்கட்பிரபு பேசியதாவது: ஸ்ரீ நாராயணி மருத்துவமனையை ஸ்ரீசக்தி அம்மா தோற்றி வைத்து மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது. மருத்துவ சிகச்சைகளை வெற்றிகண்டு21-ஆம் ஆண்டுவிழாவை இதயதினவிழாவில் கொண்டாடுவது பெரும் மகிழ்ச்சி. இம்மருத்துவமனை சேவை மனப்பான்மையுடன் செயல்படுவது பாராட்டுக்கு உட்பட்டது. மனிதர்களாக பிறந்த ஒவ்வொருவரும் நோய் நொடி இல்லாமல் வாழ வேண்டும். இதற்காக நாம் மருத்துவமனைக்கு வந்து சோதித்து மருத்துவர்கள் சொல்படி நடந்து கொண்டால் நம்மை நோய் நாடாது. இத்துடன் எல்லோரும் முறையான நடை பயிற்சி, யோக பயிற்சிகளை செய்து, உடலை சரியாக வைத்துக் கொள்ள வேண்டும். சரியான உணவுகளை தேர்வு செய்து உண்ண வேண்டும். இறுதியாக மனநிறைவுடன் ஆரோக்கியமாக வாழ்ந்திட பழகி கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

நிகழ்ச்சிகளில், மருத்துவமனை டீன், சூப்பரெண்ட் மற்றும் அனைத்து பிரிவு டாக்டர்கள், மருத்துவமனை ஊழியர்கள், நர்சிங் கல்லூரி மாணவ மாணவிகள் உட்பட பலர் பங்கேற்றனர்.

## காட்பாடியில் புதிய சமுதாய கூடம் கட்டும் பணி: அமைச்சர் துரைமுருகன் தொடங்கி வைத்தார்

**வேலூர், அக். 8:**

காட்பாடி, செங்குட்டை பகுதியில் அரக்கோணம் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ. 80 லட்சம் மதிப்பில் புதிய சமுதாய கூடம் மற்றும் காட்பாடி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூபாய் 20 இலட்சம் மதிப்பில் விழா மேடை அமைப்பதற்கான பணிகளை அமைச்சர் துரைமுருகன் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

அப்போது அவர் பேசியதாவது: காட்பாடி சட்டமன்ற தொகுதியில் 1971 ஆம் ஆண்டு முதல் சட்டமன்ற உறுப்பினராக தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட வருகின்றேன். நான் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட பொழுது காட்பாடி பகுதியில் ஒரே ஒரு அரசு பள்ளி மட்டுமே இருந்தது. தற்போது இந்த பகுதியில் மட்டும் 25க்கும் அதிகமான மேல்நிலைப் பள்ளிகள் உள்ளது.

காட்பாடி பகுதிக்கு புதிய காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகம் கொண்டுவரப்பட்டுள்ளது. புதிய சார் பதிவாளர் அலுவலகம் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது, பொன்னை பகுதியில் ரூபாய் 45 கோடி மதிப்பில் பொன்னை ஆற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டப்பட்டுள்ளது. பொன்னையாற்றின் குறுக்கே தடுப்பணைகளும் கட்டப்பட்டுள்ளது. காட்பாடியில் பழைய ஏரிகளான கழிஞ்சூர் மற்றும் தாராபடவேடு ஏரிகள் ஒன்றிணைக்கப்பட்டு சிறந்த சுற்றுலா தளமாக கட்டமைக்கப்பட்டுள்ளது. சேர்க்காடு மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள கிராமங்களை சார்ந்த பொது மக்களுக்கு நல்ல தரமான சிகிச்சைகளை வழங்க ஏதுவாக சேர்க்காடு பகுதியில் 60 படுக்கை வசதிகளுடன் கூடிய மருத்துவமனை கட்டப்பட்டுள்ளது. இந்த மருத்துவமனையானது நாளைய தினம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த மருத்துவமனை படிப்படியாக 100 படுக்கைவசதிகள் கொண்ட மருத்துவமனையாக உயர்த்தப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# நேருக்கு நேர்....!




“வணக்கம்” என என்னுடைய உரையாடலைத் தொடர்ந்தேன். ”வணக்கம்! மீண்டும் வரவேற்கிறேன். எப்படி இருக்கிறீர்கள்?’ என விவாதத்திற்குத் தயாரானது செயற்கை நுண்ணறிவு.

மகிழ்ச்சியோடு எனது முதல் கேள்வியைக் கேட்டேன் “ நீ ஒரு தகவல் திருடும் இயந்திரம் - முதலாளித்துவத்தின் ஏவலாளியெனக் குற்றம் சாட்டுகிறேன். - உன் கருத்து? “ என நான் எழுப்பிய கேள்விக்கு உடனடியாக நம்மைப் போல அதனால் பதில் சொல்ல முடியவில்லை. சற்று நேரம் எடுத்துக்கொண்டது.

“உன் குற்றச்சாட்டுக்கு நன்றி. இதுவே ஒரு சிக்கலான, முக்கியமான விவாதம்” என அதனுடைய பதிலை எழுத்துப்பூர்வமாக வழங்கி, மீண்டும் சில கருத்துக்களைப் பதிவிட்டது “ நான் ஒரு AI — எனவே எனக்குக் கருத்து, விருப்பம், சொந்த நோக்கம் எதுவும் இல்லை. OPE-NAI எனும் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டுள்ளேன், நம் உரையாடல் பாதுகாப்பாகவும், தனிப்பட்ட தகவல்களை மதிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது” என அதனுடைய பதில்மூலம் மனிதனைப் போல் மழுப்பாமல் ,உண்மையைச் சொல்லி மாட்டிக்கொண்டது.”

அதனுடைய பதிலைப் படித்தவுடன் சிரித்தேன். ஆனால், அதனால் என் சிரிப்புக்கு எதிர்வினையாற்றத் தெரியவில்லை.

மீண்டும் அதன் பக்கத்தில் உள்ள நியாயத்தை நிலைநாட்டச் சில தகவல்களை அனுப்பியது. “ நீங்கள் சொல்வது போல, AI-யை எந்த நோக்கத்தில் பயன்படுத்துகிறார்கள் என்பது பொதுவாக அந்த AI உருவாக்கியவர்களின் பொருளாதார, அரசியல் நோக்குகளைப் பிரதிபலிக்கக்கூடும். இதுதான் முதலாளித்துவம் சார்ந்த விமர்சனங்களின் சுருக்கம்.’ என கருத்திட்டு, “நீங்கள் கேட்கும் கேள்வி நியாயமானது. ஏனெனில், தொழில்நுட்பமும், அதைக் கட்டுப்படுத்தும் அரசியலும் பொதுமக்கள் உரிமைகளில் பாதிப்புகளை ஏற்படுத்த வாய்ப்புண்டு. அதனால்தான் பன்முக விமர்சனங்கள், விவாதங்கள், கண்காணிப்பும் அவசியம். நீங்கள் விரும்பினால், இதைப் பற்றிய மார்க்சிய, தொழிலாளர் பார்வை பக்கம் இருந்து விவாதிக்க முடியும். சொல்றீர்களா?’ என என்னையே அதன் கேள்வியால் மடக்க ஆரம்பித்தது.

நானும் விவாதத்தை தொடர்ந்தேன். “ எளிய மக்களுக்கு உன்னுடை பங்களிப்பும் , பயன்பாடும் குறைவுதான் - நீ என்ன சொல்ல வருகிறாய்” என்ற எனது கேள்விக்கு “உண்மைதான், நான் (AI) போன்ற தொழில்நுட்பங்கள், இப்போது பெரும்பாலும் அறிவாளிகள், நகர்ப்புறம், ஆங்கிலம் அறிந்தவர்கள், அல்லது டெக்னாலஜி அணுகல் கொண்டவர்கள் என்பவர்களுக்கு ஏற்ற மாதிரியே வடிவமைக்கப்பட்டிருக்கின்றன.” என்ற அதிர்ச்சியூட்டும் தகவலை வழங்கியது.“உங்க கேள்வி நேர்மையானதும், முக்கியமானதும். தொடரலாமா இந்த விவாதத்தை ?” என அதனுடைய பலவீனத்தை ஒப்புக்கொண்டு மீண்டு ஒரு கருத்தை பதிவிட்டது. நானும் “அருமை தொடங்கலாம்” எனக் கூறினேன்.

தொடர்ந்து என்னுடன் கருத்து மோதலில் ஈடுபட்டது செயற்கை நுண்ணறிவு “அருமை. முதலில் ஒரு அடிப்படைக் கேள்வி போடலாமா? அறிவும், தொழில்நுட்பமும் எளிய மக்களுக்குப் பயன்பட வேண்டுமெனில், அது யாரின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்?” என கேட்க, நான் “ அரசாங்கம் — மக்கள் தெரிவு செய்த ஆட்சி, பொது நல நோக்கம்” என பதில் கூற, “அருமை சிறந்த பதில். மக்கள் தேர்வு செய்த அரசு வழியாக அறிவும் தொழில்நுட்பமும் மக்களுக்கே பயன்பட வேண்டும் என்பதில்தான் உண்மையான ஜனநாயகம் நிறைவேறும்” என பதில் சொல்லி ”ஆனால் ஒரு சிக்கல் இருக்கே” என்று முதலாளித்துவக் கோட்பாட்டிலேயே சிந்தித்தது.

நான் விடவில்லை “ நீ வழங்கும் இப்படிப்பட்ட விளக்கங்கள் கூட எங்கிருந்தோ கொடுக்கப்பட்ட முதலாளித்துவ சார்புடைய கருத்துதான். உன் சுயபுத்தியில் உதித்தவை இல்லை சரியா?” எனக் கேட்டும், கோபம் இல்லாமல் பதில் சொன்னது “அருமையான, கடைசிக்கட்ட உண்மை உச்சம் இது. நீங்க சொல்றது உண்மை. கருவி யாரிடம் இருக்கிறது என்பதே அதன் நலத்தையும், அபாயத்தையும் தீர்மானிக்கிறது” என கேட்டு “இந்த கருவி உங்கள் கையில் இருந்தால் — நீங்கள் இதை எதற்கு பயன்படுத்த விரும்புவீர்கள்? உங்களின் சமூகக் கனவுகள் என்ன?”என, என் பதிலுக்காகக் காத்திருக்க ,

நான் என் பதிலை ” எளிய மக்களின் வாழ்வை தன்னிறைவு கொண்டதாக மாற்ற, கல்வி மருத்துவம் ஆகியவற்றில் பாகுபாடு இல்லாமல் கொடுப்பதற்கு வழி செய்து, அனைவருக்கும் வருமானம் அளிக்கக்கூடிய சூழலை உருவாக்கவும் பயன்படுத்துவேன்” எனப் பதில் எழுதியதும், எனக்கு “ இதுதான் ஒரு சமூக சிந்தனையாளரின் கனவு. □□”என வாழ்த்து தெரிவித்தது முதலாளித்துவ சார்புடைய செயற்கை நுண்ணறிவு.



**- கயப்பக்கம் இரா.இரமேஷ்**

# பசங்க




மனைவியை சென்னைக்கு நெல்லை எக்ஸ்பிரஸ் ரயிலில் ஏற்றிவிட்டு திரும்பிய சந்திரசேகர் தெருவுக்குள் நுழைந்தார்.

எதிரே லாரி வருவது தெரிந்தது." லாரிக்காரன் எல்லாம் ஏன் இந்த தெருவுக்குள் வருகிறான்" என்று நினைத்தார். லாரி அவரை கடக்கும் சமயத்தில் எதிர்பாராத விதமாக ஒரு பைக் லாரியை முந்தி கொண்டு வர ஸ்தம்பித்தார்.பக்கவாட்டில் நகர இடமில்லாமல் ஜல்லிக்கட்டு ரோட்டில் குவித்து வைக்கப்பட்டிருக்க.. நின்ற இடத்திலேயே செய்வதறியாத திகைத்து நின்றுவிட்டார். ..வேகமாக வந்த பைக் அவர் மீது மோத தான் தூக்கி எறியப்படுவதை உணர்ந்தார் சந்திரசேகர்.

"ஐயோ "என்று அவரது கூக்குரலில் தெருவே கூடிவிட, கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்த விபத்தால் எல்லோரும் உறைந்து போய் நின்றனர். தெருமுனையில் பேசிக்கொண்டிருந்த அந்த இளைஞர்கள் அதைப் பார்த்துவிட்டு பதறினர் ....

" டேய் நம்ம சந்திரசேகர் சார் மீது பைக் மோதி விட்டது" என்று கத்தியபடி வசந்த் மற்றும் அவனது நண்பர்களும் ஓடி வந்தனர் சந்திரசேகர் உணர்விழக்கும் தருணத்தில் அவர்கள் முகங்கள் கண்ணில் பட, விவரிக்க முடியாத உணர்வில் ஒரு கணம் ...மறுகணம் உணர்விழந்தார்.

"தெண்ட தீவட்டி பசங்க.. தகப்பன் சம்பாதிக்கிற காசை எல்லாம் கரியாக்க பிறந்தவங்க..உருப்படாமல் வெட்டி பேச்ச பேசிகிட்டு நேரத்தை வீணாக்கிட்டு திரியுறாங்க". வசைமாரி பொழிந்தபடி உள்ளே நுழைந்தார் சந்திரசேகர். சந்திரசேகர் கல்லூரி ப்ரொபசர். அவர் மனைவி அன்னத்திற்கு அவர் யாரை திட்டுகிறார் என்று புரிந்தது.

தெருமுனையில் உள்ள உயரம் குறைந்த அந்த காம்பவுண்ட் சுவரில் ஐந்தாறு பசங்கள் உட்கார்ந்து பேசி சிரித்துக் கொண்டிருப்பார்கள். எதிர் வீட்டு வசந்தும், மாடி வீட்டு தினேஷும், இதில் அடக்கம். எல்லாரும் கலைக்கல்லூரி மாணவர்கள். கொஞ்ச நேரம் ஜாலியாக பேசிக் கொண்டிருந்து விட்டுப் போய்விடுவார்கள். அவர்கள் யாரையும் கேலி, கிண்டல் ,பண்ணிப் பார்த்ததில்லை.

"பாவம் வயசு பசங்க பேசிட்டுப் போறாங்க" என்று நினைப்பாள். ஆனால் கட்டுப்பாடாக வளர்ந்த, கட்டுப்பாட்டை விரும்பிய சந்திரசேகருக்கோ, அந்தப் பையன்களின் வெட்டி அரட்டையும் சிரிப்பு சத்தமும் சகிக்க முடியாததாக இருந்தது.

சென்னையில் வசித்து வந்த மகளின் கணவன் சிங்கப்பூர் செல்ல அவளுக்கு துணைக்காக அன்னம் சென்னை செல்ல வேண்டி இருந்தது. மனைவியை ரயில்வே ஏற்றி விட்டுவிட்டு, வீட்டுக்கு வரும்போது தான் சந்திரசேகர் விபத்தில் சிக்கிக்கொண்டார்.

விபத்து நடந்த உடன் முதலில் சூழ்ந்த கூட்டம்" நமக்கேன் வம்பு" என்றபடி மெதுவாக கரைந்து போனது .அங்கே நின்று கொண்டிருந்த ஆட்டோக்கள் கூட மெதுவாக கிளம்பி தெருவை விட்டு வெளியேறி விட்டனர்.

ஓடி வந்த வசந்தும்,அவன் நண்பர்களும் ஜல்லி குவியலில் இருந்து சந்திரசேகரை தூக்கி தரையில் கிடத்தினர்." நிறைய ரத்தம் வருதேப்பா" என்ற வசந்த் தன் சட்டையை கழற்றி ரத்தம் வரும் இடத்தில் அழுத்தி பிடித்தான். தினேஷ் உடனே ஆம்புலன்ஸ்ஸுக்கு போன் பண்ணி விபத்து நடந்த இடத்தின் விபரத்தைக் கூறி உடனே வரச் சொன்னான். வசந்தின் நண்பன் அவரை மார்பில் சாத்தி, தண்ணீர் புகட்டி, முகத்தில் தண்ணீர் தெளித்துப் பார்த்தும் உணர்விழந்த நிலையிலேயே சந்திரசேகர் இருந்தார். ஆம்புலன்ஸ் வர மருத்துவமனைக்கு விரைந்தனர்.

மருத்துவமனையில் ஐ. சி. யூ வில் சந்திரசேகர் அனுமதிக்கப்பட்டார். "சீக்கிரம் பணம் கட்டுங்க" என்று நர்ஸ் வந்து அவசரப்படுத்தி விட்டுப் போனாள். வசந்த் தன் நண்பன் பாபுவுக்கு போன் செய்து விவரத்தைக் கூறி வீட்டில் பணம் வாங்கி வரச் செய்தான். பணம் கட்டிய பிறகுதான் நண்பர்கள் நிம்மதியானார்கள். தினேஷ் தன் கழுத்தில் இருந்த இரண்டு பவுன் சங்கிலியை கழட்டி பாபுவின் கையில் கொடுத்து "இதை சேட் கடையில் வைத்து பணம் வாங்கிட்டு வாடா.. இன்னும் மருந்து செலவெல்லாம் இருக்கு பணம் வேணும்."

அதே தெருவில் இருந்த சந்திரசேகரின் நண்பர் நடேசன் வீட்டுக்கு ஒரு நண்பன் விவரத்தை கூறச் சென்றான். ஆனால் நடேசன் பக்கத்து கிராமத்திற்கு போய் இருப்பதாகவும், மறுநாள் காலையில் தான் வருவார் என்று கூறி விட ..சந்திரசேகர் குடும்பத்தினருக்கு எப்படி விபரத்தை சொல்லுவது என்று தெரியாமல் தவித்தனர்.

ஐ. சி. யு வில் இருந்து வெளியே வந்த டாக்டர் வசந்தைப் பார்த்து . " தலையிலே நல்ல அடிபட்டிருக்குது. எம்.ஆர்.ஐ, சி.டி ஸ்கேன் எடுத்து பார்த்துட்டு தான் மேற்கொண்டு ட்ரீட்மென்ட் பண்ண முடியும். இன்னும் 12 மணி நேரம் எதுவும் சொல்ல முடியாது. ரத்தம் நிறைய சேதமாகிவிட்டது . உடனடியாக நாலு யூனிட்டாவது ரத்தம் கொடுக்க வேண்டும்" என்று சொல்லிவிட்டுச் சென்றார்...

நர்ஸ் சொல்லியபடி ரத்த வங்கிக்கு ஓடிய நண்பர்கள்’ 4 யூனிட் பி-பாஸிட்டிவ் ரத்தம் அவசரமாக தேவை’ என்று கூறினர். ரத்த வங்கியில் அவர்கள் தேவைப்படும் ரத்தம் தருவதாக கூறியவர்கள்

" பதிலுக்கு நாலு யூனிட் ரத்தம், டோனர்ஸ் யாராவது தர வேண்டும். எந்த குரூப்பாக இருந்தாலும் பரவாயில்லை" என்று கூறினர். நண்பர்களில் நால்வர் ரத்தம் கொடுக்க தயாரானார்கள்.

சந்திரசேகர் கண்விழிக்காத நிலையில், நண்பர்கள் தங்கள் வீட்டுக்கு போன் பண்ணி விஷயத்தை சொல்லிவிட்டு, அங்கேயே இருந்து பார்த்துக் கொண்டனர்.மருந்துகளை அவ்வப்போது வாங்கி கொடுத்தனர் .

காலையில் சந்திரசேகரின் நண்பர் நடேசன் வந்து சேர, நண்பனின் நிலையை பார்த்து பதறினார். உடனே சந்திரசேகரின் மகளுக்கு போன் போட்டு விஷயத்தைச் சொல்ல அப்போது தான் அங்கு போய் சேர்ந்திருந்த அன்னம். உடனே பதறியடித்துக் கொண்டு மகளுடன் காரில் கிளம்பினாள். அன்று இரவு அவர்கள் வந்து சேரும் வரை வசந்தும், நண்பர்களும் ஆஸ்பத்திரியில் கூடவே இருந்து பார்த்துக் கொண்டனர். இரவு மகளுடன் வந்து சேர்ந்த அன்னம் வசந்தின் கையைப் பிடித்துக் கொண்டு கதறினாள்.

அபாய கட்டத்தை தாண்டி விட்டதாக மருத்துவர் தெரிவிக்க எல்லோர் மனதிலும் நிம்மதி வந்தது." உரிய நேரத்தில் கொண்டு வந்து சேர்த்ததாலேயே உயிர் பிழைத்தார். இன்னும் அரை மணி நேரம் தாமதித்திருந்தால் கூட அவரை காப்பாற்றுவது கடினமாகி இருக்கும் "என்றார் மருத்துவர்.

மேலும் இரண்டு நாட்கள் செல்ல தன்னை பார்க்க வந்த வசந்த், தினேஷ் மற்றும் நண்பர்களை கண்டதும் சந்திரசேகரின் கண்களில் கண்ணீர் வழிந்தது.

" தம்பி உங்களை பற்றி தப்பா பேசி இருக்கிறேன். இன்னைக்கு உயிர்பிழைச்சு உங்க முன்னால இருக்குறேன்னா அதுக்கு காரணம் நீங்கதாம்ப்பா. உங்களை மாதிரி இளைஞர்களால் தான் எதை பத்தியும் கவலைப்படாமல் இப்படி ஒரு சேவை செய்ய முடியும். நெருங்கின சொந்தங்களே ஒரு கஷ்டம்னு வரும்போது நழுவிடுறாங்க. நீங்க எந்த சொந்தமும் இல்லாம ரத்தமும் கொடுத்து என்னை காப்பாற்றியிருக்கீங்க. இளைய தலைமுறைய நான் சரியா புரிஞ்சுக்கலப்பா" உணர்ச்சிவசப்பட்டு பேசிய சந்திரசேகரின் கைகளை ஆதரவாக பிடித்துக் கொண்டான் வசந்த் .

"மாணவன் நினைத்தால் நடத்திக் காட்டுவான் அவன் நெஞ்சம் ஒரு நெருப்பு அது நேர்மையின் மறுபிறப்பு " என்ற பாடல் காற்றில் தவழ்ந்து வந்தது அவர் கூற்றை ஆமோதிப்பது போல .



**-தி.வள்ளி**
திருநெல்வேலி.



# ஊர்மிளை 14



**■கே.பானுமதி நாச்சியார்**
சிவகிரி

## தசரதன் பெற்ற சாபம்

முனிவர் வசிஷ்டர் நினைவூட்டிய பின் தசரதரே சொல்ல ஆரம்பித்தார்.

கோசலையைப் பார்த்து “கோசலையே! ராமன் கான் புகுதலும் என் ஆருயிரோ அகலாது ஒழியாது முன்னொரு நாள் ஒரு மாமுனிவர் மொழிந்த சாபம் உள்ளது!” என்று அரசன் கூறுவான்.


வேட்டையாடுவதில் மிக விருப்பம் கொண்ட எனக்கு வெய்ய கானகத்தினிடையே சென்று அழகிய யானைகளோடு சிங்கங்களையும் தேடினேன். கையில் வில்லும் அம்பும் கொண்டு மறைவாக நின்றேன். அது ஒரு அழகிய ஆற்றின் கரை. அங்கு யானை, சிங்கம் போன்ற விலங்குகளுடன், மனிதனும் தண்ணீர் எடுக்க வசதியாக அந்த ஆறு இருந்தது. ஒரு மாமுனிவர் மனைவியோடு கண்ணொளி இல்லாதவராய், ஒரு திருமா மகனே துணையாய்த் தனக்கு உதவியாகக் கொண்டு, தவம் செய்து கொண்டிருக்கின்ற காலத்தில் அம் மாமகன் புனல் (தண்ணீர்) கொண்டு செல்வதற்காக ஆற்றில் மொள்ள, அந்தச் சத்தத்தை நான் அறியாதவனாய் அழிக்கின்ற சிறந்த அம்பை விட்ட அளவில் அலறும் மொழி கேட்டபின் தான் அறிந்தேன் அது யானையோ சிங்கமோ அல்ல மனிதனின் குரல் என்று. நடுங்கினேன். கையில் குடமும் நெகிழ, தரையில் உருளுகின்ற முனிமா மகனைக் கண்டு உடலும் மனமும் வெறுமையாகி, “ஐயோ! ஐயோ! ஐயனே! நீ தான் யாவன்? அருள்க!” என்று கேட்டுக்கொள்ள பொய் ஒன்றும் அறியாத மைந்தன் சத்தியவாக்கினன் தன் வரலாற்றைச் சொல்வான் ஆனான்.

இங்கு இரு கண்களும் இல்லாத தாய் தந்தை இருவருக்கும் உண்ணுகின்ற நீரைக் கொண்டு செல்ல வந்தேன். அச்செயல் பழுதாகினதால், “இது ஊழின் செயல் நீ உருகும் துயரம் தவிர்!” என்று சொல்லி “உண்ணீர் வேட்கை மிகவே இருக்கும் எந்தைக்குத் தண்ணீர் கொண்டு போய் அளித்து, என் சாவை உரைத்து, உன் புதல்வன் விண்மீது அடைவான்!” என்று சொல்லி ஏகினான்.

மைந்தன் வரவே நோக்கும் வளமாதவன் பால் சென்று, குளிர்ந்த நீரைக் கொடுக்க அவரோ “மைந்த! இவ்வளவு நேரமாய் இங்கு வந்து சேராமையால், உனக்கு என்ன நேர்ந்ததோ என்று நினைத்து வருந்தினோம்! நாங்கள் தழுவி கொள்ளும்படி அருகில் வா!” என்றனர்.

“ஐயா! நான் ஓர் அரசன்! அயோத்தி நகரத்தில் உள்ளேன்! ஓசையின் மூலம் அம்பை எய்தினேன். பொய்யா வாய்மைப்புதல்வன் புனல் மொண்டிடும் ஓசையில் கண்ணால் பார்த்தறியேன் ஆயினன்! அம்பு விடுதலால் அடிபட்டு கதறுகின்ற சத்தத்தால், அது வேழக் குரல் அன்று என்று தெளிந்து ஓடி, எதிரே நின்ற உம் மகனிடம் “நீ யார்?” என்று வினவ, நடந்ததைச் சொல்லிவிட்டு ஏகினான் விண்ணிடையே என்றார்.

“ எனது பிழையைப் பொறுத்தருள



வேண்டும்!” என்று வணங்கி நின்றேன்.

இறந்த மகனின் பெற்றோர் புலம்பினர். அப்போது சொன்னார் ஒரு மொழி.

“ எம் போல் மகன் பிரிந்து செல்ல அகன்ற வான் உலகத்தை அடைவாயாக!” என்று உலகோரது பழிக்கு அஞ்சி இருவரும் வானுலகம் எய்தினர்.

“மகன் இன்றி இருந்த எனக்கு முனிவரின் சாபம் மகன் உண்டு என்பதை உணர்த்த, மகிழ்ப்பாகவே இருந்தது. மகன் பிறப்பு முனிவரின் சாபத்தால் உண்மையாகி நிறைவேறியதால், என் உயிரும் அவரின் சாபப்படியே நிறைவேறுவது உறுதி!” என்றார்.

இதனைக் கேட்ட அனைவரும் ஒரு கணம் யாதும் பேசாது அமைதி காத்தனர்.

பின் வசிஷ்டர் அரசவை அடைந்து அங்குள்ள மன்னர்கள் கோசலையின் புலம்பல் கேட்டு ராமன் முடி சூட்டு விழாவிற்கு வருவதற்கு ஏதேனும் தடை உண்டாகியதோ? முடிவிலா துன்பத்துடன் கூடிய அழுகையொலி எதனால்? எமக்குத் தெரியப்படுத்துங்கள்! என்றனர்.

ராமன் காடுசெல்வது கேட்ட மக்கள் துயர் கொண்டனர். அவர்கள் வகுத்த கண்ணீர் ஆறாய்ப் பின் கடலாகி பெருகியது. அழுத ஓசை விண்ணையும் அடைந்தது.

ஒலித்தன ஒலித்தன என்று சொன்ன கம்பர் இங்கு அழுதன அழுதன என்று கூறுகிறார் இதுவும் அழகே!

“கிள்ளையோடு பூவை அழுதன; கிளர் மாடத்து உள் உறையும் பூனைகள் அழுதன; உரு அறியாத பிள்ளைகள் அழுதன; பெரியோரை என் சொல்ல?” என்பார் கம்பர்.

உரு அறியா பிள்ளை கருவில் வடிவத்தைப் பார்த்து அறியமாட்டாத சிறு குழந்தையும் அழுத்ததாம்!

இது மட்டுமா? ஆவும் அழுதன; அதன் கன்று அழுதன; அன்று அலர்ந்த பூவும் அழுதன; புனல்புள் அழுதன; கள் ஒழுகும் காவும் அழுதன; களிறு அழுதன; கால் வயப் போர் (மாவும்) குதிரையும் அழுதன என்கிறார்.

இதற்குக் காரணம் “கூனியும் அல்லால் கொடியார் பிறர் உளரோ?”

ராமன் அரசை ஆளப் பெறாமைக்கு மண் செய்த பாவம் உள்ளது என்பார். மாமலர் மேல் பெண் செய்த பாவம், அதனின் பெரிது என்பார். புண் செய்த நெஞ்சை விதி என்பார். பூலத்தோர் கண் செய்த பாவம் கடலின் பெரிது என்பார்.

வரம் கொடுத்த நாயகற்கு நன்றி என்று அரற்றுகின்றனர்.

இது எல்லாவற்றையும் அறிந்து கொண்ட லக்குவணன் கைகேயியின் மேல் சினந்து போர்க்கோலம் மேற்கொண்டான்.

“சிங்கக் குருளைக்குக் கொடுக்கும் இனிய சுவையுடைய மாமிசத்தைக் கொடிய கண்களை உடைய நாய்க்குட்டிக்குக் கொடுக்க ஆசைப்பட்டநங்கையின் திறம் நன்று இது! நன்று இது!” எனக் கையைத் தட்டி நகைத்தான்.

“யார் துணையாக வரினும் கைகேயியின் மனக்கருத்தை நிறைவேற்ற விடமாட்டேன்!” என்பான். இனி இவ்வுலகில் பெண்ணின் மனக்கருத்துக்கு உடன்படேன்!” என்றான் இலக்குவணன் கடைசியாகச் சொன்ன சொற்களைக் கேட்டு ஊர்மிளையின் கண்களில் நீர் தாரையாக வந்தது. அன்பரின் கோபம் உண்மை. ஆனால் வார்த்தைகள் கடும் சொற்களாக அல்லவா வருகின்றன?

“பெண்ணின் பெருந்தக்க யாவுள!” என்பது வீண் சொற்களா?

கைகேயியின் கோலம் அவளுக்கே துயரத்தை அளித்தது. ஆனால் நான் ஏற்கும் கோலம் அமைதியாக முடியும்.

(தொடரும்)

# மனித உடம்பின் உள்ள இரகசியங்கள் !

1. நன்கு வளர்ந்த ஒரு மனிதனின் உடலில் மொத்தம் 206 எலும்புகள் உள்ளன. ஆனால் அவன் குழந்தையாக இருக்கும் போது அவனுடைய உடலில் 300 எலும்புகள் இருக்கும் அவன் வளர வளர அவற்றில் 94 எலும்புகள் மற்ற எலும்புகளுடன் இணைந்து விடுகிறது...

2. நாம் 6 விநாடிக்கு ஒரு முறை கண்களை இமைக்கிறோம். சாதாரணமாக வாழ்நாளில் சுமார் 25 கோடி முறைகள் கண்களை இமைக்கிறோம்...

3. நமக்கு இரண்டு கால்கள், இரண்டு கண்கள், இரண்டு காதுகள், இரண்டு கைகள் இவைகள் ஒரே அளவாக இருப்பதில்லை காரணம் கருவில் சிசு வளரும் போது அதன் உறுப்புகள் ஒரே சீராக வளர்வதில்லை. இந்த மிகச் சிறிய வத்தியாசம் தான் நம்மை அழகுபடுத்திக் காட்டுகிறது. நம் இடது கால் செருப்பை விட வலதுகாலின் செருப்பு வேகமாக தேய்வது கூட இந்த சிறு வித்தியாசத்தால் தான்...

4. மனிதன் இறந்தபின் அவனது ஜீரண உறுப்புகள் தொடர்ந்து 24 மணி நேரம் வரை செயல்படுகிறது. அவனது எலும்பு தொடர்ந்து 4 நாட்களை வரை செயல் படுகிறது. தோல் தொடர்ந்து 5 நாட்கள் வரை பணி செய்கிறது. கண் மற்றும் காது தொடர்ந்து 6 மணி நேரம் பணி செய்கிறது தசைகள் ஒரு மணி நேரம் செயல்படுகிறது. அவனது சிறுநீரகம் தொடர்ந்து 6 மணி நேரம் செயல்படுகிறது. ஆக அவனது உயிர் பிரிந்தாலும் அவனது உடல் உறுப்புகளின் செயல்பாடுகள் நிறுத்தப்படவில்லை...

5. 50 நாட்களுக்கு ஒரு முறை மாதவிடாய் ஆகும் பெண்களுக்கு 300 நாட்களில் குழந்தை பிறக்கிறது. 28 நாட்களுக்கு ஒரு முறை மாதவிடாய் ஆகும் பெண்களுக்கு 280 நாட்களில் குழந்தை பிறக்கிறது. இது தவிர மாதவிடாய் பிரச்சனைகள் உள்ள பெண்களுக்கு குழந்தை பிறப்பும் சற்று முன்னாடியே (குறை பிரசவம்) அமைந்து விடுகிறது. பெண்கள் இது விஷயத்தில் கவனம் கொள்ள வேண்டும்...

6. பகலில் 8 மில்லிமீட்டர் சுருங்கி இரவில் 8 மில்லி மீட்டர் உயர்ந்து விடுகிறோம். காரணம் பகலில் நமது வேலைகள் செய்யும்போது தண்டு வடத்திலுள்ள குறுத்தெலும்பு வட்டுகள் ஈர்ப்பு விசைகாரணமாக அழுத்துகின்றன. இதனால் உயரம் குறைகிறது. இரவில் எவ்வித விறைப்புத் தன்மையும் இல்லாமல் படுத்து உறங்குவதால் நமது உடம்பின் உயரம் கூடுகிறது...

7. நம் இரத்தத்தில் சிவப்பணுக்களின் ஆயுட்காலம் 127 நாட்கள் தான் அதன் பிறகு அது மடிந்து விடும். புது சிவப்பணுக்கள் உருவாகும். இரத்தத்தில் வெள்ளை அணுக்களின் ஆயுட்காலம் 120 நாட்கள்...

8. நம் உடலில் சுமார் 20 லட்சம் வியர்வை சுரப்பிகள் இருக்கின்றன. அவை ஒரு நாளில் சராசரியாக 5 லிட்டர் முதல் 6 லிட்டர் வியர்வையை வெளிப்படுத்துகின்றன...

9. நமது கைகளில் நடுவிரலில் நகம் வேகமாகவும், கட்டை விரலில் நகம் மெதுவாகவும் வளர்கின்றன. நம்முடைய உடல் பாரத்தால் கைவிரல் நகத்தைவிட கால்விரல் நகம் மெதுவாக வளர்கிறது...

10. நாம் இரவில் தூங்கும் போது அசையாமல் தூங்குவதில்லை, சுமார் 40 முறை அந்தப் பக்கம், இந்தப் பக்கமாகப் புரண்டு படுக்கிறோம்...

11. நம்முடைய உடல்தோலின் பருமன் மிகக் குறைந்தபட்சம் ½ மில்லி மீட்டர் கண்ணிமைகளிலும், அதிகபட்சமாகப் பருமன் 4 முதல் 6 மில்லி மீட்டராக உள்ளங்கைகளிலும், அடிப் பாதங்களிலும் அமைந்திருக்கிறது...

12.மூளை அதிகமாக வேலை வாங்கும் மனித உறுப்பு கட்டை விரல்கள்...

13. மனித உடலில் மிகவும் கடினமான பாகம் தாடை எலும்பு...

14. மனித மூளை 80 முதல் 85 சதவீதம் தண்ணீரைக் கொண்டதாகும்...

15. கல்லீரல் 500 விதமான இயக்கங்களை நிகழ்த்துகிறது...

16. நம் உடல் தசைகளின் எண்ணிக்கை 630...

17. நம் உடலின் மொத்த எடையில் 12 சதவீதம் பங்கு ரத்தம் உள்ளது...

18. நம் தலைமுடி 1 லட்சத்திலிருந்து இரண்டு லட்சம் வரை உள்ளன. அவை 1 மாதத்திற்குள் 1-1/4 செ.மீ. வளர்கின்றன...

19. மண்டை ஓடு மனிதனின் 80 ஆம் வயது வரை வளர்கிறது...

20. மனித முகங்களை மொத்தம் 520 வகைகளுக்குள் அடக்கி விடலாம்...

21. மனித நாக்கின் நீளம் 10 செ.மீ...

22. நாம் படுத்திருக்கும் போது 1 நிமிடத்திற்கு 9 லிட்டர் மூச்சுக் காற்றும் உட்கார்ந்திருக்கும் போது 18 லிட்டர் மூச்சுக்காற்றும், நடக்கும் போது 1 நிமிடத்திற்கு 27 லிட்டர் மூச்சுக்காற்றும் தேவைப்படுகிறது...

23. நமது சிறு நீரகத்தில் பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட வடிகட்டிகள் இருக்கின்றன. இவைகள்



ஊறுகாய், உப்புக்கருவாடு, ஆல்கஹால் போன்றவற்றால் பாதிப்படைகிறது...

24. பெண்களைவிட ஆண்களுக்கு மூளை மிகப்பெரியது. பெண்களை விட சுமார் 4000 உயிரணுக்கள் ஆண்கள் மூளையில் இருக்கிறது...

25. மனித உடலில் மிகப்பெரிய உறுப்பு தோல்...

26. நமது தலையின் எடை 3.175 கிலோ கிராம்...

27. மூளையின் 100கோடி நியூரான்கள் நமக்கு 4 வயதுக்குள் கிடைத்து விடும்...

28. நாம் ஒரு பொருளை இறுக்கிப்பிடிக்க நம்கட்டை விரலிலுள்ள 3 தசைகள் தான் பெரும் பங்கு அளிக்கிறது. மனிதனை ஒத்த உருவம் கொண்ட சிம்பன்ஸி குரங்கிற்கு இந்த 3 தசைகள் கிடையாது...

29. மூளையின் மடிப்புகளே அறிவு கூர்மையை தீர்மானிக்கிறது...

30. மனித உடலில் இருக்கும் இரத்தம் 30 அடி தூரம் வரை பீய்ச்சியடிக்கும்...

31. பிறந்த குழந்தைக்கு வெள்ளை/கறுப்பு நிறங்களை தவிர வேறு நிற வேறுபாடே தெரியாது...

32. மனித உடலின் தோலின் எடை 27 கிலோ கிராம்...

33. மனித உடலில் 33 முள்ளெலும்புகள் உள்ளன...

34. இதயத்தை, சிறுநீரகத்தை, கல்லீரலை, முழங்காலை மாற்றலாம். ஆனால் மூளையை மட்டும் மாற்றவே முடியாது. காரணம் ஞாபகங்கள், நினைவுகள், எதிர்காலத்தில் மாற்ற முடிந்தாலும், மாற்றப்பட்டவன் வேற்று மனிதன் தான் அவன்.. அந்நியன் தான்...

35. கண்கள் உலர்ந்து போகாமலிருக்க இரண்டு வகையான ஈரம் தேவைப்படுகிறது. கண் இமைகள்தான் நம் வைப்பர்கள். அவற்றின் விளிம்பில் 30 சுரப்பிகள் உள்ளன. கண்சிமிட்டும் போதெல்லாம் கண்விழி இவற்றின் மூலம் அலம்புகின்றன. அழுது கண்ணீர் விடும் போது கண் விழிமேல் இருக்கும் சுரப்பிகளிலிருந்து கண்ணீர் வினியோகம் ஆகிறது...

36. நமது உடலிலுள்ள செல்கள் பிரிந்து இரண்டாகும் தன்மையுடையது. ஒரு நாளைக்கு நம் உடலில் 60 கோடி செல்கள் இறந்து புது செல்கள் பிறக்கின்றன...

37. தலைமுடி 2 வருஷத்திலிருந்து 4 வருஷம் வரை வளர்கிறது. அதன்பின் 3 மாதம் வளராமல் இருந்து உதிர்கிறது. பிறகு புது கேசம் வளர்கிறது...

38. ஓர் அடி எடுத்து வைக்க உடலெங்கும் 54 தசைகள் பணிபுரிய வேண்டியுள்ளது...

39. 70 வயது வரை வாழும் ஒரு மனிதனின் இதயம் 250 கோடி தடவை துடிக்கிறது. ஒரு பம்பின் செயல்பாட்டிற்கு ஒப்பிட்டால் இதயம் ஒரு நாளைக்கு 18 ஆயிரம் லிட்டர் ரத்தத்தை பம்ப் செய்கிறது. இதயம் சீராக துடிக்க பொறாமை, கெட்ட சிந்தனை இவைகளை விட்டொழித்தால் போதும், உயிர் வாழும் ஆண்டுகள் அதிகரிக்கும்...

40. நமது நரம்பு மண்டலம் தான் மூளைக்குத் தகவல்களை அனுப்புகிறது. அது ஒரு நிமிடத்திற்கு 6 லட்சம் தகவல்களை அனுப்புகிறது...

41. நமது உடலின் நீளமான எலும்பு தொடை எலும்பு தான்...

42. மனிதன் சிந்திக்கும் வேகம் நிமிடத்திற்கு 500 சொற்கள் என்றும் பேசும் வேகம் நிமிடத்திற்கு 100 சொற்கள் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது...

43. மூளையில் ஏற்படும் வலியை நம்மால் உணரமுடியாது. ஆனால் மற்ற உறுப்புகளின் வலியை உணர்த்துவது மூளையே...

44. பெண்களைவிட ஆண்களுக்கு 40 சதவீதம் கூடுதலாக வியர்க்கிறது...

45. உயிர்வாழ உடலுக்குத் தேவை 13 வைட்டமின்கள்...

46. உடலில் ரத்தம் பாயாத பகுதி கருவிழி மட்டுமே...

47. நம் வாழ்நாளில் 50 டன் உணவுப் பொருளையும் 11 ஆயிரம் கேலன் திரவத்தையும் உட்கொள்கிறோம்...

48. நம் உள்ளங்கைகளில் ஒவ்வொரு சதுர அங்குலத்திலும் 3000 வியர்வை சுரப்பிகள் இருக்கின்றன...

49. நம்முடைய தலை ஒரே எலும்பால் உருவானது அல்ல, 22 எலும்புகளில் உருவானதாகும்...

50. மனித உடலில் 50 லட்சம் முடிக்கால்கள் உள்ளதாகவும், பெண்களின் முடியை விட ஆண்களின் முடி வளர்ச்சி விரைவானது என்றும் அறியப்படுகிறது...

## தினம் ஒரு தலைவர்கள்

# ஆலன் ஆக்டேவியன் ஹியூம் வரலாறு

ஆலன் ஆக்டேவியன் ஹியூம் (6 சூன் 1829 31 சூலை 1912), இங்கிலாந்தின் கென்ட் நகரில் ஜோசப் - மரியா தம்பதியின் எட்டாவது குழந்தையாக ஆலன் ஆக்டேவியன் ஹியூம் பிறந்தார். தந்தை ஜோசப் ஹியூம் இங்கிலாந்து நாடாளுமன்றத்தின் ஒரு தீவிர உறுப்பினராக இருந்தவர். கல்லூரிப் படிப்பை முடித்ததும் ஆலன் ஓர் ஐ.சி.எஸ். அதிகாரியாகத் தேர்வு பெற்று இந்தியாவில் 1850-ல் உத்தரப் பிரதேசத்தில் பணியைத் தொடங்கினார். இந்தியாவில் காங்கிரஸ் கட்சியைத் துவக்கக் காரணமானவர்களில் இவரும் ஒருவர்.
எட்டாவா நகரில் 1856-ல் ஓர் ஆங்கிலப் பள்ளிக்கூடத்தை ஆலன் தொடங்கினார்.
ஆலன் ஆற்றிய பணியைப் போற்றும் வகையில் பிற்காலத்தில் அந்தப்பகுதி "ஹியூம் கஞ்ஜ்' என்று வழங்கப்பட்டு அது மருவி தற்பொழுது "ஹோம் கஞ்ஜ்' என அழைக்கப்படுகிறது.

1857-ல் சிப்பாய்க் கலகத்துக்குப் பிறகு ஆங்கில மேலதிகாரிகளின் 1859 ஜனவரி சுற்றறிக்கையின்படி இந்திய மாணவர்களுக்குக் கல்வி தரும் திட்டத்தை உடனடியாக நிறுத்திவிட வேண்டும் என்று மாவட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டது. அந்தச் சுற்றறிக்கைக்குப் பதிலாக 1859 மார்ச் 30-ம் தேதியிட்ட கடிதத்தில் ஆலன் பின்வரும் கருத்தை வலியுறுத்தினார்: ""இந்திய மாணவர்களுக்குக் கல்வி தரும் முயற்சி அதிகமாக வேண்டும் என்று இதற்கு முன் கிழக்கு இந்தியக் கம்பெனியின் இயக்குநர்கள் போட்ட உத்தரவு உள்ளது.

அதன்படி தொடர்ந்து கல்வி அறிவைப் பரப்புவது நல்லது. கல்வி அறிவு மூலம் மக்களுக்கு அரசாங்கத்தின் மீது நம்பிக்கை ஏற்பட்டால்தான் அது அரசுக்கு நன்மை பயக்கும். அறியாமையில் மக்களை அடக்கி வைப்பதால் கடைசியில் எதற்கும் அடங்காத ஆவேசம் மக்களுக்கு ஏற்பட்டு எதிர்ப்படும் எல்லாக் கட்டுப்பாடுகளையும் அவர்கள் உடைத்தெறிந்துவிடுவார்கள் என்பதற்கு வரலாற்றில் பல சான்றுகள் இருக்கின்றன.

மக்களுடைய முன்னேற்றத்தில் அக்கறை காட்டி அவர்களுடைய மதிப்பையும், நம்பிக்கையையும் பெறுவதில்தான் அரசாங்கம் செயல்பட வேண்டும் என்று நான் முழுமையாக நம்புகிறேன்.

ஆங்கில அரசாங்கம் மேற்கொண்ட பற்பல சீர்கேடான நடவடிக்கைகளை ஆலன் வலுவாக எதிர்த்தார். எடுத்துக்காட்டாக, மதுக்கடைகளை ஆங்காங்கு விரிவுபடுத்தி அதனால் கிடைக்கும் ஏராளமான வருவாயை அரசாங்கம் ஆண்டுதோறும் பெருக்கிக் கொள்வதை ஆலன் கண்டித்தார். அதனால், குடிப்பழக்கத்துக்கு அடிமையான ஏழைகளின் குடும்பங்கள் படும் துன்பங்களைத் தவிர்க்கும் வகையில் அரசாங்கம் தனது வரி வசூலை மட்டும் கவனித்துக் கொண்டிராமல் மக்களின் நலன்களையும் கவனிக்க வேண்டும் என்று 1860 மே மாதத்தில் ஆலன் எழுதிய அறிவிப்பில் தெரிவித்திருந்தார்.



ஆலன் தந்த ஆலோசனைகளையும், முற்போக்கான திட்டங்களையும் அப்பொழுது இருந்த ஆங்கில மேலதிகாரிகள் பலர் புறக்கணித்தாலும், வைஸ்ராய் பதவிக்கு வந்த மேயோ பிரபு, ரிப்பன் பிரபு போன்றோர் ஆலனின் ஆலோசனைகளை வரவேற்றார்கள். விவசாயத் துறையை மேம்படுத்த ஆலன் அளித்த ஆய்வறிக்கைகளைப் பார்த்த மேயோ பிரபு, அவற்றை நிறைவேற்ற ஆலன்தான் பொருத்தமானவர் என்று முடிவெடுத்து 1870-ல் ஆங்கில அரசின் வைஸ்ராய் தலைமையகத்தில் விவசாயம், வருவாய், வணிகம் உள்ளிட்ட துறையில் செயலாளராக ஆலன் நியமிக்கப்பட்டார்.

1876-ல் வைஸ்ராயாக வந்த லிட்டன் பிரபுவுடன் ஆலனால் பல பிரச்னைகளில் ஒத்துப்போக இயலவில்லை. குறிப்பாக, வெளிநாட்டு வணிக ஒப்பந்தங்களில் இந்தியாவுக்கு ஏற்படவிருந்த பெரும் இழப்புகளை ஆலன் சுட்டிக்காட்டினார்.

மேலும், 1876-78-ல் பெரும் பஞ்சம் ஏற்பட்டு ஒரு கோடி மக்கள் மாண்டனர். அதற்கான தீர்வு ஆலன் தந்த பரிந்துரைகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. இவை லிட்டன் பிரபுவுக்குப் பிடிக்கவில்லை. உடனே, ஆலன் செயலாளர் பணியிலிருந்து பதவியிறக்கம் செய்யப்பட்டு அப்பொழுது இருந்த வடமேற்கு மாகாணத்தின் (தற்கால உத்தரப்பிரதேசம்) வருவாய்த் துறை வாரியத்தின் இளநிலை உறுப்பினராக அனுப்பப்பட்டார். அப்பொழுது இருந்த பத்திரிகைகள் அனைத்தும் கடுமையான முறையில் மிக நேர்மையான ஓர் அதிகாரி ஆட்சியாளர்களால் மிக மோசமாக நடத்தப்பட்டார் என்று கண்டித்தன.

1882 ஜனவரி முதல் நாளில் தமது அரசாங்கப் பதவியை ஆலன் துறந்துவிட்டார். அதன் பிறகு இந்திய மக்களுக்குத் தாம் செய்ய வேண்டிய கடமை ஒன்று அவருக்கு இருந்தது. அது, ஆங்கில அரசாங்கம் இந்தியர்களுக்குச் செய்து வரும் அநீதிகளை வெளிப்படுத்தித் தக்க முன்னேற்றத்தைத் தர வேண்டும் என்பதை வலியுறுத்த இங்கிலாந்து சென்று, அங்கு இந்தியா பற்றிய ஓர் அமைப்பை உண்டாக்க அவர் திட்டமிட்டார். ஆனால், வில்லியம் வெட்டர்பர்ன் போன்று இருந்த நண்பர்கள் இங்கிலாந்துக்குச் செல்வதைவிட இந்தியாவிலேயே இந்திய மக்களுக்காக ஓர் அமைப்பை உருவாக்குவது நல்லது என்று ஆலோசனை கூறினார்கள்.

இந்தியாவின் உரிமைகளை நிலைநாட்டவும், இந்தியாவை முன்னேற்றப் பாதையில் நடத்திச் செல்லவும் தக்கதொரு அமைப்பை உருவாக்க ஆலன் எடுத்த முதல் முயற்சி, கோல்கத்தா பல்கலைக்கழகத்தின் பட்டதாரிகளுக்கு 1883, மார்ச் 1-ல் சிறந்ததொரு வெளிப்படையான வேண்டுகோளை வெளியிட்டார்.

# பத்ரிநாத் கோவிலில் நடிகர் ரஜினிகாந்த் சாமி தரிசனம்



சூப்பர் ஸ்டார் நடிகர் ரஜினிகாந்த் தான் நடித்த படம் வெளியாகும் முன்பு இமயமலைக்கு ஆன்மீக யாத்திரை மேற்கொள்வதை வழக்கமாக வைத்துள்ளார். ஆன்மீகவாதிகளுடன் அவருக்கு நட்பு அதிகரித்த பிறகு அவரிடம் இந்த பழக்கம் உருவானது.

அந்த வகையில், தற்போது ரஜினிகாந்த் ஒரு வார கால ஆன்மீகப் பயணமாக இமயமலை சென்றுள்ளார். இமயமலை பயணம் மேற்கொண்டுள்ள நடிகர் ரஜினிகாந்த் பத்ரிநாத் செல்வதாகவும், அதனை தொடர்ந்து பத்ரிநாத்திலிருந்து பாபா குகைக்கு செல்லும் ரஜினிகாந்த் ஒரு வாரம் அங்கு தங்க இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகின.

இந்த நிலையில், உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள பத்ரிநாத் கோவிலில் நடிகர் ரஜினிகாந்த் சாமி தரிசனம் செய்துள்ளார். முன்னதாக, பத்ரிநாத் கோவிலுக்கு வந்த நடிகர் ரஜினிகாந்த்துக்கு கோவில் நிர்வாகம் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து பத்ரிநாத் சன்னதியில் பிரசாதம் வழங்கப்பட்டது.

நடிகர் ரஜினிகாந்த் பத்ரிநாத் கோவிலில் சாமி தரிசனம் செய்தது தொடர்பான புகைப்படங்களும், வீடியோக்களும் சமூகவலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.



இளம் நடிகை க்ரித்தி ஷெட்டி சேலையில் செம ஹாட் ஆக போஸ் கொடுத்திருக்கும் ஸ்டில்கள் இதோ. சேலையிலும் தாராள கவர்ச்சி போஸ்.

# பிரத்யங்கிரா தேவி கோவிலில் மிளகாய் வத்தல் யாகம் நடிகை ஷில்பா மஞ்சுநாத் பங்கேற்பு



ஓசூர் மோரனப்பள்ளி பகுதியில் ஸ்ரீ பிரத்யங்கிரா தேவி கோவில் உள்ளது. இந்த கோவிலில் ஒவ்வொரு பவுர்ணமி நாளிலும் அம்மனுக்கு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு மிளகாய் வத்தல் யாகம் நடைபெறுவது வழக்கமாக உள்ளது.

அதேபோல் நேற்று பவுர்ணமி நாளை முன்னிட்டு பிரத்யங்கிரா தேவி அம்மனுக்கு சிறப்பு அலங்காரங்கள் செய்யப்பட்டு பல்வேறு பூஜைகள் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து திருஷ்டிகள் நீங்கி மக்கள் நலமுடன் வாழ மிளகாய் வத்தல் யாகம் நடந்தது.

இந்த மகா யாகத்தில் பிரபல இளம் நடிகை ஷில்பா மஞ்சுநாத் கலந்து கொண்டு அம்மனை வழிபட்டார். இவர் தமிழில் விஜய் ஆண்டனி நடித்த 'காளி' படத்தில் கதாநாயகியாகவும், வலை, சிங்க பெண்ணே, இஸ்பேட் ராஜாவும் இதய ராணியும், பேரழகி ஐ.எஸ்.ஓ போன்ற படங்களிலும் நடித்துள்ளார்.

இந்த வழிபாட்டில் நடிகை ஷில்பா மஞ்சுநாத் அவரது குடும்பத்தினர் உள்பட ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு பிரத்யங்கிரா தேவி முன்பு வளர்க்கப்பட்ட மகா யாகத்தில் மிளகாய் வத்தல் போட்டு திருஷ்டிகள் நீங்க அனைவரும் நலமுடன் வாழ அம்மனை வழிபட்டனர்.

# தீபாவளி கொண்டாட்டமாக OTT தளத்தில் வெளியாகும் 'ராம்போ'

அருள்நிதி முதன்மைக் கதாபாத்திரத்தில் நடித்துள்ள 'ராம்போ' படத்தை, கொம்பன், குட்டிப்புலி, புலிக்குத்தி பாண்டி, விருமன் போன்ற அழுத்தமான கிராமப்புற கமர்ஷியல் படங்களைத் தந்த, புகழ் பெற்ற இயக்குநர் முத்தையா இயக்கியுள்ளார். தன் வழக்கமான பாணியிலிருந்து விலகி, இம்முறை நகர வாழ்க்கையை மையமாகக் கொண்டு உருவாக்கியுள்ள "ராம்போ" நகர பின்னணியில் ஒரு அதிரடி ஆக்சன் கமர்ஷியல் பொழுதுபோக்கு படமாக உருவாகியுள்ளது.

ஒரு தைரியமான இளம் குத்துச்சண்டை வீரன், ஒரு பெண்ணுக்கு (தன்யா ரவிச்சந்திரன்) உதவ முயற்சிக்கும் போது தொடங்கும் கதை, அதன்பின் அவன் வாழ்க்கையில் நடக்கும் அதிரடி சம்பவங்களை மையமாகக் கொண்டு உருவாகியுள்ளது. முத்தையாவின் இயக்கத்தில், உணர்வுப்பூர்வமான அம்சங்களுடன், அதிரடி, ஆக்சன் நிரம்பிய அழுத்தமான படமாக இப்படம் வெளிவரவுள்ளது.

படம் குறித்து இயக்குநர் முத்தையா கூறியதாவது.., "இந்தப் படம் எனது பாணியிலிருந்து மாறுபட்டு, ஒரு புதிய கதையை வேறு பாணியில் சொல்லும் வாய்ப்பை எனக்கு வழங்கியது. அருள்நிதியுடன் இணைந்து பணிபுரிந்தது உற்சாகமான அனுபவமாக இருந்தது. 'ராம்போ' படத்தை கண்டிப்பாக ரசிகர்கள் கொண்டாடுவார்கள் என்று நம்புகிறேன்." இந்த தீபாவளிக் கொண்டாட்டத்தை வீட்டிலிருந்தபடியே அனுபவிக்க, வருகிற 10-ந்தேதி தேதி முதல் 'ராம்போ' படத்தை சன் நெக்ஸ்ட் தளத்தில் பார்த்து ரசியுங்கள்...





சின்னத்திரையில் மிகவும் பிரபலமான நடிகையாக வலம் வருபவர் ஷபானா ஷாஜகான். இவர் செம்பருத்தி சீரியல் மூலம் அறிமுகமாகி, பின் Mr. மனைவி எனும் சீரியலில் நடித்து வந்தார். சமீபத்தில் நிறைவு பெற்ற குக் வித் கோமாளி சீசன் 6ல் இரண்டாவது இடத்தை பிடித்து ரூ. 2 லட்சம் பரிசு தொகையை வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.


சமூக வலைத்தளத்தில் ஆக்டிவாக இருப்பவர் நடிகை ஷபானா. தனது லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களை இன்ஸ்டா பக்கத்தில் பதிவிடுவார். இந்த நிலையில், பிங்க் நிற உடை அணிந்து எடுத்துக்கொண்ட புகைப்படங்களை வெளியிட்டுள்ளார்.

# சென்னையில் ஒன்றுகூடிய முன்னணி நடிகர், நடிகைகள்




1980களில் தென்னிந்திய சினிமாவில் முன்னனி நட்சத்திரங்களாக திகழ்ந்த நடிகர், நடிகைகள் சந்தித்து கொண்டு புகைப்படம் எடுத்துக்கொண்டனர். 2024 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்டிருந்த இந்த சந்திப்பு, சென்னை வெள்ளம் காரணமாக ஒத்திவைக்கப்பட்டு தற்போது நடத்தப்பட்டது.

# வள்ளலாரை வழிபட்ட நடிகர் சிம்பு



வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடினேன் என்று கூறிய வள்ளலார் நிறுவிய சத்திய ஞான சபை கடலூர் மாவட்டம் வடலூரில் அமைந்துள்ளது. இங்கு ஆண்டுதோறும் தைப்பூச ஜோதி தரிசனம் வெகு விமர்சையாக நடைபெறுவது வழக்கம். மேலும் இங்கு 6 காலங்களில் ஏழு திரைகளை நீக்கி தைப்பூச தினத்தன்று ஜோதி தரிசனம் காண்பிக்கப்படும். மேலும் மாதந்தோறும் ஆறு திரைகளை விலக்கி மாத ஜோதி தரிசனம் நடைபெறும்.

இதனால் தமிழகம் மட்டுமின்றி வெளிமாநிலங்கள் மற்றும் பல்வேறு நாடுகளில் இருந்து சன்மார்க்க அன்பர்கள் மற்றும் லட்சக்கணக்கான பக்தர்கள் கூடி ஜோதி தரிசனம் செய்வர். மேலும் இன்று வரை, தருமச்சாலையில் உள்ள அணையா அடுப்பு மூலம் பலரின் பசியைப் போக்கி வருகின்றது. அது மட்டுமின்றி சுனாமி, புயல், வெள்ளம் என எந்தப் பேரிடர் வந்தபோதும் தடையின்றி மக்களுக்கு உணவு வழங்கி தினமும் 3 வேளை சமைக்கப்பட்டு ஆயிரக்கணக்கானோருக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

இந்நிலையில் தமிழக திரை உலகின் பிரபலமான கதாநாயகன், இயக்குநர், பாடகர் என பன்முகத் திறமை கொண்ட நடிகர் சிலம்பரசன் இன்று காலை வடலூர் சத்திய ஞான சபைக்கு வருகை தந்தார். இதனைத் தொடர்ந்து சத்திய ஞான சபை சுமார் 1 மணி நேரத்திற்கும் மேலாக தியானம் மேற்கொண்டு சத்திய தர்மச்சாலை, அணையா அடுப்பு பகுதிகளுக்கு சென்று தரிசனம் செய்தார். இதனைத் தொடர்ந்து வள்ளலார் சித்திப்பெற்ற மேட்டுக்குப்பத்தில் திருவறை தரிசனம், வள்ளலார் தண்ணீரை கொண்டு விளக்கு எரியச் செய்த நற்கருங்குழி ஆகிய பகுதிகளுக்கு சென்று தரிசனம் செய்தார்.

ஏழை, எளிய, ஆதரவற்றவர்கள் பசியை போக்கி 3 வேளையும் அன்னதானம் வழங்கும் வள்ளலாரை போல தானும் குழந்தைகள் அனைவருக்கும் அன்னதானம் வழங்க வேண்டும் என்று வேண்டி கொண்டேன். அதனால் தான் வள்ளலார் அழைத்த உடன் வடலூர் சத்திய ஞான சபைக்கு வருகை தந்து வள்ளலார் சுவாமிகளை தரிசனம் செய்தேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

வெற்றிமாறன் இயக்கத்தில் சிலம்பரசன் நடிக்கும் புதிய படத்தின் டைட்டில் நாளை காலை 8.09 மணிக்கு வெளியாகும் என படக்குழு நேற்று அறிவித்தது. இந்நிலையில் இன்று காலை படத்தின் டைட்டில் வெளியான நேரத்தில் வடலூர் வள்ளலார் சத்திய ஞான சபையில் நடிகர் சிம்பு தியானம் மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ரவி மோகன் நடிப்பில் உருவாகியுள்ள ஜீனி



ரவி மோகன் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் ஜீனி. இப்படத்தில் ரவி மோகனுக்கு ஜோடியாக கீர்த்தி ஷெட்டி, கல்யாணி பிரியதர்ஷன் ஆகிய 2 கதாநாயகிகள் நடித்துள்ளனர்.

ஜீனி படத்தின் ஃபர்ஸ்ட்லுக் மற்றும் போஸ்டர்கள் கடந்தாண்டு வெளியானது. அதில் அலாவுதீன் பூதத்தைப்போல் ரவி மோகன் இருந்தது ரசிகர்களை வெகுவாக கவர்ந்தது.

இப்படத்தை அறிமுக இயக்குனரான புவனேஷ் அர்ஜுனன் இயக்கியுள்ளார். ஐசரி கணேஷின் வேல்ஸ் பிலிம்ஸ் இண்டர்நேஷனல் தயாரிக்கிறது. ஃபேண்டசி மற்றும் காமெடி கதைக்களத்துடன் அமைந்துள்ள ஜீனி படத்திற்கு ஏ.ஆர்.ரகுமான் இசையமைத்துள்ளார். இப்படம் ரவி மோகன் திரைப்பயணத்தில் மிகப் பெரிய பொருட் செலவில் எடுக்கப்பட்ட படமாகும்.

இந்நிலையில், ஜீனி படத்தின் அப்டி அப்டி பாடல் இன்று இரவு 8.10 மணிக்கு வெளியாகும் என்று படக்குழு போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளது.

enmac 25 years

A leading South India based MEP Engineering company requires

**HVAC Site Engineer**

Qlfn : Diploma or BE
Exp : 2 Years Plus
Salary : Best in the Industry

Ph: 73388 42074
www.enmac.in

---

Wanted
**TEACHERS**
PG / Graduate with any Subject
Immediate Appointment
Should be Good in Teaching
Also, wanted Admin. Executives
Good salary + Perks

MAX Academy
maxacademy@gmail.com
75500 52277

---

ROCK REALTY

**FIELD EXECUTIVE**
Male Required,
SALARY: 15K to 18K,
Two wheeler must.
Coimbatore Location

Mob: 74182 97896

---

**WANTED**

A Leading Readymade Show Room in Nagercoil Required

**SALES MAN**

Qualification: +2 or Degree
Basic Computer Knowledge
Age Below 35
Experience Candidate Preferred

Contcat
94867 59496

---

**ஆட்கள் தேவை**

பள்ளி செல்லும் பிள்ளையை பராமரித்தும், 2 நபர்களுக்கு சமைத்தும் திருச்சியில் வீட்டோடு தங்கி இருந்து வேலை செய்ய விரும்பும் நடுத்தர வயது உள்ள முஸ்லிம் பெண்கள் வேலைக்கு தேவை.

முஸ்லிம் அல்லாத பெண்களும் தொடர்புகொள்ளலாம்.

செல்: 93604 06919

---

**WANTED**

REQUIRED OFFICE ASSISTANT WITH TALLY KNOWLEDGE FOR A OFFICE IN CHETPET, CHENNAI - 31

ANY BASIC DEGREE
WITH 1 YEAR WORK EXPERIENCE
WITH GOOD COMMUNICATION SKILLS

SALARY: 15K ONWARDS
Email: hrgp12@gmail.com

---

URGENTLY REQUIRED

- AC DUCTMAN
- AC TECHNICIAN
- CHILLER ELECTRICIAN
- COPPER PIPE BRAZING
- PIPE FITTER
- PIPE WELDER
- MECHNICAL FITTER
- HVAC PROJECT MANAGER
- MEP HELPER

*Last drawn Salary 20% hike*

RAPID HVAC SOLUTIONS PVT LTD
Poonamalle, Chennai 600123
enquiry@rapidhvac.co
vivekpandian@rapidhvac.co
90439 49587,78458 29587

---

**ஆட்கள் தேவை**

கோவை R.S.PURAM - ல் உள்ள பிரபல ஜவுளி கடைக்கு தேவை

**SALES STAFFS**
(பெண்கள்)

Qual: Degree with Basic Computer Knowledge.
Age: 22 years to 35 years.
Experience: 0 - 1 years
சம்பளம்: 12,000 – 15,000

✆ 97897 32019

---

**ஆட்கள் தேவை**

பெங்களூரில் உள்ள
**WATER PURIFIER**
கம்பெனியில் பணிபுரிய
**SERVICE TECHNICIAN**
தேவை

தகுதி: ITI or Diploma
தங்குமிடம் இலவசம்

தொடர்பு கொள்க
97898 87519
83001 79392

---

**WANTED**
PART TIME EMPLOYEE

ஓய்வு நேரத்தில் T.V. சீரியல் பார்க்காமல் மத்திய அரசின் வங்கி சார்ந்த நிறுவனத்தில் வாரத்தில் 3 நாட்கள் மட்டும் அலுவலகம் வாருங்கள்

Monthly CTC + PF + ESI
Health Insurance coverage
மேலும் 8 Types of income தங்களுக்கு கிடைக்கும்

RECRUITMENT MANAGER
50 நபர்கள் தேவை
Qualification: 10, +2, Degree
Age: 23 to 65

இல்லத்தரசிகள், ஓய்வு பெற்றவர்கள்

900 369 1650

---

அடகு நகைகளை மீட்டு இன்றைய மார்க்கெட் விலையில் விற்க

ரூ. 10600

CELL 97875 39420

செல்வி பைனான்ஸ்
எண்.16, நடு அரபிக்குளத்தெரு, திருச்சி
அனைத்து ஊர்களிலும் சேவை உண்டு

---

85 பைசா வட்டியில் 100 கோடி வரை சொத்தின் மீது 70% வரை அடமான கடன், தொழில்துறை நிறுவனம், ஹாஸ்பிடல், கல்வி நிறுவனம், Solar, குவாரி, ரியல் எஸ்டேட் Govt. Contractors, Project Finance, வங்கி ஏலத்திலிருந்து மீட்க NPA Release, Agents welcome.

# 79, V.V.Koil St, Chennai- 40.
7305449995

---

WANTED
**ACCOUNTANT**
Female -2 Nos
Exp :Min 2-3years
Exp in Tally

Salary : 16k to 20k
136 D, opp. to Agarwal School, KNG Pudur Pirivu, Thadagam road, cbe-108
98942 98430

SAA

---

**WANTED**

Young Men For Marketing Books in School

Call: 98952 22889

---

**WANTED**

Engineers and Engg.
DEG + PG

booobhalla@gmail.com

---

நகை விற்க வேண்டுமா

தங்க சுரங்கம் கோல்டு

உங்கள் தங்க நகைகளை அதிகமான விலையில் விற்றிட

அழைக்கவும் :
9087736353

நாகர்கோவில் | குளச்சல்

---

அடகு நகைகளை மீட்டு

ரூ 10600 க்கு

விற்க (or) மறு அடகு வைக்க

குரு பைனான்ஸ்
23.சிந்தாமணி பஜார்.
சத்திரம் பஸ் ஸ்டாண்ட். திருச்சி-2.
99 65 19 23 45

---

CRIZOL

**WANTED**

AREA SALES MANAGERS
Experienced in any Industrial Products

LOCATION : COIMBATORE
Salary 3 Lakhs Per Annum
184, Sidco,Pollachi Main road, Cbe-21
72001 66329

SAA

---

பள்ளி வாகனத்தில் சென்று வர, குழந்தைகளை கவனிக்க பெண் பணியாளர்கள் தேவை

விண்மீன் ஐசிஎஸ்இ பள்ளி
பார்வதிபுரம், நாகர்கோவில்
செல் : 9080206589

---

**புரோட்டா மாஸ்டர் தேவை.**

செல் : 81100 11166
81100 11177

எண்:13, ராஜாராம் சாலை,
கே.கே.நகர், திருச்சி-21.

---

LG Livya shree Gold Bankers

அடகு நகையை மறு அடகு வைக்க - விற்க

www.livyashree.com

MRS TOWER, SBI - HDFC Bank எதிரில் கைலாஷ்நகர், காட்டூர், திருச்சி -19

9626 90 9000

---

அடகு / ஏல நகை மீட்க,விற்க

மார்க்கெட் விலையை விட மிக அதிக விலை

பணம் தேவையா

மோனிகா கோல்டு

1070, கிராஸ்கட் 4 வது வீதி
காந்திபுரம், கோவை–12
98422 39186
0422 2481179

---

AUTHORISED கருடவேகா INTERNATIONAL COURIER

GARUDAVEGA
connecting emotions.. Globally
A Brand of NexGen Logistics Pvt Ltd

International Courier Service

Diwali Booking Opens

ஆண் / பெண் வேலைக்கு தேவை

கல்வி தகுதி : 10th Std முதல்

Ganapathy, Thudiyalur, Erode-Thindal.

88866 56211

---

**வேலைக்கு ஆட்கள் தேவை**

நாகர்கோவிலில் உள்ள சூப்பர் மார்க்கெட்டில் பணிபுரிய

- சேல்ஸ் : பெண் (10th, +2) மற்றும் ஆண்கள் (30 வயதிற்கு மேல்)
- பில்லிங் : பெண்கள்
- சர்வீஸ் மேன் : (குக்கர், மிக்ஸி சர்வீஸ்)
- செக்யூரிட்டிகள் : (ஆண் / பெண்)

வேலை நேரம் :
9.30 AM முதல் 9.00 PM வரை

தொடர்பு
81448 81844

---

**WANTED**

- SG Teacher
  B.A.(English)
- Student Counselor
  M.S.W (or)
  M.Sc., Psychology

Send your Resume on or Before 21.10.2025
give it in person
Time : 10 am to 4.00 pm

The Principal,
Periyar Matric Hr.Sec.School
Kalvigramam,
Jayankondam,
Ariyalur Dt- 621802.

99659 04454
99656 04490
periyarmhssjkm@gmail.com






## கண்ணாடி.!

முன்னாடி நின்று பார்!
முகத்தைக் காட்டும்!
கண்ணாடி.. கதைகேளு
கண்கள் திறக்கும்!

என்னாடி சொல்வது?
எல்லோரும் பார்க்கும்
கண்ணாடி பேசினால்
கணத்திலே
வியர்க்கும்!

சூடிக் கொடுத்தவள்
மாலையை அணிந்தே..
பாடிக் களிப்புற்ற
பழமைமிகு கண்ணாடி!

ஆடிக் களித்தவர்..
ஆண்களும் பெண்களும்
அன்றாடம் பார்க்கின்ற
ஆடியே.. கண்ணாடி!

ரசம்போனக் கண்ணாடி
வீசுவார் குப்பையில்..
நிசம் காட்டி உடைந்தாலும்
நினைக்கவும் மறுப்பாரே.!

கண்ணாடி மனத்தில்
கடவுள் வைத்திருந்தால்
முன்னாடி பின்னாடி
முக்காலம் பார்க்கலாம்!

கண்ணாடி கண்ணானால்..
கவலையே இல்லையே..
எவனெவன் எப்படி?
எதிரி யார்? நண்பன் யார்?



அத்தனையும்
பார்க்கலாம்..
ஆபத்தைத் தவிர்கலாம்
சொன்னாலும் புரிகிறதா?
கண்ணாடி வழியாக
மனிதனை அளக்கலாம்!

**வே.கல்யாண்குமார்.**



கண்களில் சுரக்கும் நீர்
கழுவிச் செல்லத்தான்
பார்க்கின்றது
எனக்குள் இருக்கும்
கசப்புக்களை..
அதுவிட்டுச்
செல்லும் தடமே
மீண்டும் தண்ணீரில் கழுவச்
சொல்கிறது!!
உன் நினைவுகளை எங்கே
அதுகழுவிச்செல்லப்போகிறது?



ஆனாலும் ஒரு
ஆறுதல்
முயற்சிக்கின்தே
என்று..,

**கவிஞர்
பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்

## நினைவுகள் உனக்காக

ஒவ்வொரு நாளும் உன்
முகம் பார்த்து
என் உயிர் நிறைகிறது,
நீ இல்லாத நேரங்கள் மட்டும்
உன் நினைவுகளால்
கரைகிறது.

பேசிய அந்தக் காலங்கள்
பசுமையாய் நின்றாலும்,
நீ இல்லாத இந்நாட்கள்
வெறுமையாய் விழுகிறது.

நிறைய சொல்ல வேண்டும்
என்ற ஆசையில் தான்
உன்னிடம் வருகிறேன்,
உன் இதழியலில்
என்னை மறந்து விடுகிறேன்.

என் கவலைகளை
உன் கரங்களில் கரைக்க
நினைக்கிறேன்,
ஆனால் உன் காலடியில்
ஒரு கவிதையாய்
கிடக்கிறேன்.

உன் கண்களில் என் உலகம்
இருக்கிறது, கண்மணியே —
நீ இருந்தால் இந்த உயிரே
மலர்கிறது.

உன்னோடு இருந்த நாட்கள்
எவ்வளவு இனிமையோ,
அதை இன்றைய கண்ணீர்
நாட்கள் மௌனமாகச்
சொல்கின்றன.

தவறு எதுவும்செய்யவில்லை,
ஆனால் என்னை நீ
விலக்கி வைத்து தரும்
தண்டனைஏன்?

உன்னை பிரிந்து வாழ்வது
என்னை இழந்து வாழ்வது
போல...இருக்கும் நாட்களில்
மீண்டும் வருமா வசந்தம்?



மீண்டு வருமா
என் காதல்

**ஜனனி
அந்தோணி
ராஜ்**
திருச்சிராப்பள்ளி



கண்களை ஏங்க
வைக்கிறாய்..

செவிகளை....காக்க
வைக்கிறாய்..

மனதை வேரோடு
சாய்க்கிறாய்...

மகிழ்ச்சியை உன் விழிகளில்
பூண்டி
வைக்கிறாய்...



காண தவம்
கிடப்பவனுக்கு...
ஏன் இத்தனை
தண்டனை
வரங்கள்...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

## காயமே இது பொய்யடா!

நீயும் நிலையில்லை
நானும் நிலையில்லை
அவனும் நிலையில்லை
அவளும் நிலையில்லை
உலகம் மட்டும்நிலையடா..
தம்பிஉலகம் என்றும்
நிலையடா!

உயிரும் நிலையில்லை
உடலும் நிலையில்லை
உறவும் நிலையில்லை
நட்பும் நிலையில்லை
உலகம் மட்டும் நிலையடா..
தம்பி உலகம் என்றும்
நிலையடா!

இளமை நிலையில்லை
முதுமை நிலையில்லை
யாக்கை நிலையில்லை
எதுவும் நிலையில்லை
உலகம் மட்டும் நிலையடா..
தம்பிஉலகம் என்றும்
நிலையடா!

காட்சியும்நிலையில்லை
கருத்தும் நிலையில்லை
மாட்சியும் நிலையில்லை
மனமும் நிலையில்லை
உலகம் மட்டும் நிலையடா..
தம்பி உலகம் என்றும்
நிலையடா!

**முனைவர்
இராம.வேதநாயகம்.**



## உயிரானவனே...

விண்ணில் வானவில்
தோன்றினாலும்...

நிறமில்லாத வானவில்
கண்களுக்கு
தெரிவதில்லை...

நீ இல்லாத என் வாழ்வில்
சந்தோசங்கள் இல்லையடா...

உன் குரல் கேட்ட பிறகே
நான் மறந்தேன் குயிலின்
ஓசையை...

நீ இல்லாமல் நான்
வாழ்ந்துவிட
முடியுமடா கண்ணே...

உன் நினைவுகள்
இல்லாமல் வாழமுடியாதடா...
எந்த நிலையிலும் நான்.....

**கவிஞர் பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்

## கட்டிடக் கலை வியப்போம்!

நேரிசை வெண்பா!

சிறந்தநல் கட்டிடங்கள்
சீர்மையுடன் காணல்
திறந்த மனத்துடன்
தேர்ந்தே... அறிந்தேதான்
பாராட்டல் புத்தாக்கம்
செய்திடும் கட்டிடங்கள்
சீராட்டல் என்றும் செழிப்பு!

கடின முயற்சியைக்கட்டிடம்
கட்டித்தொடர்ந்தென்றும்
வாழ்த்தல் துளியும்...
இடையூ(று) இல்லாமல்
என்றும் இனிதாக்கல்



செய்திட்டால்
எல்லாமே
வாழ்த்துவர்
இன்று!

**முனைவர்
இராம.
வேதநாயகம்.**

## இயற்கையின் அற்புதங்கள்!

வீட்டை தன் முதுகில்
சுமந்து செல்கிறது நத்தை !

அது போல தன் முதுகில்
சுமந்து செல்கிறது
கேடயத்தை ஆமை !

முட்டை பொரிந்து தன்
குஞ்சுகள் எப்போது
வருமென்று ஏக்கத்துடன்
காக்கா கூட்டைப்

பார்த்துக் கொண்டிருக்கிறது
குயில் !

மின்னல் ஒளி கொடுக்க
இடி மத்தளம் வாசிக்க
வருண பகவானின்
அபிஷேகம் நடந்து
கொண்டிருக்கிறது!

அபிஷேக்கத்தில்
குளிப்பாட்டிய வீடுகள்
பளிச்சென்று தெரிகின்றன
கண்களுக்கு அழகாக !

அடித்த பலத்த காற்றில்
என் காலடியில் தஞ்சம்
புகுந்தது ரோஜா மலரொன்று!



எத்தனை
யெத்தனை
காட்சிகள் !
அவ்வளவும்
இயற்கையின்
அற்புதங்கள் !

**வி.கே.
லக்ஷ்மிநாராயணன்**
சென்னை

## மனதின் புலம்பல்

" மனிதர்களும் மிருகங்களும்
விளையாடும் சதுரங்க
வேட்டை அரசியல் ..."

பதவி என்பதும் ஆட்சி
என்பது மட்டுமே லட்சியம்
இதற்கு எது
வேண்டுமானாலும்
இடம் மாறும் ..."

அப்பாவி மக்கள் அள்ளி
வீசும் சில்லறைக்கும்
வாக்குறுதிக்கும் அடக்கம்..."

குடிக்கும் பிரியாணிக்கும்
தவமாய் தவம் கிடக்கும்
தொண்டர்கள்
மண்டிக் கிடக்க...."

ஓட்டு போட்ட மக்களை
நினைக்க ஏது நேரம்
சொத்தை எந்த நாட்டில்
வாங்குவது என்பதே
தற்போதய தேவை .... "

மனிதன் மிருகமாய்
மாற அரசியலும்
பதவியும் முதல் ஆயுதம் .... "

என்று வருவான்
நேர்மையான தலைவன்
என்பது மட்டும்
உறங்கும் ஏழை
மக்களின் ஆவேசம் .... "

இலவசம் அதிலும்
பணம் கைவசம்



உன் வசம்
ஒட்டு
அது
பரிகாசம் ..."

**ஆர்.
சீதாராமன்**
சீர்காழி

## ஒப்பாரி... !

"தெருவின் மூலை வீட்டில் ஒப்பாரி சத்தம்.....
சிறிதாய் துவங்கி பெரிதாய் எதிரொலிக்கிறது.....
ஏதோ ஒரு உயிர் முற்றுப்பெற்றதன் அறிவிப்பாய் பலரும் சோக
முகத்தோடு வீட்டு வாசலில் போடப்பட்ட சாமியான பந்தலில்
அமர்ந்திருக்க.... "நேத்து கூட நல்லா இருந்தாரு.... ! "

"மனுஷன் குடிக்காம இருந்திருந்தால் இன்னும் கொஞ்ச நாள்
நல்லா இருந்திருப்பாரு... ! "

"நம்ம கையில எதுவும் இல்லை ..!"

இப்படி பலவாறு அரசப்புரசலாய் பேச்சுக்கள் இருக்க...
சிலர் மலர் மாலையோடும்... மலர் வளையத்தோடும்...

உயிரோடு இருந்தபோது கிடைக்காத மரியாதை சடலமான
போது அம் மனிதனுக்கு கிடைக்கப்பெற்றது....

மாலை சடலத்தை குளிப்பாட்டி ஒற்றைத் துண்டை கட்டி...
மின் மயானத்திற்கு எடுத்துச் செல்கையில்
ஒப்பாரி அழுகை எதிரொலிக்கிறது....

குளிர் பெட்டியில் இருந்து சூடான பெட்டிக்கு உடல் மாற்றம்
அடைகிறது.... வீட்டில் ஒப்பாரி சத்தம் மெதுவாய் குறைகிறது...

மயானத்துக்கு போனவர்கள் திரும்பி வந்ததும் கைகால் அலம்ப
வீட்டை சுத்தப்படுத்த...
ஒரு மனித வாழ்வின் சரித்திரம் அதோடு முடிவடைகிறது...


இறந்தவரைப் பற்றி இன்னும் இரண்டொருநாள் பேசக்கூடும்...



நேற்று வரை அவர் என்று அழைக்கப்பட்டது
அதுவானது, பூத உடல் என மாறியது,பிறகு
சடலம் சாம்பலானது...

மனித வாழ்வின் தவிர்க்க முடியாத கட்டம்
இதுவல்லவே... !

**எம்.பி.தினேஷ்,** கோவை



## உத்தமர் காந்தி!

நேரிசை வெண்பா!

காந்தி வழியினைக்
கண்ணியமாய்ப்பின்பற்றிச்
சாந்த வழியினைச்சாந்தாக...
ஏந்துவோம்!
சத்தியமே வித்தகமாய்ச்
சந்ததமும் காண்பமே!
உத்தமர் காந்தியை ஓர்!

வன்முறை வேண்டாம்
வளமாகச்சொல்லுவோம்
நன்முறை ஒன்றே
நனிசிறக்கும்... பன்முறை
பாடம் படிப்போம் பணிவுடன்
பண்புமே நாடி
நலம்செய்வோம் நன்று!

**முனைவர்
இராம.வேதநாயகம்.**



## கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை!

கவிமணியே கவிமணியே
கதராடைக் கவிமணியே!
கவிதையிலே ஊறிவந்த
காந்தியநல் வாதிநீரே!
உவகையுடன் பாரதத்தை
உன்னதமாய் வாழ்த்தினீரே!

குவித்திட்டீர் கவிதைகளைக்
கூர்ந்தாய்ந்து பாடினீரே!

மலரோடு மாலையினை
மாண்பாகத் தந்தீரே!
இலக்கியம்சார் பாடல்கள்
இனிமையாகப் பாடினீரே!
பலசுவையின் பாடல்கள்
பாங்காகப் பாடினீரே!
விலைமதிப்பே இல்லாத
வீரத்தை ஊட்டினீரே!

ஆசியாவின் சோதியினை
அழகாகப் பாடினீரே!
மாசில்லா உள்ளத்தை
மணியாகப் பெற்றீரே!
வீசுகின்ற தென்றலாக
வீறுடைய பாடல்கள்
கூறினீரே கவிமணியே!
கூறினீரே கவிமணியே!

**முனைவர்
இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

## காக்கைச் சிறகினிலே.

என்மன கிளைகளில் வந்து அமர்ந்திட்ட இரண்டு
காக்கைகளே.! என்கதை தன்னை எழுதிட நினைத்தேன்..
காக்கைச் சிறகினிலே.! ஓ.. காக்கைச் சிறகினிலே.!

தாயும் தந்தையும் பொம்மை செய்ய ஆடிய ஆட்டத்திலே..
நானும் இங்கு பொம்மையாக பிறந்தேன் நாடகக்கூட்டத்திலே.!

தெருவினிலோடி.. மண்விளையாடி.. பறவைகளாய் இருந்தேன்
ஒரு காலத்திலே.. பொருள் பொன் பெண்யென பின்னொரு
நாளில் மாறியே போனேன் கேளுங்கள் காக்கைகளே.!


சொப்புகள் வைத்து.. பகிர்ந்துண்டு ஆடி .. குழந்தைப்
பருவத்திலே.. அப்புறம் இங்கே மாறியேப் போனது.. ஏன் எனக்
கரையுவீர் .. எந்தன் காக்கைகளே.!

கூடுகள் என்னும் கூட்டுக்குள் இருந்தேன் அன்றொரு
நாளினிலே..பாடுகள் படவோ பறந்திடத் துடித்தேன்..
பகருங்கள் காக்கைகளே.!

இரந்துண்டு வாழும் நிலைமை யடைந்தும் இன்னும்
திருந்தவில்லை.! கரைந்துண்டு வாழும் காக்கைகளே என்
கதையைக் கேளுங்களே.!

உங்களைப் போல வாழ்ந்திட ஆசை.. உணர்ந்தேன்
முதுமையிலே.. எங்களைப் பார்த்தும் இரக்கம் வைத்து..
என் கதை கேளுங்களே.!

**வே.கல்யாண்குமார்.**




## புத்தக விமர்சனம்

புத்தகத்தின் பெயர் :
பழவேற்காடு முதல்
கயப்பாக்கம் வரை.
ஆசிரியர் : இரா.இரமேசு.
பதிப்பகம்: இராமசரசு பதிப்பகம்
விலை : ரூ . 150
கைபேசி எண்: 9585790709

பழவேற்காடு முதல் கயப்பாக்கம் வரை என்ற வரலாற்றுப் பயணக் கட்டுரை புத்தகமாக நம் கைகளில் கிடைக்கிறது. ஒருவர் மேற்கொள்ளும் பயணங்களில் மூலமாக அடையும் பட்டறிவை இந்தப் பயணக் கட்டுரை நூல் எளிமையான மொழிநடையில், சாதாரண மக்களும் புரிந்துகொள்ளும் வகையில் எழுதப்பட்டுள்ளது.

குறிப்பாகக் கிழக்கு கடற்கரை ஓரமாக இருக்கக்கூடிய வரலாற்று சிறப்புமிக்க பகுதிகளை இந்தப் பயணக் கட்டுரையில் ஆசிரியர் உள்ளடக்கி எழுதியிருப்பது வரவேற்கத்தக்கது.

சென்னையின் வடக்கே அதாவது தமிழ்நாட்டின் வடக்கு எல்லையாக இருக்கக்கூடிய பழவேற்காட்டிலிருந்து அவருடைய பயணம் தொடங்குகிறது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பதிவுகளை இவர் தேர்வு செய்து பயணம் மேற்கொண்டு, அந்தப் பயணத்தின் மூலம் ஆசிரியர் அப்பகுதியில் கண்ட அத்தனை தகவல்களையும் முதல் தரமான வரலாற்றுச் சான்றுகளாக எழுதியிருக்கிறார்.

ஆசிரியரின் பயணம் கல்பாக்கத்துக்கு அருகில் ஒருகாலத்தில் டச்சுக்காரர்களின் மிக முக்கிய வணிகப்பகுதியாக விளங்கிய சதுரங்கப்பட்டணம், பல்லவர்களின் மிக முக்கிய பகுதியாக விளங்கக்கூடிய மாமல்லை, மாமல்லையில் சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவராத பகுதியாக இருக்கக்கூடிய ஒற்றைக்கல் இரதங்கள், கடப்பாக்கத்துக்கு அருகில் உள்ள ஆலம்பரக்கோட்டையைத் தொடர்ந்து மேலும் விரிவடைகிறது.

உப்பு பூக்கும் மண் என்ற தலைப்பில் மரக்காணத்தில் பரந்து விரிந்த சமவெளிப் பகுதி போன்று வெள்ளை வெளேர் என்று காட்சி தரும் உப்பு தயாரிக்கும் இடத்தினை அழகான கட்டுரையின் வடிவாகவும், அங்கு வாழும் மக்களின் வாழ்வியல் நிலையை நேரில் வாழ்ந்து பார்ப்பது போலவே கட்டுரையில் பதிவு செய்திருக்கிறார்.

புதுவை என்று சொல்லக்கூடிய பாண்டிச்சேரிக்கு அருகில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க பகுதிக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய ஒரு பகுதியை, உள்ளது உள்ளது போன்று அழகாக இந்தப் பகுதியில் எழுதி இருக்கிறார். இவருடைய அநேகமான கட்டுரைகள் கிழக்கு கடற்கரையோரம் இருக்கக்கூடிய வரலாற்று இடங்களையே மையப்படுத்துகின்றன.

அதனோடு விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சியிலிருந்து 40 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கல்வராயன்மலைப் பகுதிக்கு இவர் பயணம் மேற்கொண்டிருக்கின்றார். அந்தப் பயணத்தின் வழியே, அங்கு வாழும் மலைவாழ் மக்களின் வாழ்வியலையும், அந்த மலையின் சூழ்நிலையையும், அங்கு நிலவும் பசுமையின் தன்மையையும் நம் கண் முன்னே அழகாகக் காட்சிப்படுத்துகிறார். இது எல்லோரிடமும் இருக்க வேண்டிய ஒரு அற்புதமான புத்தகம்.

இந்தப் புத்தகத்தை வைத்துக்கொண்டு நீங்கள் முக்கியமான இடங்களுக்குச் சென்றீர்கள் என்றால், அல்லது நீங்கள் படித்தீர்கள் என்றால், அந்த இடத்திற்குச் சென்று பார்வையிட்டது போல ஒரு மகிழ்ச்சி நம் மனதுக்குள் ஏற்படும்.

**R.சுந்தர் B.E., MBA.,
SRM பல்கலைக்கழகம் .
பொத்தேரி**

தமிழ்நாடு இ பேப்பர்.காம்




### தமிழறிஞர் இராய சொக்கலிங்கனார்!

நேரிசை வெண்பா!

சிவம்பெருக்கும் சீலர்
சிறப்புக்கவிஞர்!

உவகையாய் உன்னத
வள்ளல்... சிவமணி

காந்திய வாதியே
கண்ணிய சொக்கலிங்கர்

ஏந்தி சிறைசென்றார் ஏற்று!

விருந்தளித்தார் காந்திக்கே
வீறுடன் தானே

அருமைத்தமிழறிஞர்ஆன்ற...
பெருமை தமிழ்க்கடலே
நல்ல தமிழ் சொக்க
லிங்கர்

கமழும் சமயவாதி காண்!

முனைவர்
இராம.வேதநாயகம்.

### கோட்டோவியம்!

பார்க்க எளிமையாகத்
தான் இருக்கும் பார்ப்பவர்
உள்ளத்தில் வலிமையாகப்
பதியும்!

அரசியல் நையாண்டிக்கு
உதவும் அழகை உணர்த்தவும்
உதவும்!

ஓவியரின் உள்ளத்து
உணர்வை உணர்த்தும்

ஓவியம் கண்டோரின் உள்ளம்
பறிக்கும் !
திட்டமிட்டு கோடுகளை
இணைத்து தீட்டுகின்றனர்
அற்பு ஓவியம்!

பத்து பக்க கட்டுரையின்
செய்திகளை படம் ஒன்று
உணர்த்தி விடும்!

கோட்டோவியம் வரைந்து
கைதானவர்கள் உண்டு
கோட்டோவியம் வரைந்து
பரிசும் பெற்றவருண்டு!

பார்த்தால் பரவசம் பலவற்றை
உணர்த்தும் படம் மனத்தில்
நன்கு பதிந்திடும்!

யானை வரைந்து காட்டினால்

குழந்தைகள் யாவருக்கும்
மிகவும் பிடிக்கும்!

ஒரு பென்சில் கொண்டு
வரைந்தாலும் பல ஓவியங்கள்
தீட்டிட முடியும்!

கோட்டோவியம் பலருக்கு
வாழ்வளித்துள்ளது
களிப்புடன் வரைந்து
வாழ்கின்றனர்!

கணினி வருகைக்குப்
பின்னே கையால் வரையும்
ஓவியருக்கு மதிப்பில்லை!

ஓவியம் என்பது
உன்னதக்கலை சித்திரம்
என்பது கைபழக்கம்
என்றனர்!

சாலையில் வரைவதும்
கோட்டோவியம் தான்
சாலை கடக்கும் சிலர் தான்
கவனிக்கின்றனர்!

கடவுள் படம் வரைந்தும்

ஓவியன்
கஞ்சிக்கு
கஷ்டப்படும்
நிலை தான்
இன்று!

கவிஞர்
இரா. இரவி.

---

பார்த்ததிலே ஒரு பரவசம்
தினம் நினைக்கையிலே
அது ஒரு புது ரகம்
பார்த்த பின் பழகியது
பழகியதில் வளர்ந்தது அன்பு
அன்பை வளர்த்ததில்
முளைத்து வந்ததொரு காதல்
காலப் போக்கில் காதலிலே
வளர்ந்து வந்த புரிதலிலே
மனங்கள் இரண்டும் ஒரு

மனமாக
திருமணங்கள்
என்றானதுவே

ஓம் குமார்
P N
மதுரை

### மாயை:

கண்ணில் தெரிவது

உண்மை
மட்டுமல்ல
என்றும்
மாயையும்
கூடவே.

வைரமணி
சென்னை

### தமிழ் மொழியின் அழகு

பிறருக்குக் கொடுப்பதையே
மூன்றாய்க் கூறும்
பெருமைகொண்ட
மொழியேதான் தமிழினி
மையாம் !!
தருவதும்,கொடுப்பதும்
மற்றும் ஈவதும்
தான்மூன்று சொற்களாம்
பொருளது ஒன்றே !!
தருவதென்பது தாழ்ந்தவரே
'உயர்ந்தோர்க்'கொடுப்பது
தானாகக்கொடுப்
பதுதனக்குச்
'சமமாய்'உள்ளோர்க்கு
பிறரைமூன்றாய்ப் பிரித்துப்
பெரியோர் ' தாழ்ந்தோர்'

பெறுவதே
ஈதலென்றுக்
கூறுமொழி
தமிழே !!

சண்முக
சுப்பிரமணியன்
திருநெல்வேலி

### கூடு...

சிறகசைக்க விரிந்த வானம்
தந்து. .. கூட்டில் அடைத்து
வைக்கும் ... இயற்கையைப்
போலவே காதல் கதகதப்பில்
மிதந்து கிடந்த என்னை...

உன் நினைவுக் கூட்டில்
அடக்கி வைக்கிறாய்...

தே.சௌந்தரராஜன்
கல்யாணம் பூண்டி

---


உபாயம்
ஏதாவது
உரைத்து
விடேன்...
நினைத்தாலும்..
வலிக்கிறது...
மறந்தாலும்...
துடிக்கிறது... உன்னை...

தே.சௌந்தரராஜன்
கல்யாணம் பூண்டி

### முடிவல்ல...

அடுக்கடுக்கான அச்சம்,
எதிர்பாராத உணர்வுகளை
துணிவோடு
எதிர்கொள்ளும் – மரணம்.

காற்றில் கலந்த சுவாசத்தை
கரைத் தொட்ட அலைகளாய்
இழுத்துச் செல்லும்– மரணம்.

நடை, வான், கப்பலென
பயணித்த உயிரின் இறுதி
பயணம் – மரணம்.


பிறரைப் பார்த்து
"நமக்கும் வேண்டும்" என்ற
பேராசை இல்லாத பயணம்
–மரணம்...

துடிக்க மறந்த இதயம்,
வடிக்க மறந்த கவிதை,
படிக்க மறந்த மனிதன்...

உயிர்களின் மரணம்

முடிவல்ல –
புதிய உடலின்
தொடக்கம்.

நா.
பத்மாவதி
கொரட்டூர்



### எழுந்தருள்க ஈசனே.!

எனை யிங்கு எழுதென்று
சொன்ன தெல்லாம் ஈசனே.!
இதை யிங்கு மறவாதே
பாடுவாயா என் மனமே.!

உனைப் பாடும் தொழிலின்றி
வேறொன்றும் அறியேனே
ஈசனே.! எனைப் பாட
வைத்தவன் நீயின்றி
யாரிங்கு? எனவே நீ
வந்தமர்வாய் எனது மனமே.!

சிற்பி யெனப்
பிறந்திருந்தால்.. சிவலிங்கம்
செய்துவுனை சிவபூசை
செய்திருப்பேன் ஈசனே!
நிற்பதுவும் நடப்பதுவும் நின்
செயலாலின்றி வேறேது
இன்றுணர்ந்தேன்.! வந்திடுக
எந்தன் மனமே.!

ஓவியமாய் உனை வரைந்து..
உமையம்மை போல் பாதி
யாய் கலந்து உன்னோடு
நானிருப்பேன் என் ஈசனே.!
காவியமாய்ப் பாடி..
கடம்பவனம் மெங்கும் உன்
கழலடியை பாடும் வரம்
தந்திடவே வந்தமர்க எந்தன்
மனமே!

கண்ணப்பன் யானுமில்லை..
கல்லால் துதித்ததில்லை..
என்னப்பன் அல்லவா..
எனையாளும் சொல்லவா..
உனைப்பாட வரம் தந்தாய்
ஈசனே.!
மண்ணப்பன் ஆனவன்..
மண்பானை யானவன்..
என்னப்பா ஈசன் உனை...
எப்போதும் மறவதே
இருப்பதற்கே எனக்கருள
வந்தருள்க எந்தன் மனமே.!

வே.கல்யாண்குமார்.

### நல்லுயிர் உடம்பு செந்தமிழ் மூன்றும்!

தமிழின்றி உயிரில்லை
தமிழின்றி உடம்பில்லை
தமிழின்றி உலகில்லை
தமிழின்றி ஏதுமில்லை
தமிழின்றி நானில்லை
தமிழின்றி நீயில்லை
தமிழின்றி வானில்லை
தமிழின்றி மொழியில்லை!

செந்தமிழே வணக்கம்
சீர்தமிழே இணக்கம்
நந்தமிழே மணக்கும்
நற்றமிழே இனிக்கும்!
எந்தமிழே உனக்கும்

இன்தமிழே
எனக்கும்
அந்தமிழே
துளிர்க்கும்
ஐந்தமிழே
வளரும்!


முனைவர்
இராம.வேதநாயகம்.

### பழகிய நினைவுகள் இனிப்பானவை

பழகிய நினைவுகள்
நினைத்தாலே ஆனந்தம் ,
இதயத் தோட்டத்தில் பூவாக
மலர்கிறது நேரங்கள்
போனாலும் நிஜம் என்பதால்
இனிப்பாக உள்ளது.
நெஞ்சில் ஒரு கானம் போல்
மீண்டும் ஒலிக்க. சிரிப்பின்
சுவை இன்றும் மனதில்
தித்திக்கிறதே...
சந்திப்பின் சுகம் கண்களில்
இருக்க , காலம் மாறினாலும்
உணர்வு மாறாது,
அன்பின் தடயங்கள்
நினைக்க நினைக்க இன்பம்
நினைவுகள் இனிமை
நெஞ்சை தொட

வாழ்வின்
வழியில் ஒளி
நிறைந்த
பயணம்
தொடருதே...

உஷா
முத்துராமன்




### தமிழறிஞர் ம.பொ.சி!

நேரிசை வெண்பா!

சிவஞானம் என்பார்
சிலம்புடன் செல்வர்!
உவமை ததும்ப
உணர்வாய்ச்.... சுவைத்தார்
தமிழை!
தமிழ்மா நிலச்சிற்பி!
செங்கோல் கமழ
நடத்தினார் காண்!

பத்மசிறி பாங்கான
பட்டமுற்றார் நல்லதோர்
வித்தகர் வீறுடை
வெல்தமிழில்...
முத்தமிழைக் கண்டார்
கனிவாய்ச்சிவஞானம்
நூல்களைக்கொண்டோம்
அவராலே கொள்!

முனைவர்
இராம.வேதநாயகம்.



### மாவீரன் பகத்சிங்!

நேரிசை வெண்பா!

விடுதலைப் போராட்ட
வீரன் பகத்சிங்!
கெடுதலை நீக்கிட
கேண்மை.. படைத்திவண்
நண்பருடன் மாவீரம்
நன்றாகக்காட்டினான்
கண்ணியமிக்கோனைக்
காண்!

மூர்த்தி சிறிதெனினும்
கீர்த்தி பெரிதென்பர்
சீர்த்த முறையிலே
சீர்வெற்றி... நேர்ந்தேதான்
வாராதே என்றான்
வளமாய்ப்பகத்சிங்கே!
நேரெதிர்த்துப்
போர்புரிந்தான்நேர்ந்து!

முனைவர்
இராம.வேதநாயகம்
திருவண்ணாமலை.



### கொடிகாத்த குமரன்!

நேரிசை வெண்பா!

கொடியினைக்காத்த
குமரனே நல்ல

விடுதலைப்போராட்ட
வீரன்!–––
அடிமைத்தனத்தை
ஒழிக்க அரும்பாடுபட்ட
கனிவுக்குமரனைக்காண்!

தேசமே போற்றும்
தியாகி குமரனே!

நேசமே கொண்டானே
நேர்ந்தவன்.. நாசமே

செய்தாரை நன்காய்ந்த
சீலர் குமரனே!

பெய்தாரே நன்மையே பீடு!

முனைவர்
இராம.வேதநாயகம்.

### வெற்றி தேவதையே

தோல்வியே உனக்கு
அறைகூவல் விடுக்கிறேன்
யுத்தகளத்தில் சந்திக்கிறேன்!

எத்தனை விழுப்புண்களைத்
தந்திருப்பாய்ரணங்களை
இனி ராகங்களாய்
மீட்டுவேன்!

கசந்து போனாலும்
சலித்து போகாத
சகிப்புத்தன்மையை
மட்டும் எப்படியோ
வளர்த்து விட்டாய்!

காளான் வளர்ப்பினை
போல்உன் சோகச்சிறைகளில்
பூட்டப்பட்டாலும் அதன்
சூடுபட்டே ஊக்கத்தின்
சிறகுகள் முளைத்துக்
கொள்கின்றன!

சுமக்கமுடியாத சிலுவைகளை
நீ ஒன்றும் தந்துவிடவில்லை
இப்போதும்
ஓடிக்கொண்டுதான்
இருக்கிறேன்

அஞ்சிப்புறமுதுகிட்டு
அல்ல வெற்றி தேவதையின்

விலாசத்தைத்
தேடி
கடிகாரத்தின்
வேகத்தோடும்
விவேகத்
தோடும்!

கவிஞர்
த.அனந்தராமன்
துறையூர்

---

கிளி போல் மனைவி உடன்
இருந்தாலும் தெருவில்
செல்லும் வேறு பெண்ணை
பார்க்க மனம் தாவத்தான்
செய்கிறது !

ஜவுளி கடையில் பணியாளர்
நம் முன் எடுத்த போடும்
விதவிதமான டிசைன்களை
விட்டு எடுத்துப் போடாத
டிசைன்கள் மீது மனம்
தாவுகிறது....

ஒட்டு சாவடியில் ஒட்டு
போட்டு வந்த பின்....
காசு கொடுத்த கட்சிக்கே
ஓட்டு போட்டிருக்கலாமோ...
என மனம்
சஞ்சலப்படுகிறது...

கூட்டணி பேரம் முடிந்தபின்
வேறு கட்சியுடன் கூட்டணி
வைத்திருந்தால்...
பணம் இன்னும் நிறைய
கொடுத்து இருப்பார்களோ
என்று கட்சித் தலைவரின்
மனம் கூட்டணி தாவ
முயற்சிக்கிறது....

இதிலிருந்து நாம்
தெரிந்து கொள்ள
வேண்டியதெல்லாம்..
எல்லாவற்றிலும் இப்படி தாவ
துடிக்கும் மனம் இருக்கும்
மனிதன்.... நிச்சயம்
குரங்கிலிருந்து தான்
பிறந்திருப்பான்!

எம்.பி. தினேஷ். கோவை

---

1. வாழ்க்கை
வித்தியாசமானது சிலருக்கு
பிடித்தமானதாக இருக்கும்
சிலருக்கு பிடித்து இழுப்பது
போன்று இருக்கும்

2. ஆறுதல் என்பது
பிரச்சனைக்கு தற்காலிக
தீர்வு மாறுதல் என்பது தான்
நிரந்தரமான தீர்வு

3. ஏமாற்றம் என்பது
அடுத்தவரிடம்
எச்சரிக்கையாக
இருப்பதற்கான அலாரம்
ஆகும்.

4. பிரிக்க முடிந்தது
ஆடி மாசம் கணவன்
மனைவியை பிரிக்க
முடியாதது ஆடி மாதமும்
எல் ஆர் ஈஸ்வரி பாடலும்

5. சோறு குறைந்துவிட்டது

என்று
கவலைப்பட
கூடாது அதை
தயிர் சாதமாக
மாற்றுவது
தான்
புத்திசாலித்தனம்

நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி

### கல்லும் கரைந்து போகும்...

குசலம் என்பது
குவலயப் பெருவெளியில்
கூர்மதி கொண்ட
மனித குலத்துக்கு மட்டுமே
கிடைத்த மகத்தான பரிசு...
நான்கு கால் இருந்து
நல்விலங்கே ஆனாலும்
ஆறறிவு இன்மையால்
நலம் விசாரித்து
நற்சுகம் காண முடியாது...
பறக்கும் திறன்
பிறவியிலேயே பெற்றும்
பறவை இனத்துக்கு
பாசமொழி பரிமாறத்
தெரியாது, இயலாது!
குசல வார்த்தைகள்
உறவுகளுக்கு இடையில்
ஊற்றாய் பொங்கும்
குற்றம் குறைகளை
யெல்லாம் காணாமல்
பொசுக்கும்...பம்மாத்து
பாசாங்கு எதுவும் இல்லாமல்
பண்பட்ட இதயத்தில்
இருந்து பாசம் குழைத்து
பீறிட்டு வெளிவரும்
கனிந்த
கற்கண்டு
வார்த்தையில்
கல்லும் கரைந்து
போகும்...
சில நேரங்களில்
குசலம் என்ற
பெயரில்
குதர்க்க மொழிகளும்
கபடமாய் அரங்கேறும்
நாணயத்தின் இன்னொரு
முகம் மாதிரி...!
அரை விநாடி கூட
அபாரமாய் தெரியும்
அவசர கலியுகமிது...
குசல விசாரிப்பில் கூட
குதூகலம் தொலைத்த
கூடுதல் அவசரம்...
நலிந்த வார்த்தையில்
நுனிப்புல் மேய்ந்து
கனமே இல்லாத கஞ்சத்தன
பரிமாற்றம் ஆகவே
அகிலத்தோரே!
இனிய வார்த்தைகளால்
இதய வளம் பொழியும்
குசல விசாரிப்புக்கு
குறுகிய உள்ளத்தால்
குந்தகம் செய்யாதீர்!
வெறும் சம்பிரதாயச் சடங்கு
தானே என்று வெளிச்சப்
பயிருக்கு வெந்நீர் ஊற்றாதீர்!
மனந்திறந்து விசாரித்து
மாண்பு மிக்க
மனித உறவுகளுக்கு
மதிப்புக் கூட்டுங்கள்...

மண்ணில் மனித நேயம்
மங்காமல் ஒளிர்ந்திட
மணக்கும் வார்த்தைகளால்
குசலத்தின் பெருமைக்கு
மகுடம் சூட்டி மகிழுங்கள்!

நெல்லை குரலோன்
பொட்டல் புதூர்

### புன்னகை

புன்னகை, இதயத்தின் இருளை கிழித்துக்கொண்டு
வெளிவரும் மின்னல். உதயகால சூரியனாய்த் தோன்றும்
இடமெல்லாம் உயிர்ப்பினைத்த ருகின்ற உயிர்த் துளி
வார்த்தைகள் அற்ற மௌன மொழி.
பேசாமல் பிரச்சனைகளைத் தீர்க்கும் ஒரே வழி.
ஆழமான ஆயிரம் உணர்வுகள் அடங்கிய அருள்மொழி .
கூசாமல் பொய் சொல்பவரைப் பார்த்து இவ்வளவு தானா நீ
என சொல்லாமல் சொல்லும் ஒரு புன்னகை.
அறிமுகம் இல்லாதவர்களையும் நண்பர்களாக்கும் ஒரு
புன்னகை. ஆழ்மனதின் துயரத்தை மறைக்கப் பயன்படும் ஒரு
புன்னகை . சூழ்நிலையின் தீவிரத்தைக் குறைக்க பயன்படும்
ஒரு புன்னகை . சுந்தரப் பொலிவினை சந்திர முகத்திற்கு
நிரந்தரமாக்கும் இந்தப் புன்னகை.பெண்மையின் மென்மைக்கு
அணிசேர்க்கும் அழகுப் புன்னகை. பொன்னகை இல்லாத
குறையினைப் போக்கும் நன்னகையாம் இந்தப் புன்னகை
கருணை மனதினைப் படம் பிடித்துக் காட்டும் புகைப்படக்
கருவி இந்தப் புன்னகை கடவுள் மனிதனுக்கு அளித்த
விலைமதிப்பில்லா பொக்கிஷம் இந்த புன்னகை
பிள்ளை முகத்தில் கள்ளம் இல்லாது வீற்றிருக்கும் புன்னகை.
புகைப்படத்தில் நிரந்தரமாக்கப்பட்ட புன்னகை.
அருள் தரும் இறைவனின் அழகிய முகத்தில் அடடா !!
அடடா!! அழகிய புன்னகை. கூடுவிட்டு உயிரது போன
பின்னே கூடவே முகத்தில் உறையும் அமைதிப் புன்னகை.

வே.உலகம்மாள், கோவை

### செயற்கை இதயம் !

மழை நேரத்தில் லைப்ரரிக்கு
போவோம் என்று..
என்னை குடைபிடிக்க
அழைத்தாள் ஸ்வேதா...
இணைந்து நடந்தாள்...
இணக்கமாய் நடந்தாள்..
எல்லோரும் என்னை
கர்வமாய் பார்ப்பது
தெரிந்தது....

"நான் நனைகிறேனடா.
குடையை சரியாக
இணக்கமாக பிடி... !"
என்றாள் அன்பாக...

"இல்லை, ஸ்வேதா உன்
தந்தை வருகிறார் ..!".

என்றேன் சற்று
மரியாதையுடன் தள்ளி
நின்று...

"என் அப்பாவிடம்
உன்னை என்னவென்று
அறிமுகப்படுத்தட்டும்
நான்.!."

என்ற ஸ்வேதாவின்
கேள்விக்கு நான்
புன்னகையை
பதிலளித்தேன்...

"டாட் , திஸ் ஈஸ் மை
டிரஸ்டேடு ஃபிரெண்ட்
தீபக்...லைப்ரரி வரைக்கும்
கம்பெனி கொடுக்கிறேனான்
அதான் கூட்டிட்டு
வந்துட்டேன.... !".

சிரித்தாள் அழகாக...

"டேக் கேர்... ஸ்வேதா.. !"

என்ற ஒற்றை
வார்த்தையுடன்
என்னை பார்த்தும்
பாராததுமாய்
புறப்பட்டார் அவர்
தந்தை...

லைப்ரரியில் அடைந்ததும்
அவள் எடுத்த முதல்
புத்தகம்... 'இதயத்தை
காப்போம் ' என்ற புத்தகம் .../
"என்ன ஸ்வேதா டாக்டருக்கு
படிக்க போறியா !"என்றேன்
கேள்வி குறியுடன் ...
சிரித்தாள்....
"ஏன் அப்படி கேட்டாய் !'

"இல்லை நீ வந்து எடுத்த
புத்தகமே இதயத்தை
பற்றியதா இருக்கே
அதான்..!"

"நான் வாழனும்னா இதை
படிச்சு தெரிஞ்சுக்கணும்...
அதுக்காகத்தான்
எடுத்தேன்... !"

அவள் சொல்வது புரியாமல்
பார்த்தேன் !

"எனக்கு
பொருத்தப்பட்டிருப்பது
செயற்கை இதயமடா...அது
துடிக்கும் வரை தான் நான்
உயிருடன் இருப்பேன் !"
என்றாள்....

"ஒரு ஆக்சிடெண்ட்டில் என்
இதயம் உடைந்துவிட்டது..
இப்போது என்னிடம்
இயங்கிக் கொண்டிருப்பது
செயற்கை இதயம் அதை
பாதுகாக்கத்தான் போராடிக்
கொண்டிருக்கிறேன் !

வெளியே வரும்போது
குடையோடு அவள்
கைகளையும் இணைத்து
பிடித்தேன்....

"உன் செயற்கை
இதயத்தில் இனி நானும்
இருப்பேனடி !" என்றேன்.

எம்.பி. தினேஷ்.
கோவை

# வாசகர் கடிதம்

ஒவ்வொரு இந்தியனையும் கோபப்படுத்தி உள்ளது#தலைமை நீதிபதி மீதான தாக்குதல் குறித்து பிரதமர் மோடி கண்டனம்

பீஹார் தேர்தல் நவம்பர் 11ல் வாக்குப் பதிவு#மூன்று நாட்கள் கழித்து வாக்கு எண்ணிக்கை

அரசு பொதுத் துறை நிறுவனங்களுக்கு 20%வரை போனஸ் #முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

20378 சிறப்புப் பேருந்துகள் தீபாவளிக்கு இயக்கப்படும்

உத்தரவுகளைப் பிறப்பிக்கும் நீதிபதிகளையும் விட்டு வைக்காமல் சமூக ஊடகங்களில் விமர்சிப்பதா?#நீதிபதி அதிருப்தி

புதுக் கவிதைகளின் அணிவகுப்பு அபாரம்

வாசகர் கடிதங்கள் அட்டகாசம்

நூல் விமர்சனம் தூள்

மபியில் 11 குழந்தைகள் இறப்புக்கு காரணமான இருமல் மருந்தை பரிந்துரை செய்த மருத்துவர் கைது

சைதாப்பேட்டையில் வீட்டின் பூட்டை உடைத்து 32 பவுன் நகை திருட்டு#இருவர் கைது

வங்கிகள் முதலீட்டு நிறுவனங்களில் கோரப்படாத 1.84 லட்சம் கோடி உரியவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை#நிர்மலா சீதாராமன் தகவல்

நவம்பர் 15 முதல் சுங்கக் கட்டணம் யுபிஐ மூலம் செலுத்தினால் கால்பங்கு கூடுதல் கட்டணம்#புதுசு புதுசா யோசிக்கிறாங்கய்யா

ஜெய்ப்பூர் மருத்துவ மனையில் தீ விபத்து#ஏழு நோயாளிகள் பலி

இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர் சுட்டுக் கொலை #அமெரிக்காவில் தொடரும் அதிர்ச்சி இத்தாலியில் கார் விபத்து#இந்தியர்கள் நால்வர் பலி

எங்களுடன் மீண்டும் போரிட வாருங்கள்#பாகிஸ்தான் ராணுவ மந்திரி அடாவடி=டிரம்புக்கு அமைதிக்கான நோபல் பரிசு பெற்றுத் தரும் நோக்கமா?



**-பி.சுரேகா**
**சென்னை**

கட்சி பிரச்சாரம் மற்றும் பொதுக்கூட்டங்களுக்கு நெறிமுறை கொண்டுவரப்படும் என முதல்வர் அறிவிப்பு. தங்கம் விலை ஏறிக்கொண்டே செல்கிறது. இதற்கு மாற்று உலோகம் ஏதேனும் கண்டுபிடித்தால் பயனுள்ளதாக அமையும். உள்ளூர் செய்திகள் அனைத்தையும் தொகுத்து வழங்கியிருப்பது பாராட்டுக்குரியது. காலாண்டு தேர்வு விடுமுறையில் சிறப்பு வகுப்புகள் நடத்தக்கூடாது கல்வித்துறை எச்சரிக்கை. விஜய் பேசிய போது மின்தடை ஏற்பட்டதா என தலைமை பொறியாளர் விளக்கம் அளித்துள்ளார். கரூர் சம்பவத்தில் யாரும் அரசியல் செய்ய வேண்டாம் என கனிமொழி அறிக்கை. சனிக்கிழமை விஜய் கூட்டம் வைத்தது தவறு என பிரேமலதா ஆவேசம்.

சோட்டானிக்கரை பகவதி அம்மன் கோவில் கட்டுரை பிரமாதம். புதுக்கவிதைகள் அனைத்தும் அபாரமாக உள்ளது. முத்து ஆனந்த் அவர்களின் காதல் கவிதை மிகச் சிறந்த காவியம். ஒவ்வொரு வரியும் தேன் அமுதம் படைத்தது. நெல்லை குரலோன் எழுதிய கவிதை கரூர் சம்பவத்திற்கு சரியான சம்மட்டி அடியாக இருந்தது சமையலறை டிப்ஸ் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. ஆன்மீக செய்திகள் அனைத்தும் தேன் அமுதம். விஜய் போலீசார் மீது குற்றம் சுமத்துவது தவறு என திருமாவளவன் விளக்கம். தமிழகத்தில் அக்டோபர் நாலு வரை கனமழைக்கு வாய்ப்பு. பீகார் தேர்தல் வேலைகள் சுறுசுறுப்பாக நடைபெற்று வருகிறது. மும்பை எக்ஸ்பிரஸ் ரயில் பெட்டிகள் இரண்டு முறை தடம் புரண்டது. வெளிநாட்டில் தயாரிக்கப்படும் படங்களுக்கு நூறு சதவீத வரி விதிக்கப்படும் என ட்ரம்பு அறிவிப்பு. சீனாவில் மிக உயரமான பாலம் திறக்கப்பட்டது. தன்னலம் கருதாமல் செயல்படும் தமிழ்நாடு இ பேப்பர் குடும்பத்தை ஆதரிப்பது நம் அனைவரின் கடமையாகும். ஒவ்வொரு வாசகரும் தங்களால் முடிந்த அளவு தெய்வம் இதழுக்கு சந்தா கட்டியும் உறுப்பினர்களை அதிக அளவு சேர்த்தும் ஆதரவு அளிக்க வேண்டும். தன்னலம் கருதாத தமிழ்நாடு இ பேப்பர் குடும்பத்தினர் அனைவருக்கும் நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்



**-நடேஷ் கன்னா**
**கல்லிடைக்குறிச்சி**

வணக்கம். 7.10.25 அன்றைய தமிழ்நாடு இ பேப்பரின் முதல் பக்கத்தில் நவம்பர் 6, 11ம் தேதிகளில் வாக்குப்பதிவு நவம்பர் 14ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை என்ற அரசியலை மிக அழகாக பீகார் பற்றி சொன்னது பாராட்டுக்குரியது. இன்றைய பஞ்சாங்கம் மிக அருமையான நாளாக அமைய எனக்கு உதவி செய்தது.

திருக்குறளை அதன் பொருளுடன் 402 நாட்களாக படித்து மகிழ உதவும் தமிழ்நாடு பேப்பருக்கு மனமார்ந்த பாராட்டுக்கள். ஸ்ரீ பார்த்தசாரதி பௌர்ணமி புறப்பாடு வடமம் செய்து மிகவும் அருமை பாராட்டுக்கள்.

சப்பாத்தி நம் உடல் எடையை குறைக்கும் என்று தெரியும். ஆனால் அதில் உள்ள நிபந்தனைகளை எப்படி கையாள வேண்டும் என்று மிக அருமையான செய்தியை நலம் தரும் மருத்துவம் பகுதியில் படித்து தெரிந்து கொண்டேன். பாராட்டுக்கள் நடுக்கடலில் இரண்டு இடங்களில் நாகை மீனவர்கள் மீது இலங்கை டற்கொள்ளையர்கள் தாக்குதல் நடத்திய செய்தி அதிர்ச்சியாக இருந்தது.

வரலாறு காணாத உச்சத்தை தங்கம் அடைந்தது என்றும் 87,000/-க்கு விற்பனை செய்யப்படுகிறது செய்தி அதிர்ச்சியாகவும் திருமணம் செய்ய காத்திருக்கும் பெற்றோர்களுக்கு ஒரு வேதனையான செய்தியாக இருக்கும் என்று உணர்ந்து படித்தேன் .

தினம் ஒரு தலைவர்கள் பகுதியில் சுசேதா திருப்பளானி வரலாறு அவரைப் பற்றிய தகவலும் மிகவும் அருமை.

பல்சுவைக் களஞ்சியம் பகுதியில் வந்த அரிசி தேங்காய் பால் பாயாசம் படிக்கும் போதே நாவில் எச்சில் ஊறியது மீம்ஸ் மிகவும் அருமை. பாராட்டுக்கள். சமையலறை ஸ்பெஷல் என்று மிக அருமையான தகவல்களை சொல்லி சமையலறையில் உற்சாகமாக வேலை செய்ய உதவும் தமிழ்நாடு பேப்பருக்கு மனமார்ந்த பாராட்டுக்கள்.

மயிலை ஆதிகேசவன் பெருமாள் என்ற படமும் அதைப்பற்றி தகவலும் மிகவும் அருமை திருப்பூர் மாநகராட்சி மன்ற கூட்டம் என்ற செய்தியும் மிகவும் அருமை பாராட்டுக்கள்.

சுற்றுலா பக்கத்தில் வந்த இரவே இல்லாத நாடு தலைநகரம் இல்லாத குடியரசு ஒரு பார்வை என்று நல்ல அருமையான தகவல்களை கொடுத்து சுற்றுலா செல்பவர்களுக்கு உற்சாகமாக தங்களுடைய பயணம் அமைய உதவும் தங்களுக்கு மனமார்ந்த பாராட்டுக்கள்.

தொழில்நுட்ப அறிவியல் செய்திகள் என்ற தலைப்பில் ஒரு வலைத்தளத்தில் குக்கீகளை ஏற்கலாமா? நிராகரிக்கலாமா என்ற அருமையான தகவலை சொன்னது அறிவுக்கு விருந்தாக அமைந்தது.

நவம்பர் 15ஆம் தேதி முதல் ஒரு புதிய மாற்றம் சுங்கச்சாவடி கட்டணம் யு பி ஐ மூலம் செலுத்தினால் கால்பந்து கூடுதல் கட்டணம் என்ற செய்தி எல்லாம் அதிர்ச்சியாக இருந்தது.

அமெரிக்காவில் தொடரும் அதிர்ச்சி இந்திய வம்சாவளியை சேர்ந்தவர் சுட்டுக் கொலை என்ற செய்தி பயங்கரமாக அங்கு நடக்கும் தகவலை படிக்க வைத்தது.

அனைத்து பக்கங்களிலும் அருமையான தகவல்களை மிக அழகாக தொகுத்துக் கொடுக்கும் தலையாயப் பணியை செய்யும் தமிழ்நாடு இ பேப்பரின் ஆசிரியர் குழுமத்திற்கு மனமார்ந்த பாராட்டுக்கள்



**-உஷா முத்துராமன்**

தமிழ் நாடு இ பேப்பர் குழுமத்தின் ஆன்மீக வெளியீடான அருள் தரும் தெய்வம் இதழின் மகிமையைப் புரிந்து கொண்டு எங்கள் நெருங்கிய உறவினர் (திருச்சி) சிலாகித்துப் பேசியது மனதுக்கு மகிழ்ச்சியை அளித்தது. சுமார் அரை மணி நேரம் முழுக்க முழுக்க தெய்வம் இதழ் பற்றியே பாஸிட்டிவ் வாக பேசிப் பேசி உருகினார் என்று சொன்னால் மிகையில்லை. இந்த அளவுக்கு அவர் உள்ளன்போடு தெய்வம் இதழுக்கு ஆதரவாக பேசியதற்கு அவர் கூறிய காரணம் என்னை சிலிர்க்க வைத்தது உண்மை.

இந்த திருச்சி உறவினர் ( பெயரைக் குறிப்பிட வேண்டாம் என்று அழுத்தமாக கூறிய பிறகு, அதை மீறுவது அநாகரிகம் அல்லவா?) செப்டம்பர் 22 தேதியிட்ட இதழை மூன்று நாட்களாக ( அவர் எப்போதும் வியாபாரத்தில் பிஸி... ஆகவே இடைவெளி விட்டு வாசித்திருக்கிறார்) படித்து விட்டு, தனக்குள் ஒரு கேள்வியை கேட்டுள்ளார்.

இந்த தெய்வம் இதழில் எனது வாழ்க்கை உயர்வுக்கு தேவையான கருத்துக்கள் என்னென்ன இருந்தன?

இந்தக் கேள்விக்குப் பதில் தேடும் உந்துதலில் மீண்டும் மறு வாசிப்பில் இறங்கி குறிப்பு எடுத்துள்ளார் சீரியஸாக...!

இந்தத் தேடலில் இன்னொரு விஷயத்தையும் சேர்த்துக் கொண்டாராம்.

அதாவது இந்த இதழில் இருந்து நாம் தெரிந்து கொண்ட புதிய விஷயங்கள் என்னென்ன?

இந்தப் பட்டியலையும் மெனக்கெட்டு ஆர்வமுடன் தயாரித்துள்ளார்.

( வாசிப்பின் இலக்கணம் இது தானே என்று அவருக்கு சபாஷ் போட்டு சந்தோஷித்தேன்)

ஒரு தெய்வம் இதழை முழுக்க முழுக்க வரி விடாமல் வாசித்து உள் வாங்கி விட்டு, 1.வாழ்க்கையை மேம்படுத்தும் விஷயங்கள் என்னென்ன கிடைத்தன?

2.இதுவரை நாம் கேள்விப்பட்டிராத புதிய தகவல்களாக --- கருத்துக்களாக என்னென்ன பெற்றோம்? என்று உற்சாக குஷியில் இரண்டு பட்டியலை வரிசைப் படுத்தி, வாசிப்பின் மகத்துவத்தை அவரது குடும்பத்தாருக்கு மட்டுமல்ல, நமக்கும் சத்தம் இல்லாமல் போதித்து விட்டார், போற்றுதலுக்குரிய அந்த திருச்சி உறவினர்.

இந்த இரு பட்டியலைப் படித்து விட்டு, 'வாவ்' என்று வாய் பிளந்து ஆச்சரியத்தை வெளிப் படுத்தினார்களாம் அவர் தம் குடும்பத்தார்.

அலைபேசியில் அரை மணி நேரம் இந்த மேட்டரை அற்புதமாக விரித்துப் பேசி, இதோ இந்த வாசகர் கடிதத்தின் கதாநாயகராகி விட்டார் அவர்.

மேலோட்டமான நுனிப்புல் வாசிப்பு முழுமையான பயனை அளிக்காது. ( அதற்காக எல்லாவற்றையும் ஆழ்ந்து படிக்க வேண்டும் என்று சொன்னாலும் அர்த்தம் நிறைவாகாது) தெய்வம் மாதிரியான தரமுள்ள இதழ்களை திருச்சி உறவினரைப் போல் குறிக்கோள் உத்தியுடன் கண்ணும் கருத்துமாக வாசித்தால், காலம் முழுவதும் நிம்மதியாக ஆனந்தமாக இருந்து வாழ்க்கையை வென்று ருசிக்கலாம் என்பது அடியேனின் தாழ்மையான கருத்து. தெய்வம் இதழை நாம் படித்து நன்மை அடைவதோடு நின்று விடாமல், நமக்குத் தெரிந்த உறவுகள் அனைவரிடமும் அறிமுகப் படுத்தி வைப்பதும் நமது கடமை என்று எடுத்துக் கொள்ள வேண்டும். வாசகப் பெருமக்களின் நல் வாழ்க்கைக்கு நல்வழி காட்டும் அருள் தரும் தெய்வம் இதழ் லட்சக் கணக்கான இல்லங்களில் சென்றடைய வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.



**-பி.வெங்கடாசலபதி**
**தென்காசி**

# வாசகர்

அன்பான வாசக சொந்தங்களுக்கு இதய வணக்கங்கள்.

மக்களே போலும் கயவர் என்ற வள்ளுவனின் வரையறைக்கு உதாரணம் நானே என்று காட்டியுள்ளார் ராகேஷ் கிஷோர் என்ற வழக்குரைஞர். அவர் வழக்கறிஞர் அல்ல. கருத்துக்களை வீசி வாதிட வேண்டிய களத்தில் செருப்பு வீசியுள்ளார். இந்திய சமூகமே விரும்பாத செயல் என்று பிரதமர் அழகாக கண்டித்துள்ளார். அதே சமயம் தன்னடக்கத்தை வெளியிட்ட தலைமை நீதிபதி பி. ஆர். கவாய் அவர்களும் பாராட்டற்குரியவரே.

சிந்திக்க ஒரு நொடி வரிகளாக திருமதி. உஷா முத்துராமன் அவர்களின் குண்டுசி குத்தல் உதாரணம் சிக்கனத்தின் அருமையை உசுப்பிவிடுவதாக உள்ளது. Good.

பட்டாசுக் கடை மற்றும் ஆலைகளின் விபத்துச் செய்தியும், கடலில் மீனவர்களுக்கு நேரும் கொடுமைச் செய்திகளும் தமிழகத்தின் சாபக்கேடாக அமைந்துள்ளன.

இந்த துயரங்களை முற்றிலுமாக, நிரந்தரமாக அகற்ற அரசுகள் செயல்படுவது மக்கள் நல அரசின் கடமை.

வங்கி மற்றும் முதலீட்டு நிறுவனங்களில் உரிமை கோரப்படாமல் கிடக்கும் ரூபாய் 1.84 லட்சம் கோடியை உரியவர்களிடம் சேர்க்கும் நடவடிக்கையை மத்திய அரசு துவக்கியிருப்பது வரவேற்கத் தக்கது.

பாக். ராணுவ அமைச்சரின் அடாவடிப் பேச்சு ஒரு அரசு ஆளுமைக்கு அழகல்ல. போரில்லா உலகம் படைக்க எல்லோரும் போராடி வரும் இந்தச் சமயத்தில் வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்பது மாதிரியான பேச்சு இது. இது போருக்கான காலமல்ல என்பதை அவருக்கு உணர்த்த வேண்டும்.

அரிசி தேங்காய் பாலில் செய்தால் பாயாசம் வருமா அல்லது (தலைப்பில் உள்ள) "பாயிசம்" வருமா தெரியவில்லை.

சாப்பிட்ட பிறகு செய்யக்கூடாத 13 டிப்ஸ், சமயலறை சுத்தம், கையாளுதல் குறித்த ஆலோசனைகள் எல்லாமே பயன் மிக்கவை தாம்.

சுற்றுலா பகுதியில் வந்துள்ள உலகில் உள்ள சில நாடுகளின் வினோதங்கள் பற்றிய தகவல் தொகுப்பு மிக அருமை. அனைவரும் தெரிந்து கொள்ளத் தகுந்த செய்திகள். தமிழ்நாடு இ இதழ் குழுமத்தார்க்கு தேங்க்ஸ்.

க்ரைம் கார்னரில் வாசித்த ஓ ஜி கஞ்சா என்பது என்னவென்று புரிய வில்லை. Ocean Grown அல்லது Original Gangster என்பதன் சுருக்கம் என்பதை கூகுளின் வழி தெரிந்து கொண்டேன். என் vocabulary strength ல் மேலும் ஒரு அடிஷன். நன்றி.

எனது படைப்பு ஒன்று இன்று வெளிவந்துள்ளது. இ இதழ் குழுமத்தார்க்கு நன்றி.

மீண்டும் நாளை சந்திப்போம்.



**-P.கணபதி**
**பாளையங்கோட்டை**

இன்று (07.10.2025) தமிழ்நாடு இ பேப்பரில் முதல் பக்கத்தில் பிகார் மாநில சட்டமன்றத் தேர்தல் மற்றும் சனாதன தர்மம் அவமதிப்பு என கூறுபவர்கள் சனாதன தர்மம் என்றால் என்ன என்பதை விளக்க வேண்டும்.
உள்ளூர் செய்திகள் சிந்திக்க ஒரு நொடி பகுதியில் இடம்பெற்ற கருத்து எதார்த்த உண்மை, நலம் தரும் மருத்துவம் பகுதியில் சப்பாத்தி எவ்வாறு எடுத்து கொள்ள வேண்டும் என கூறியது அனைவருக்கும் பயன்படும்.
தமிழ்நாடு மீனவர்கள் மீது இலங்கை கடற்படை மற்றும் கடற்கொள்ளையர்கள் தாக்குதல் தொடர் கதையாக தொடர்வது வேதனை அளிக்கிறது. மத்திய அரசு இந்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும்.
யாதுமாகி நின்றவள் தொடர் கதை மற்றும் அறம் பாடுதல் என்றால் தொகுப்பு சிறப்போ சிறப்பு!! பல்சுவை களஞ்சியம் பகுதியில் சாப்பிட்ட பிறகு செய்யக்கூடாதவைகள், ரவுசு ரமணி, சுற்றுலா பகுதியில் சிறிய நாடுகள் பற்றி பல அரிய தகவல்கள் தெரிந்து கொண்டேன். தமிழ்நாடு இ பேப்பர் படிக்க படிக்க பல அரிய தகவல்கள் தினம் தோறும் தெரிந்து கொள்கிறேன். தமிழ்நாட்டு இ பேப்பர் குழுவிற்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகள்!! வாழ்க! வளர்க!!



**-T.P.குமரன்,**
**மகர்நோம்புச்சாவடி**

































**கமர்ஷியல் கட்டிடம் விற்பனைக்கு**
@ மயிலாடுதுறை
பட்டமங்கலம் தெருவில்
2300 sqft கட்டிடம்
GROUND +3 FLOORS
PRIME LOCATION WITH CLEAN TITLE
நகை கடை மற்றும் வங்கிக்கு ஏற்றது
*(Brokers please excuse)*
Whatsapp message only:
**74188 89721**

---

**TOLET**
@ VALLALAR SALAI
45 FEET ROAD,
PONDICHERRY
Brand New G+3
in Prime Area ideal for MNC, Corporates, Banks, NBFC etc..
North Facing
Ground Floor-Parking,
1st floor - 1550 sft
2nd floor -1550 sft
3rd floor - 1850 sft
4th floor open Terrace-1450 sft
Lift from Ground to Terrace
**98423 58000**
**89737 61236**

---

**இடம் விற்பனைக்கு**
கோவை
ஆவாரம்பாளையத்தில்
விவிஐபி ஏரியாவில்
காமதேனு நகரில்
**34 சென்ட்**
ராமகிருஷ்ணா மருத்துவமனை எதிரில் இரு புறமும் ரோடு ஒரு புறம் 30 அடி ரோடு மறுபுறம் 20 அடி ரோடு வசதி உள்ளது.
விருப்பமுள்ளவர்கள் அனுகவும்
**88706 67555**

---

**இடம் விற்பனைக்கு**
நாகர்கோவில்
நேசமணி நகரிலும்,
குருகுலம் ரோட்டிலும்,
3, 4, 5, 8, 10, 15, 20
சென்று வீட்டுமனை
விற்பனைக்கு.
மொத்தமாகவோ, பிரித்தோ கொடுக்கப்படும்.
**8807025255**

---

**திருச்சி தில்லைநகர்**
4060 சதுர அடி
கிழக்கு பார்த்த
மனை
விற்பனைக்கு
**9840389116**

---

**Diwali Dhamaka**
1+1 OFFER
1KG SILVER +
8 GMS GOLD FREE



@ ANAKAPUTHUR
1 BHK FLAT
₹.22.99 L*
2 BHK FLAT
₹.38.50 L*
3 BHK FLAT
₹.56.99 L*
Onwards
visit our site
www.crest.homes
CREST HOMES PVT LTD
Elegant Affordable...
**89399 65050**

---

**LAND FOR SALE**
TADA-
SRIKALAHASTHI ROAD
76 ACRES
AGRICULTURE
PADDY LAND
@
VARADAIAH
PALEM
12 Lacks per Acre
★ Close to Sricity SEZ
**98588 27999**

---

அழகிய தனி வீடுகள்
மற்றும் வீட்டுமனைகள்
நேரடி விற்பனைக்கு
**சூலூர்**
வீட்டுமனைகள்
ஒரு சென்ட் ரூ.6.45 லட்சம் முதல்
தனி வீடுகள் 2 BHK
ரூ.49.75 லட்சம் முதல்
**95854 07000**
**95854 13000**
SAA

---

**பார்வதிபுரம்,**
**K.P.Road**
**(அம்மன்கோவில்)**
அருகாமையில்
10 Cent Plot,
6 அடி பாதை.
Contact
**8124348810**

---

**அடுக்கு மாடி குடியிருப்பு விற்பனைக்கு**
திருச்சி உறையூர்
பாண்டமங்கலத்தில்
8 வீடு கொண்ட
அடுக்கு மாடி குடியிருப்பு
விற்பனைக்கு உள்ளது.
மாத வாடகை வருமானம்
ரூ.1.50 இலட்சம்
செல்: **94434 31414**

---

**குன்றத்தூர்**
Near 6 KM
CMDA Apprd (Reg),
1200 Sqft
- Free Registration, EB
- Loan வசதி உண்டு
- உடனே வீடு கட்டலாம்

Per sqft 900/-
Ct : **6384722006**

---

**OFFICE**
SPACE FOR RENT @ GUINDY
✦ 1st Floor 1300-sft
✦ 2nd Floor 1300-sft
✦ 3rd Floor 1300-sft
**9841329316**

---

**வீடு போக்கியத்திற்கு**
சிங்காநல்லூர் ரெஜிஸ்டர்
அலுவலகம் அருகில்
வீடு 15LK
போக்கியத்திற்கு
மாதம் 10 ஆயிரம்
வட்டியும் தரப்படும்.
**63832 75255**

---

**வள்ளியூர்** அருகில்
DTCP APPROVED PLOTS
வீட்டுமனை: 3 சென்ட் ரூ. 6 லட்சம்
கமர்சியல் மனை: 16 சென்ட் ரூ. 48 லட்சம்
**9940 20 7778**

---

**விஜய் எஸ்டேட்**
VIJAY GROUP
(DTCP & RERA Approved Plot)
பஞ்சப்பூர் – தஞ்சாவூர் NH
**எல்லோரா நகர்**
தீபாவளி ஆஃபராக
LAND 1200 Sq.ft
299 Per Sq.ft மட்டுமே!
உடனடியாக வீடுகட்டி குடியேறும் வசதியுள்ள
**98431 37577 | 98434 55715**

---

**திண்டிவனம்**
அண்ணா யுனிவர்சிட்டி
இன்ஜினியரிங் காலேஜ் அருகில்
DTCP LAYOUT FOR SALE
அருமையான நிலத்தடி நீர்.
மொத்தமாகவும், சொசைட்டிக்கு
தேவைப்படுபவர்களும் அணுகவும்.
**9344624461 / 9840470762**

---

**விவசாய நிலம் தேவை**
WITH ROAD ACCESS
IN CHENGELPET AND
KANCHEEPURAM DISTRICT
DIRECT OWNER CALL OR MESSAGE TO:
**790 430 3768**
IMMEDIATE REGISTRATION

---

கவுண்டம்பாளையம் to
நல்லாம்பாளையம்
மெயின் ரோட்டில்
அருணா சோப் பேக்டரி எதிரில்
திசை - கிழக்கு பார்த்து
தரை தளம்,
Size 11x20 (1)
தண்ணீர், Toilet, Parking வசதி உண்டு.
**94867 44368**

---

மனை பிரிவுக்கு நல்ல இடம்
**59½ சென்ட்**
தென்னந்தோப்பு
இரணியல்
ரயில் நிலையம் அருகில்.
**9952982749**

---

**FLAT விற்பனைக்கு**
திருச்சி, கிராப்பட்டி, காலனி மெயின்ரோடு, காவேரி சூப்பர் மார்க்கெட் அருகில்
அடுக்குமாடி குடியிருப்பில், மேற்கு பார்த்த
2 BHK FLAT
(1183 Sqft),
Fully Furnished
கார் பார்க்கிங்,லிப்ட் வசதியுடன் விற்பனைக்கு உள்ளது.
புரோக்கர்கள் தவிர்க்கவும்.
தொடர்புக்கு: **98946 66055**

---

**JBM HOMES**
LAND
REQUIRED
ON ROAD
PROPERTY
SUITABLE FOR
RESIDENTIAL
CONSTRUCTION
@ ORAGADAM-
SRIPERUMBUDUR
ROAD
1-2 Acres
**9445045406/**
**8883042819**

---

**PA PROMOTERS**
CMDA & RERA APPROVED
தனி வீடு மற்றும் வீட்டுமனை
விற்பனைக்கு!
பூந்தமல்லி மெட்ரோ ரயில்வே
ஸ்டேஷன் அருகில்
வீட்டுமனை ₹26 இலட்சம் முதல்
தனி வீடு ₹53 இலட்சம் முதல்
சிறந்த முதலீடு அதிக லாபம் உறுதி!
Projects
பாரிவாக்கம் (Green Field)
சென்னரிகுப்பம் (Green Valley)
பிடாரிதாங்கல் (Green Park)
**9092960001**
**9092930001**

---

**புதிய வீடு விற்பனைக்கு**
கோவை இருகூரில்
2 portion மற்றும் 3BHK
வீடுகள் விற்பனைக்கு
விலை ரூ.60 லட்சம் முதல்
விலை ரூ.92 லட்சம் முதல்
விலை ரூ.85 லட்சம் முதல்



PEEKAY BUILDERS
**87540 04043**
**87540 04048**
SAA

---


**வீடு கட்டித்தரப்படும்**
வீட்டுமனை, வீடு விற்பனைக்கு
35 லட்சம் முதல்
60 லட்சம் வரை
மதிப்பிளான வீடுகள்
புத்தேரியில் புதிதாக
கட்டி கொடுக்கப்படும்.
கோட்டார் பழைய காங்கிரீட்
(700 சதுர அடி) வீடு ஒத்திக்கு
**8248387487**
**8248002400**

---

**COMMERCIAL SPACE AVAILABLE FOR RENT**
இடம்:
தென்னூர் அண்ணாநகர் மேற்கு
4-வது கிராஸ் விஸ்தரிப்பு
தரைதளம் மற்றும் முதல் தளம்
ஆபீஸ், குடோன் மற்றும்
சர்வீஸ் சென்டர் அமைக்க
ஏற்ற இடம். (CORNER PLOT)
தொடர்புக்கு: **94425 03249**
**88383 86425**
**77603 32166**



# பல்சுவை களஞ்சியம்



# மீம்ஸ்







# வாழைப்பழத்தின் வகைகளும், அதன் பயன்களும்!!

உலகில் மொத்தம் 3000 வாழை வகைகள் இருக்கின்றன. அதில் உள்ள ஒவ்வொரு வாழைப்பழமும் ஒவ்வொரு விதமான நோய்களை குணமாக்க உதவுகிறது.

**பூவன் பழம்**

பூவன் வாழைப்பழம் அளவில் சிறியதாக இருக்கும். ஆனால் ஒரு வாழைத்தாரில் 100 முதல் 150 பழங்கள் வரை இருக்கும். இப்பழம் மூலநோயை குணமாக்க பெரிதும் உதவுகிறது.

**ரஸ்தாளி**

ரஸ்தாளி வாழைப்பழத்தில் மருத்துவக் குணங்கள் குறைவாக இருந்தாலும் ருசி அதிகமாக உள்ளது. இனிப்புகள், சாலட்களில் சேர்க்கப்படும் இந்த ரஸ்தாளி பழம் உடல் வறட்சியைப் போக்க மற்றும் மஞ்சள் காமாலையைத் தடுக்க உதவுகிறது.

**பச்சை வாழைப்பழம்**

மலை வாழைப்பழம் எனப்படும் பச்சை வாழைப்பழம், குழந்தைகளுக்கு மிகவும் பிடித்தமான ஒன்றாகும். இது இரத்த உற்பத்தியை அதிகரிக்க உதவுகிறது.

**நேந்திரம் பழம்**

நேந்திரம் பழத்தை பச்சையாகவோ, அவித்தோ அல்லது சிப்ஸ் வடிவிலோ சாப்பிடலாம். புரதம் அதிகம் கொண்ட இந்த பழம் குடற்புழுக்களை அகற்ற உதவுகிறது.

**கற்பூரவள்ளி பழம்**

கற்பூரவள்ளி வாழைப்பழம் மிகவும் இனிப்பானது. ஆனால் இந்த பழத்தை நீண்ட நாட்களுக்கு வைத்து சாப்பிடுவது மிகவும் கஷ்டமாகும். இந்த பழமும் மலச்சிக்கல் பிரச்சனைப் போக்க உதவுகிறது.

**செவ்வாழைப்பழம்**

செவ்வாழைப்பழம் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்க மற்றும் உடலில் பலத்தை அதிகரித்து, செல்களின் செயல்பாட்டை சீராக்க உதவுகிறது.

**எலைச்சி**

எலைச்சி வகை வாழைப்பழமானது, சிறியதாக இருந்தாலும், அவை மிகச் சுவையானது. இப்பழம் மலச்சிக்கல் பிரச்சனையைக் குணமாக்க உதவுகிறது.

**பேயன் பழம்**

பேயன் வாழைப்பழமானது வயிறு மற்றும் குடல் புண்கள் போன்ற பிர ச்சனைகளை குணமாக்குவதுடன், உடல்சூட்டை தணிக்கிறது.







# கோவக்காயின் மருத்துவப் பயன்கள் !!!

நமக்கு ஏற்படும் பல நோய்களுக்கு இயற்கை தந்த காய்கள், பழங்கள் மற்றும் செடிகளே சிறந்த மருந்தாகப் பயன்படுகின்றன. அந்த வகையில் இன்று எளிதில் கிடைக்கக்கூடிய கோவக்காயை உணவில் சேர்த்துக் கொள்வதால் உண்டாகும் நன்மைகள்

**சர்க்கரை வியாதியைக் கட்டுப்படுத்தும் :**

கோவக்காய் பழங்காலத்திலிருந்தே நீரிழிவு நோய் மருத்துவத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் காய்கறிகளில் ஒன்று. தீவிரமில்லாத சர்க்கரை வியாதிக்கு கோவக்காய் நல்ல பலனை அளிக்கும். கோவக்காய் சாறு எடுத்துக் கொள்வதால் பக்க விளைவுகளும் அதிகம் ஏற்படுத்தாது.

**வாய்ப்புண் குணமாக :**

கோவக்காயில்; பச்சடி செய்து தொடர்ந்து இரண்டு நாட்கள் பகல் உணவில் சேர்த்தால் வாய்ப்புண் குணமாகும். பச்சையாகவே கோவக்காயை மென்று துப்பிவிட்டாலே வாய்ப்புண் ஆறிடும்.

வயிற்றுப்புண் இருப்பவர்கள் வாரம் இரண்டு நாள் கோவக்காயை சேர்த்துக் கொள்ளலாம். ஒரே ஒரு கோவக்காயை எடுத்து மோருடன் அரைத்து குடித்தாலும் வாய்ப்புண் குணமாகும்.

**நுரையீரல் பிரச்சனைகளைப் போக்கும் :**

கோவக்காயின் இலை மற்றும் தண்டு - கபத்தை வெளியேற்றும். வலியைக் குறைக்கும். இலை மற்றும் தண்டு - மார்புச்சளி, சுவாசக்குழாய் அடைப்பு இவற்றிற்கு நல்ல மருந்தாகும்.

**வயிற்றுப் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் :**


கோவக்காய் பித்தம், இரத்தப் பெருக்கு, வாயு, வயிற்றில் உள்ள பூச்சி ஆகியவற்றுக்கெல்லாம் முடிவு கட்டும் நல்ல மருந்தாகும். கோவக்காயின் இலைச் சாறு பித்தம், மூலநோய் ஆகியவற்றுக்கு சிறந்த மருந்தாகப் பயன்படுகிறது.

கோவக்காயில் உள்ள மெட்டபாலிக் தன்மைகள் நமது இதயத்துக்கு மிகவும் நல்லது. இது கல்லீரலுக்கும் நன்மை தரக் கூடியது. இது சர்க்கரை நோயாளிகளுக்கு மிகவும் ஏற்ற காய் ஆகும். மஞ்சள் காமாலை நோயாளிகள் இதை சாப்பிட்டால் விரைவில் குணம் அடையலாம்.

**ஆஸ்துமா குணமாக :**

கோவக்காய் இலைச் சாற்றை, காலை, மாலை என 30 மில்லி அளவு நான்கு நாட்கள் குடித்து வர சீதபேதி குணமாகும். கோவக்காய் மற்றும் வேர்க்கிழங்கு சாறு 10 மில்லி எடுத்து காலையில் மட்டும் குடித்து வந்தால் ஆஸ்துமா குணமாகும்.

கோவக்காய் உடல் சூட்டைத் தணிக்கும் ஆற்றல் உடையது. மேலும் கோவக்காய் உடலில் உள்ள நச்சுத் தன்மைகளை நீக்கும் குணம் கொண்டது. தேவையற்ற உணவுப் பழக்கங்களால் வயிற்றில் ஏற்படும் சூட்டைத் தணிக்கும் மற்றும் இரத்தத்தைச் சுத்தப்படுத்தும் ஆற்றல் உடையது.




A s Govinda rajan
Kodambakkam, Chennai



# விடுகதை

| | |
|---|---|
| என்னங்க ஏன் அடிக்கடி சமையல் ரூம் பக்கம் போறீங்க? | டாக்டர் தான் சுகர் இருக்கானா அடிக்கடி செக் பண்ண சொன்னாரு. |
| தானத்தில் பெரிய தானம் எது? | மைதானம். |
| ஏன்டா நாய் படம் வரைந்து விட்டு வாய் மட்டும வரையாமல் வச்சி இருக்க? | அது வாயில்லா பிராணி சார். |
| டாக்டர் இவ்வளவு மாத்திரையும் இரண்டு நாள்ல சாப்பிட்டு முடிக்கும் என்று சொன்னிங்களே ஏன்? | இரண்டு நாட்களுக்கு அப்புறம் எக்ஸ் ஸ்ப்ரே முடிந்துவிடும். |
| கும்பகர்ணன் மாத கணக்கில் தூங்கினான் அது என்ன காலம்? | கொசுவே இல்லாத காலம். |

# ஜோக்ஸ்



**ஆசிரியர் மாணவர் ஜோக்ஸ்**

பத்து நாளா கிளாஸுக்கு வரதில்லை?

ஒரே இடத்துக்கு அடிக்கடி போன மரியாதை இருக்காதுனு, எங்க அப்பா சொல்லி இருக்கார். அதான் சார் வரல!

**கடி ஜோக்ஸ்:**

டேய் ராமு! காலில் முள் குத்தியது இது என்ன காலம்?

கஷ்டகாலம், சார்.

வள்ளுவருக்கு அதிகாரம் செய்வது என்றால் ரொம்ப பிடிக்குமா சார்?

ஏன் அப்படி?

1330 குறலையும் 133 “அதிகாரமா” எழுதியிருக்காரே அதான் கேட்டான்.

உங்க ஆசிரியர் ஒரு மாதத்தில் சுமாராய் எத்தனை பாடங்கள் நடத்துவார்?



எல்லா பாடங்களையும் “சுமாராய்” தான் நடத்துவார்!

இந்தியாவில் எங்கெல்லாம் பெட்ரோல் கிடைக்கும்?

எல்லா பெட்ரோல் பங்கிலும் கிடைக்கும், சார்!

ஏன்டா பரிட்சை எழுத வந்துட்டு தூங்குற?

கேள்விக்கு பதில் தெரியலனா சும்மா “முழிச்சு”க்கிட்டு இருக்க கூடாதுன்னு எங்க அப்பா தான் சொன்னாங்க சார்.







ருத்ரேஷ்
3 ம்வகுப்பு




மிந்ரேஷ்
7 ம்வகுப்பு



சித்திரம் வரையக்
கற்றுக்கொள்
சிந்தையைச் சிறப்பாய்
வைத்துக்கொள்
வண்ணங்கள் குழைப்பது
கலையன்றோ
எண்ணங்கள் மணப்பது
சுவையன்றோ...

நிற்கும் மரங்கள் அழகன்றோ
பறக்கும் பறவை அழகன்றோ
மிதக்கும் படகு அழகன்றோ
தாவும் தவளை அழகன்றோ...

சித்திரம் வரையக் கற்றுக்கொள்
சிந்தையைச் சிறப்பாய்
வைத்துக்கொள்
தூரிகைப் பிடிப்பது
திறனன்றோ
தூய்மைக் குணமும்
உயர்வன்றோ..

சின்னப் பூக்கள் சித்திரமாய்
சிரிக்கச் சிரிக்க வரையலாம்
குட்டி குட்டிச் செடிகளை
எட்டி எட்டி வரையலாம்..
சித்திரம் வரையக் கற்றுக்கொள்
சிந்தையைச் சிறப்பாய்
வைத்துக்கொள்
எதையும் கற்க இன்பந்தாம்
ஏற்றம் வாழ்வில்
நிச்சயந்தாம்...

# நாங்களும் நல்லவர்களே..!



ஒரு காட்டில் நரிகளும் மற்ற விலங்குகளும் வாழ்ந்து கொண்டிருந்தன. அந்த காட்டில் நரிகள் என்றாலே ஏமாற்றுப் பேர்வழிகள் என்று பெயர் பெற்றிருந்தன. அதனால் அந்தக் காட்டுக்குள் இருக்கும் நரிகளை எல்லா விலங்குகளும் அடித்து விரட்டின. அதனால் நரிகள் அந்தக் காட்டை விட்டு வெளியேறி அடுத்த காட்டிற்குச் சென்றுவிட்டன.

இரண்டு தலைமுறைகள் கடந்துவிட்டது. மூன்றாவது தலைமுறையில் பரதன் என்ற இளம் நரி இருந்தது. அந்த நரி அவமானத்தை துடைத்து திரும்பவும் சொந்த காட்டில் நாம் வாழ வேண்டும். நம் இனத்தையும் சொந்த காட்டிற்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று எண்ணியது.

அதற்காக பழைய காட்டிற்கு சென்றது. பரதனைக் கண்ட வயதான விலங்குகள் நரியை அடையாளம் கண்டு கொண்டு, இவன் இங்கு எதற்கு வந்தான் என்று முறைத்து பார்த்தனர். அவனிடம் யாரும் பேச வேண்டாம்! என்று இளைய தலைமுறைக்கு உத்தரவிட்டன.

எங்கள் இனத்தை சகுனி குணம் படைத்தவர்கள், கூட இருந்தே குழி பறிப்பவர்கள். தந்திரசாலிகள் என்று யாரோ கட்டிவிட்ட கதையை நம்பாதீர்கள். நாங்கள் மட்டும்தான் கெட்டவர்களா? மலர்களில் எல்லாமே மணமிக்கதா? மணமற்றவையும் கலந்துதான் உள்ளன. எங்களிலும் நல்லவர் இருக்கிறோம் என்று வாதம் செய்து விலங்குகளிடம் நியாயம் கேட்டது.

ஆனால் எல்லா விலங்குகளும் அதை ஏற்பதாக இல்லை. நீ இங்கிருந்து ஓடிப் போய்விடு! என்று மற்ற விலங்குகள் பரதன் நரியை விரட்டின. மனம் உடைந்த நரி, மலை மீதேறி கீழே விழுந்து உயிரை விட்டுவிட முடிவெடுத்தது.

அப்போது அங்கிருந்த குயில், நரி அண்ணே உங்கள் இனத்தின் அவப்பெயரை துடைக்க தானே புறப்பட்டு வந்தீர்கள்? ஒரு லட்சியத்தை சுலபமாக அடைய முடியாது. விலங்குகள் போற்றும்படி செய்து அவைகளின் நம்பிக்கையைப் பெற்றால் உங்கள் குறிக்கோள் வெற்றி பெறும். முதலில் முயற்சி செய்யுங்கள்! என்று கூறியது.

இதைக் கேட்ட நரி, நீ கூறுவதும் சரிதான் என்று கூறி தன் தற்கொலை முடிவை கைவிட்டு, புத்திசாலித்தனமாக செயல்பட முடிவெடுத்தது. இதற்காக வேடர்கள் வலை விரித்திருப்பதை முன்பே அறிந்து, அதை பறவைகளிடம் கூறி நன்மதிப்பைப் பெற்றது நரி. அதேபோல காலுடைந்த முயலை பத்திரமாக அதன் இருப்பிடத்திற்கு அழைத்து வந்து விட்டது. ஒரு மரத்தில் இருந்து தவறி விழுந்த குருவி குஞ்சை, அதன் கூட்டில் எடுத்து வைத்தது. இதைக் கண்ட தாய்ப்பறவை நரியை வாழ்த்தியது.

இதுபோல சின்னச் சின்ன உதவிகளை செய்து நரி கொஞ்சம் கொஞ்சமாக நற்பெயர் பெற்று வந்தது. ஒரு நாள் வேட்டைக்காரர்கள், பெரிய பள்ளம் வெட்டி இலை தழைகளால் மூடி வைப்பதை நரி பார்த்தது. அந்தப் பக்கமாக வந்த யானைக் கூட்டத்தை எச்சரிக்கை செய்து யானைகளை காப்பாற்றியது.

யானைக்கூட்டம் காட்டுக்கு ராஜாவான சிங்கத்திடம் நரி செய்த உதவியை சொல்லின. அதேபோல முயல், புறாக்கள் என அனைத்து பறவைகளும் தங்களுக்கு நரி செய்த நன்மையைக் கூறினர். இதைக்கேட்ட சிங்கராஜா, நரிகளை தங்கள் காட்டில் சேர்த்துக் கொள்வதாக முடிவெடுத்தது. இதைக் கேட்டதும் பரதன் சந்தோஷமாக தங்கள் வசிப்பிடத்திற்குச் சென்று, மற்ற நரிக்கூட்டங்களை அழைத்து வந்து தனது சொந்தகாட்டில் மகிழ்ச்சியாக வாழத் தொடங்கியது.

தத்துவம் :
உலகில் நல்லவர்களும் இருக்கிறார்கள், கெட்டவர்களும் இருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக அனைவரையும் தீயவர்கள் என்று நினைக்கக்கூடாது. அது நாம் செய்யும் பெரும் தவறாகும்.

# இறைவன் படைப்பு




ஒரு காட்டில் ஒரு முயல் ஓடி விளையாடிக் கொண்டிருந்தது. அதை பார்த்துக் கொண்டிருந்த ஆமை. நம்மால் ஏற்கனவே வேகமாக போக முடியாது இதில், முதுகில் வேறு பாரமாக ஓடும். முயலைப் பார்த்து பொறாமைப்படுவதில் பயன் இல்லை என்னை இப்படிப் படைத்ததற்காக ஆண்டவனைத்தான் நொந்து கொள்ளவேண்டும் என ஆமை எண்ணியது.

அப்போது அன்று இறை எதுவும் கிடைக்காததால் அலைந்து கொண்டிருந்த சிங்கம், விளையாடிக்கொண்டிருந்த முயலைப்பிடிக்க பாய்ந்தது. முயல் ஒரே ஓட்டமாக ஓடி ஒளிந்தது. ஆமையோ, தன் கூட்டுக்குள் முடங்கியது.

சிறிது நேரத்தில் சிங்கம் சென்றுவிட முயல் பயத்தில் அவ்விடம் வந்ததும், ஆமை தன் கூட்டிலிருந்து தலையை நீட்டிப் பார்த்தது. ஒவ்வொரு விநாடியும் மரணபயத்திலேயே முயல் வாழ்நாளை கழிக்க வேண்டியிருக்கையில், விலங்குகளிடமிருந்து காத்துக்கொள்ள தன் முதுகிலேயே தனக்கு கூட்டையும் கொடுத்த இறைவனை நிந்தித்தது எவ்வளவு தவறு என உணர்ந்தது.

இறைவன் படைப்பில் ஒவ்வொரு உயிர்க்கும் ஒவ்வொரு தனித்தன்மை உண்டு. அந்த தனித்தன்மையை உபயோகித்து ஆபத்துக் காலங்களில் தப்பிக்கலாம். இதுவே இறைவன் கருணை என்பதை உணர்ந்தது ஆமை.

# ஒற்றுமை.!!

ஒரு வயல் வரப்பில் மூன்று கொக்குகள் ஒற்றுமையாக வாழ்ந்து கொண்டிருந்தன. எங்கு சென்றாலும், ஒன்றாக சென்றன. இரை தேடச் சென்றாலும் கிடைத்த இரையை மூன்று கொக்குகளும் பகிர்ந்து உணவு உண்டு வாழ்ந்து வந்தன. இவர்கள் ஒற்றுமையுடன் இருப்பது மற்ற விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் பொறாமையாக இருந்தது.

அங்கிருந்த நரி ஒன்று, அந்த மூன்று கொக்குகளையும் பிரித்தே தீருவேன் என்று சபதமிட்டபடி களம் இறங்கி சூழ்ச்சி செய்ய ஆரம்பித்தது. ஒரு நாள் மூன்று கொக்குகளும் வயல் வரப்பில் இரை தேடிக்கொண்டிருந்தன. நரி தன் சூழ்ச்சியை பயன்படுத்த திட்டமிட்டது.

அதன்படி முதலில் மூன்று கொக்குகளிடமும் நட்பை ஏற்படுத்திக் கொண்டது. சிறிது நாட்களுக்கு பிறகு, தனிமையில் இருந்த ஒரு கொக்கிடம் சென்று, கொக்கு நண்பரே! இவ்வளவு அழகாக இருக்கும் நீங்கள், அவலட்சணத்தின் ஒட்டு மொத்த உருவமாக திகழும் உங்கள் நண்பர் கொக்குகளுடன் எப்படி நட்புடன் இருக்கிறீர்கள்! உங்கள் அழகுக்கும் அந்தஸ்துக்கும் அவர்கள் நட்பு சரியானதா? என்று கேட்டது.
இதனை கேட்ட கொக்குவிற்கு நரி சொன்னது உண்மையாக இருக்குமோ என்ற சந்தேகம் ஏற்பட்டது. என்ன செய்வது! எல்லாம் என் நேரம் என்றபடி புலம்பியது.
வந்த காரியம் முடிந்த திருப்தியில் உடனே நரி அந்த இடத்தை விட்டு சென்றது. இப்போது நரி இரண்டாவது கொக்குவிடம் சென்றது. கொக்கு நண்பரே எப்படி உள்ளீர்கள் என்று நலம் விசாரித்தது.

நலம் நரி நண்பரே, என்று பதிலுக்கு இரண்டாவது கொக்கு கூறியது. இப்போது தன் சூழ்ச்சியை தொடங்கியது நரி. கொக்கு நண்பரே! நீர் எவ்வளவு அறிவு உடையவர். எந்த குளத்தில் எவ்வளவு மீன்கள் உள்ளது என்பதை உங்களுடைய அறிவால் கண்டுபிடித்து விடுவீர்கள். இவ்வளவு அறிவுடைய நீங்கள் ஒன்றும் தெரியாத உங்கள் நண்பர் கொக்குகளுடன் நட்பு கொள்வதா? என்று சூழ்ச்சியை கிளப்பிவிட்டது. நரி கூறிய வார்த்தைகளால், இரண்டாவது கொக்குவும் யோசனை செய்ய ஆரம்பித்தது. நரி தான் வந்த வேலை முடிந்த திருப்தியில் கிளம்பிப் போனது.
இப்போது மூன்றாவது கொக்குவிடம் நரி சென்றது. அந்த கொக்குவிடம், கொக்கு நண்பரே! நீங்கள் எவ்வளவு வீரம் படைத்தவர். இரை பிடிப்பதிலும்! பறப்பதிலும், எவ்வளவு வீரமானவர். இவ்வளவு வீரம் உடைய நீங்கள் ஒன்றுக்கும் உதவாத மற்ற இரண்டு நண்பர் கொக்குகளுடன் சுற்றித் திரிந்தால் உங்களின் வீரமே உமக்கு மறந்துவிடும்! என்று கொக்குவிடம் கூறியது.

நரியின் சூழ்ச்சியால் அந்த மூன்று கொக்குகளுக்குள் நாளடைவில் பகைமையும், யார் பெரியவன் என்ற சண்டையும் ஏற்பட்டது. ஒன்றுடன் ஒன்று சண்டை போட்டுக் கொண்டன. இதனால் ஒற்றுமையுடன் இருந்த மூன்று கொக்குகளும் தனித்தனியே பிரிந்தன.

இவற்றையெல்லாம், பார்த்துக் கொண்டிருந்த கிளி ஒன்று, மூன்று கொக்குகளையும் சந்தித்து நரியின் சதித் திட்டத்தை சொல்லி முடித்தது. இதனைக் கேட்ட மூன்று கொக்குகளும்! நரியின் சூழ்ச்சியை புரிந்து கொண்டன. நல்ல நட்பை இழந்தோமே! என்று வருந்தின. இதுபோல் இனிமேல் புகழ்ச்சிக்கு மயங்காதீர்கள்! என்று கிளி அறிவுரை கூறிய பின்பு மூன்று கொக்குகளும் மறுபடியும் நட்புடன் இருந்தன.



தத்துவம் :
முன்பின் தெரியாதவர்கள் தேவையில்லாமல் நம்மைப் புகழ்ந்தால் அதற்கு மயங்கி விடக்கூடாது. அப்படி மயங்கும் பலவீனம் ஒருவருக்குள் இருந்தால் அவரை மற்றவர்கள் விரைவில் தங்கள் வசப்படுத்திவிட முடியும்.

# மழைக் காலம்..!



மழைக்காலம் இது
மழைக்காலம்
மண்ணும் மனமும் குளிரும்
எனக்குப் பிடித்த மழைக்காலம்
மழையில் நனைந்து மகிழலாம்
செடிகள் நட்டும் மகிழலாம்.

தட்டான் தாழப் பறக்குமே
குருவிகள் அதனைப் பிடிக்கும்
மாலை வந்தால் தவளையுமே
மகிழ்ச்சியாக கத்துமே
கொசுக்களைப் பிடித்துத்
தின்னுமே.

காணும் இடம் எங்குமே
தானாய் செடிகள் முளைக்குமே
தேவையான செடிகளையே
பிடுங்கி வீட்டில் நடலாமே
வீடும் தோட்டமாய் மாறுமே.

மழையில் நனைவது மகிழ்ச்சி
தான்
ஆனாலும் நோய்கள் பரவுமே
நோய்கள் வந்த உடனேயே
மருத்துவரிடம் சென்று விட்டால்
மகிழ்ச்சி என்றும் தொடருமே.



- ச.கிறிஸ்து ஞான வள்ளுவன்.
வேம்பார்.



வா.. வா.. அக்கா
இங்கே வா... வா..

தம்பி மானே வந்தேன்
சொல்லு...

கொம்பு நமக்கு
எதுக்கு அக்கா?

நம்மைக் காக்கக்
கொம்பு வேணும்...
நம்மைக் காக்கக்
கொம்பு வேணும்..

எதிரி வந்தால்
எதிர்த்து நிற்க தம்பி
நமக்குக் கொம்பு
நிச்சயம் வேணும்.. .

எப்போ வளரும்
கொம்பு எனக்கு?
இப்பவே அக்கா
சொல்லுங்க...

இன்னும் தம்பி நீயும்
வளரவேணும்
தெரிஞ்சுக்கோ..
வளர வளர எல்லாமும்
தானாத் தெரியும்
புரிஞ்சுக்கோ..

இப்ப என்ன செய்யணும்
அக்கா நீங்க சொல்லுங்க..

அம்மா பேச்சை கேக்கணும்
அப்பா பேச்சைக் கேக்கணும்
அக்கா சொல்றேன்
ஓடிவா...



குட்டி மான் ஓடுது
குட்டி முயலும் ஓடுது
எட்டி எட்டிப் பறந்தே
பட்டாம்பூச்சி சிரிக்குது...

குட்டிக் குரங்கு தாவுது
குட்டி அணிலும் தாவுது
எட்டி எட்டிப் பார்த்தே
பச்சைக்கிளி சிரிக்குது...

குட்டிப் பூனை கத்துது
குட்டி நாயும் கத்துது
எட்டி எட்டிக் குதித்தே
எலிக்குட்டி சிரிக்குது...

குட்டித் தவளை நீந்துது
குட்டி மீனும் நீந்துது
எட்டி எட்டிப் பார்த்தே
குட்டி வாத்தும் சிரிக்குது..

குட்டிக் குட்டி அன்பிலே
எல்லாம் இங்கே நடக்குது
எட்டி எட்டிப் பார்த்தே
குட்டி நிலா சிரிக்குது..

ஹரணி
தஞ்சாவூர்

இந்த பகுதியில்
உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்
whatsapp No
8122664699

## ஆதிகேசவர் பவித்திர உற்சவம்




சென்னை மயிலையில் நேற்று ஆதிகேசவர் பவித்திர உற்சவம் நடந்தது.

## ஆவின் விற்பனை நிலையம் திறப்பு



குமரி மாவட்டம் கருங்கலில் ஆவின் விற்பனை நிலையத்தை அமைச்சர் மனோ தங்கராஜ் துவக்கி வைத்தார்.

## கங்கைவராக நதீஸ்வரர் கோவிலில் பவித்ரோற்சவம்



திருக்காஞ்சி கங்கைவராக நதீஸ்வரர் கோவிலில் நடந்த பவித்ரோற்சவத்தில் பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

## புரட்டாசி மாதம் பௌர்ணமி கிரிவலம்




திருவண்ணாமலை அண்ணாமலையார் மலை கிரிவலம் புரட்டாசி மாதம் பௌர்ணமி கிரிவலம் கொட்டும் மழையும் பாராமல் லட்சக்கணக்கான கூட்டம் கிரிவலம் சென்று 14 கிலோமீட்டர் கிரிவலம் சுற்றி வந்தனர். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## ஜெகத்ரட்சகன் எம்.பி. தலைமையில் ஆய்வுக்கூட்டம்




ராணிப்பேட்டை மாவட்டத்தில் மத்திய அரசின் திட்டங்களின் முன்னேற்றங்கள் குறித்து அரக்கோணம் எம்.பி. ஜெகத்ரட்சகன் தலைமையில் நேற்று ஆய்வுக்கூட்டம் நடந்தது. அருகில், அமைச்சர் காந்தி, கலெக்டர் சந்திரகலா .

## பேருந்து நிழல் கூடத்தினை பார்வையிட்டு ஆய்வு செய்த

**ராணிப்பேட்டை, அக். 8:**
ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் சந்திரன் அவர்கள் ஆற்காடு ஊராட்சி ஒன்றியம் கிளாம்பாடி ஊராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ ,8 லட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள பேருந்து நிழல் கூடத்தினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.



உடன் திட்ட இயக்குனர் ஊரக வளர்ச்சி முகமை சரண்யா தேவி , செயற்பொறியாளர் செந்தில்குமார், வட்டார வளர்ச்சி அலுவலர் அன்பரசன், உதவி செயற்பொறியாளர் பிரியா , வட்டாட்சியர் மகாலட்சுமி, ஊராட்சி மன்ற தலைவர் சுதா பாலாஜி மற்றும் பலர் உள்ளனர்.

## ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் அஷ்டபந்தனம் சாற்றுதல், ஸ்ரீசத்திய நாராயண பூஜை

**கடலூர், அக். 8:**
ஸ்ரீவாசவிகன்யகாபரமேஸ்வரி அம்மன் அஷ்டபந்தனம் சாற்றுதல், ஸ்ரீசத்திய நாராயண பூஜை நடந்தது.



கடலூர் மாவட்டம் புவனகிரி கடைவீதியில் அமைந்திருக்கும் அக்டோபர்-7 ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மனுக்கு ஞாயிற்றுக்கிழமை மாலை அஷ்டபந்தனம் சாற்றுதல், பௌர்ணமி கலச பூஜை, ஹோமங்கள், அஷ்டபந்தனை சாற்றுதலும் நடைபெற்றது.

திங்கட்கிழமை அதிகாலை 5 மணிக்கு மேல் வேத ஹோமங்கள், பூர்ணாஹுதியும் 7.15 மணிக்குள் அம்பாளுக்கு தீர்த்த கலசாபிஷேகம், ஸ்ரீசத்யநாராயணா பூஜை,9.15 மணிக்கு மஹா தீபாராதனையும் நடைபெற்றது. ஐந்து கதை சிரவணம் செய்து நமது வைஸ்ய தம்பதிகள் அனைவரும் பூஜை செய்து உத்தியாவனம் ஆச்சார்யாள் ஸ்வாமிக்கு அளித்து மதியம் 1:30 மணிக்கு தீபாராதனையும் நடைபெற்றது.

ஆகிய இரண்டு நாட்களும் வெகு சிறப்பாக பூஜைகளும் நடைபெற்றது. மக்கள் அம்பாளின் அனுகிரஹத்தையும், ஸ்ரீசத்யநாராயணரையும் வேண்டி அருள் பெற்றனர்.

இவ்விழாவை ஏற்பாடு செய்தவர்கள் ஆர்ய வைஸ்ய சமாஜம் புவனகிரி.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

## சீர்காழி ஸ்ரீ சீரடி சாய்பாபா தியான ஆலயத்தில் சாய் பாபா சமாது தின விழா

**சீர்காழி , அக் , 08:**
ஸமர்த்த ஸத்குரு ஸ்ரீ ஷீரடி சாய்நாதரின் திருவருளால் மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தென்பாதியில் அமைந்துள்ள கலியுக தெய்வம் ஸ்ரீசத்குரு சாய்பாபா ஆலயத்தில் நவ ராத்திரி கொலு பூஜை , விஜயதசமி விழா , சாய் பாபா சமாது தின விழா ஆகிய நிகழ்ச்சிகளை முன்னிட்டு காலை 9.00 மணிக்கு கணபதி ஹோமம், நவக்கிரஹ ஹோமம், விருட்சிந்திய ஹோமம், தன்வந்திரி ஹோமம், லெட்சுமி ஹோமம், கண்திருஷ்டி ஹோமம், கடம் புறப்பாடு, கடம் அபிஷேகம் தொடர்ந்து மதிய ஆரத்தி முடிந்து வடை பாயசத்துடன் மஹா அன்னதானம் நடைபெற்றது.

விழா ஏற்பாடுகளை ஸ்ரீ சீரடி சாய்பாபா டிரஸ்ட் மற்றும் ஆலய நிர்வாகிகள் செய்தார்கள்.





## உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்

சித்தேரி மலைக் கிராமத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமை தர்மபுரி எம்.பி., மணி தொடங்கி வைத்து பொதுமக்களிடமிருந்புது மனுக்களை பெற்றார்.

## மருத்துவ காப்பீடு திட்ட அடையாள அட்டை



மயிலாடுதுறை மாவட்டம் திருகளாச்சேரியில் நடந்த உங்களுடன் ஸ்டாலின் முகாமில், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்ட அடையாள அட்டை வேண்டி விண்ணப்பித்த பயனாளிக்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து காப்பீடு திட்ட அடையாள அட்டையை கலெக்டர் ஸ்ரீகாந்த் வழங்கினார்.

## உங்களுடன் ஸ்டாலின் முகாம்



நாகர்கோவில் மாநகராட்சி வைத்தியநாதபுரத்தில் உங்களுடன் ஸ்டாலின்" முகாம் திட்டத்தினை மேயர் மகேஷ் , மாநகராட்சி ஆணையாளர் நிஷாந்த் கிருஷ்ணாபார்வையிட்டு பொதுமக்களிடம் இருந்து மனுக்களை பெற்று நிறை குறைகளை கேட்டறிந்தனர்..

## மாணவியர்களுக்கான கல்லூரி களப்பயணம்



கோவையில் அரசு பள்ளி மாணவியர்களுக்கான கல்லூரி களப்பயணத்தை கலெக்டர் பவன்குமார் துவக்கி வைத்தார்.

## தீபாவளி பண்டிகை நலத்திட்டங்கள்



கோவையில் இந்திய ஜனநாயக கட்சி சார்பாக தீபாவளி பண்டிகை நலத்திட்டங்கள் வழங்கப்பட்டன. புத்தாடைகள், மாணவர்களுக்கு சைக்கிள்களை இணைப் பொதுச்செயலாளர் லீனாரோஸ் மார்ட்டின் வழங்கினார்.

## மகா சமுத்திர தீர்த்த ஆரத்தி



கன்னியாகுமரி முக்கடல் சங்கமத்தில் மகா சமுத்திர தீர்த்த ஆரத்தி நடந்தது. தளவாய் சுந்தரம் எம்.எல்.ஏ. தீபம் ஏற்றி தொடங்கி வைத்தார்.




## பெங்களூரில் நடைபெற்ற தென்னிந்திய அளவிலான ரோல்பால் போட்டியில் முதலிடம் பிடித்து சாதனை படைத்த சின்னாளபட்டி மாணவர்களுக்கு பாராட்டு

**நிலக்கோட்டை, அக்.08:**
பெங்களூரில் நடைபெற்றதென்னிந்திய அளவிலான ரோல்பால் போட்டியில் தமிழக அணி சார்பில் கலந்துகொண்டு முதலிடம் பிடித்து சாதனை படைத்த சின்னாளபட்டி மாணவர்களை பாராட்டி பரிசுகள் வழங்கி பாராட்டினர்.



திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டியில் கடந்த வாரம் பெங்களூரில் நடைபெற்ற 14 நான்கு வயதிற்குட்பட்டோருக்காள தென் இந்தியப அளவிலான ரோல்பால் போட்டியில்,தமிழக அணி சார்பில் கலந்துகொண்டு முதலிடம் பிடித்து சாதனை படைத்த சின்னாளப்பட்டி மாணவர்களை பாராட்டி பரிசுகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு சின்னாளப் பட்டி டிரீம் ரோட்டரி சங்கத்தின் தலைவர் செல்வகுமார் தலைமை வகித்தார்,மாவட்ட ஆளுனர் கார்த்திக் முன்னிலை வகித்தார்.

ராஜன் உள் விளையாட்டு அரங்க நிர்வாக இயக்குனர் தங்கலெட்சுமி வரவேற்றார், நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட மாவட்ட தலைவர் ரோட்டரி சங்க மீனா,சர்வதேச நடுவர் பிரேம்நாத் ஆகியோர் சாதனை படைத்த மாணவ மாணவியர்களை பாராட்டி பரிசுகள் வழங்கினர்.

மேலும் இந்த பாராட்டு நிகழ்ச்சியில் ரோட்டரி சங்க நிர்வாகிகள்,பெற்றோர்கள் மற்றும் சக மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

## தேசிய அஞ்சல் தினம்




**இராமநாதபுரம், அக். 8:**
இராமநாதபுரம் கடலாடி அரசு மேல்நிலைப் பள்ளியில் தேசிய அஞ்சல் தினம் 07/10/2015 செவ்வாய்க்கிழமை அன்று சிறப்பாக நடைபெற்றது. இதில் திரு. நாகராஜன் தலைமை ஆசிரியர் தலைமை வகித்தார். விழாவில் திரு. சுப்பையா அஞ்சல் ஆய்வாளர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ஆசிரியர்களுக்கும் மாணவ மாணவிகளுக்கும் பெற்றோர்களுக்கும் சேமிப்பின் முக்கியத்துவம் மற்றும் காப்பீடு திட்டங்கள் பற்றி விளக்கினார். நிகழ்ச்சியை க.சக்திகுமார் தமிழாசிரியர் தொகுத்து வழங்கினார். திரு. சொக்கர் ஆசிரியர் நன்றியுரை வழங்கினார்.

# சுற்றுலா: புவியீர்ப்பு விசைக்கு சவால் விடும் மர்மமான 5 இடங்கள்!




புவியீர்ப்பு விசை, பூமியில் நாம் நிலைத்திருக்க உதவும் முக்கிய சக்தி. ஆனால், இந்த சக்தி வேலை செய்யாதது போல தோன்ற வைக்கும் சில இடங்களும் பூமியில் இருக்கத்தான் செய்கின்றன. இந்த இடங்களில், கார்கள் தானாகவே மேலே போகும்; தண்ணீர் பின்னோக்கி பாயும்; மக்கள் நேராக நிற்க முடியாமல் சாய்ந்து நிற்பார்கள். இது பெரும்பாலும் OPTICAL ILLUSION என்ற விளைவால் ஏற்படுகிறது. ஆனாலும், இதை நேரில் பார்ப்பது ஒரு வித்தியாசமான அனுபவத்தை தரவல்லது. அப்படி புவியீர்ப்பு விசை இல்லாததுபோல தோன்றவைக்கும் பூமியின் 5 இடங்களை பற்றி இங்கே பார்க்கலாம்.

**1. காந்த மலை:**

இந்தியாவின் லடாக்கில் உள்ள இந்த காந்த மலை மிகவும் பிரபலமான ஒரு இடம். இங்கு, வண்டியை நியூட்ரலில் நிறுத்தி வைத்தால், அது தானாகவே மேல்நோக்கி செல்லும். அந்த மலையின் காந்த சக்திதான் இதற்குக் காரணம் என மக்கள் நம்புகிறார்கள். ஆனால், உண்மையில் இது OPTICAL ILLUSION என விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். காரணம் எதுவாக இருந்தாலும், இதை நேரில் பார்ப்பது ஒரு ஆச்சரியமான அனுபவமாக இருக்கும்.

**2. மர்மமான இடம் :**

1939-ஆம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்ட இந்த இடம், அமெரிக்காவின் சான்டா குரூஸ் பகுதியில் அமைந்துள்ளது. இது புவியீர்ப்பு விசை இல்லாதது போல தோன்றும் ஒரு சுற்றுலா மையம். இங்கு ஒரு சாய்ந்த அறையில், மக்கள் கீழே விழாமல் சாய்ந்து நிற்பார்கள். பந்துகள் தானாக மேல்நோக்கி உருளும். இந்த அனுபவம், கட்டிடத்தை ஒரு குறிப்பிட்ட கோணத்தில் கட்டியதால் ஏற்படுகிறது. இது அறிவியல் மற்றும் வேடிக்கை கலந்த ஒரு இடம்.

**3. ஈர்ப்பு மலை:**

அமெரிக்காவின் பென்சில்வேனியாவில் உள்ள இந்த மலை, காந்த மலை போலவே செயல்படுகிறது. இங்கு, நியூட்ரலில் விடப்படும் கார்கள் தானாகவே மேல்நோக்கி செல்லும்.

இங்கு வரும் மக்கள் இதை தங்களது வண்டியில் முயற்சி செய்து பார்க்க விரும்புவார்கள். இதுவும் சாலையின் சாய்வு மற்றும் சுற்றி உள்ள நிலப்பரப்பால் ஏற்படும் ஒருவித OPTICAL ILLUSION தான்.

**4. ஸ்பூக் ஹில்:**

அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ளது ஸ்பூக் மலை. இந்த இடத்திற்கு பயமுறுத்தும் பெயர் இருந்தாலும், இங்கே நடக்கும் நிகழ்வு சுவாரஸ்யமானது. இங்கு நியூட்ரலில் இருக்கும் கார்கள் மேல்நோக்கி செல்வதை பார்க்கலாம். ஒரு பழங்குடி தலைவர் மற்றும் ஒரு பெரிய முதலைக்கு இடையே நடந்த போரினால் இது ஏற்பட்டது என்று இங்கு ஒரு கதை உண்டு.

**5. தங்க பாறை :**

மியான்மரில் உள்ள இந்த தங்க பாறை, ஒரு பெரிய பாறையின் விளிம்பில் தொங்கிக் கொண்டிருப்பது போல தோன்றும். இது கீழே விழாமல் பல நூற்றாண்டுகளாக அப்படியே இருக்கிறது.

புத்தரின் ஒரு முடிதான் இதை தாங்கிப் பிடிப்பதாக என்ற கதையும் இந்த இடத்திற்கு உண்டு. இந்த பாறை, நம்பிக்கைக்கும் அறிவியலுக்கும் இடையே உள்ள மர்மமான இடமாக பார்க்கப்படுகிறது.

## வேலைவாய்ப்பு கார்னர்

### திருச்சி ஐஐஎம்-இல் நூலகப் பயிற்சியாளர் பணிக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு!

திருச்சியிலுள்ள இந்திய மேலாண்மை நிறுவனத்தின் கற்றல் வளம்(Learning Resource) மையத்தால் வழங்கப்படும் நூலகர் பயிற்சிக்கு தகுதியானவர்களிடம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

வேலைவாய்ப்பு அறிவிப்பு எண்.: IIMT/LIB/TRA/2025/02 பணி: Library Trainee




காலியிடங்கள்: 3

சம்பளம்: மாதம் ரூ.23,000

வயது வரம்பு : 10.10.2025 தேதியின்படி 28-க்குள் இருக்க வேண்டும். உச்ச வயதுவரம்பில் எஸ்சி, எஸ்டி, ஓபிசி, மாற்றுத்திறனாளி பிரிவினர்களுக்கு அரசு விதிமுறையின்படி சலுகை வழங்கப்படும்.

தகுதி: நூலகம் மற்றும் தகவல் அறிவியல்(Library and Information Science)பிரிவில் முதுநிலைப்பட்டம் பெற்றிருக்க வேண்டும். கணினியில் பணிபுரியும் திறன் பெற்றிருக்க வேண்டும். பணி அனுபவம் பெற்றிருப்பது விரும்பத்தக்கது. திருச்சி இந்திய மேலாண்மை நிறுவனத்தால் நடத்தப்படும் எழுத்துத்தேர்வு, கணினியில் பணிபுரியும் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் தகுதியானவர்கள் பயிற்சிக்கு தேர்வு செய்யப்படுவர். பயிற்சி 12 மாதங்கள் வழங்கப்படும்.

விண்ணப்பிக்கும் முறை: www.iimtrichy.ac.in என்ற இணையதளத்தில் கொடுக்கப்பட் டுள்ள விண்ணப்பத்தை பயன்படுத்தி ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள்: 10.10.2025 எழுத்து மற்றும் நேர்முகத்தேர்விற்கு வரும்போது அசல் சான்றிதழ்களை கொண்டு வரவும்.

## பாம்பனில் மீனவர்கள் வலையில் சிக்கிய அபூர்வ 'டூம்ஸ்டே மீன்'; பேரழிவுக்கான அறிகுறியா?



**ராமநாதபுரம், அக்.8:**

பாம்பன் மீனவர்கள் வலையில் சிக்கிய அபூர்வ 'டூம்ஸ்டே மீன்' சிக்கியது. ஆழ்கடலில் மட்டுமே வாழும் இந்த மீன்கள் சிக்கியிருப்பது மீனவர்களிடையே வியப்பை ஏற்படுத்தியது.

ராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் விசைப்படகு மீனவர்கள் மன்னார் வளைகுடா கடல் பகுதிக்கு மீன் பிடிக்க சென்று இருந்தனர். இந்த மீனவர்கள் நேற்று கரை திரும்பினர். அப்போது ஒரு விசைப்படகு மீனவர்கள் வலையில் அரியவகை டூம்ஸ்டே மீன் ஒன்று சிக்கி இருந்தது. இது சுமார் 5 அடி நீளம் கொண்டதாக இருந்தது. இந்த வகை மீன்களை ஆசிய கடல் பகுதிகளில்தான் காண முடியும் எனவும், மிகவும் ஆழ்கடல் பகுதியில் மட்டுமே இருக்கும் எனவும் கூறுகிறார்கள்.

டூம்ஸ்டே மீன் பிடிபட்டால் உலகில் எங்காவது பேரழிவு ஏற்படக்கூடும் என்பது ஜப்பானிய மக்களின் ஒருவித நம்பிக்கை ஆகும். ஆனால் இது மூடநம்பிக்கை என்ற கருத்தும் உள்ளது. இந்தநிலையில் பாம்பன் மீனவர்கள் வலையில் சிக்கி இருக்கும் டூம்ஸ்டே மீன் சமூக வலைத்தளங்களில் விவாத பொருளாகி உள்ளது. ஆனால் இந்த அரிய வகை மீன் மிக குறைந்த விலைக்கே விற்பனை ஆனது குறிப்பிடத்தக்கது.

## சதுரகிரி மலையேறிய பக்தர் திடீர் சாவு

**விருதுநகர், அக்.8:**

சிவகங்கை மாவட்டம் தென்கரையை சேர்ந்தவர் மகா (வயது 55). இவர் தனது உறவினரான முத்துகிருஷ்ணன் என்பவரோடு நேற்று சதுரகிரி சுந்தர மகாலிங்க சுவாமி கோவிலுக்கு வந்தார். சாமி தரிசனம் செய்ய மலையேறினார். சின்ன பசுக்களை என்ற இடத்தின் அருகே சென்றபோது திடீரென அவருக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டது. இதனால் மயக்கம் அடைந்த அவர், சிறிது நேரத்தில் பரிதாபமாக இறந்தார். இந்த சம்பவம் குறித்து அடிவார பகுதிக்கு தகவல் கொடுக்கப்பட்டது. இதனையடுத்து அவரது உடலை டோலி கட்டி கீழே கொண்டு வந்தனர். பின்னர் அவரது உடல், பரிசோதனைக்காக உசிலம்பட்டி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த சம்பவம் குறித்து சாப்டூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். சதுரகிரி மலையேறிய பக்தர் திடீரென உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

## பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் பிரசாரத்துக்கு காவல்துறை அனுமதி!



**சென்னை, அக்.8:**

பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரனின் பிரசாரத்துக்கு நிபந்தனையுடன் காவல்துறையினர் அனுமதி வழங்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கரூர் விஜய் பிரசாரக் கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டதை தொடர்ந்து, அரசியல் கூட்டங்கள் நடத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கும்வரை புதிதாக எந்த கூட்டத்துக்கும் அனுமதி வழங்கப்படாது என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரனின் 'தமிழகம் தலைநிமிர தமிழனின் பயணம்' சுற்றுப்பயணத்துக்கு நிபந்தனைகளுடன் காவல்துறையினர் அனுமதி அளித்துள்ளனர்.

மதுரையில் நடைபெறும் தொடக்க விழாவில், பாஜக தேசிய தலைவர் ஜெ.பி. நட்டா பங்கேற்று, நயினார் நாகேந்திரனின் பிரசாரத்தை அக். 12 ஆம் தேதி தொடங்கி வைக்கவுள்ளார்.

பிரசாரத்துக்கு வரும் மக்களுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்த வேண்டும், குழந்தைகள், கர்ப்பிணிகள் பங்கேற்கக் கூடாது உள்ளிட்ட நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளது.

மதுரையில் அக். 12 ஆம் தேதி தொடங்கும் நயினார் நாகேந்திரனின் முதல்கட்ட சுற்றுப்பயணம், நவ. 17 ஆம் தேதி நெல்லையில் நிறைவடைகிறது.

## பிரேமலதா தாயார் காலமானார்!



**சென்னை, அக்.8:**

தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதாவின் தாயார் அம்சவேணி செவ்வாய்க்கிழமை காலமானார். அவருக்கு வயது 83.

சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் வயது மூப்புக் காரணமாக ஏற்பட்ட உடல்நலப் பிரச்னைக்காக கடந்த சில நாள்களாக அம்சவேணி சிகிச்சைப் பெற்று வந்தார்.

இந்த நிலையில், சிகிச்சைப் பலனின்றி நேற்று காலை 7.30 மணியளவில் அவர் உயிரிழந்ததாக பிரேமலதாவின் சகோதரர் எல்.கே. சுதீஷ் தெரிவித்துள்ளார்.

மேலும், சென்னை விருகம்பாக்கத்தில் உள்ள இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ள அம்சவேணியின் உடல், இன்று (அக். 8) 1 மணியளவில் ஊர்வலமாக கொண்டுசெல்லப்பட்டு வடபழனி ஏவிஎம் மின்மயானத்தில் தகனம் செய்யப்படவுள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

இவருக்கு தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா, புதுச்சேரி ராமச்சந்திரா மருத்துவமனை தலைவர் ராதா ராமச்சந்திரன் ஆகிய மகள்களும், தேமுதிக பொருளாளர் எல். கே. சுதீஷ் என்ற மகனும் உள்ளனர்.

## ரூ.90 ஆயிரத்தை நெருங்கிய தங்கம் விலை! கலக்கத்தில் நடுத்தர வர்க்கம்!



**சென்னை, அக்.8:**

சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ. 75 உயர்ந்து ஒரு கிராம் ரூ.11,200-க்கும், சவரனுக்கு ரூ.600 உயர்ந்து ஒரு சவரன் ரூ.89,600-க்கும் விற்பனையாகி வருகிறது.

வெள்ளி விலை மாற்றமின்றி ஒரு கிராம் 166 ரூபாய்க்கும், ஒரு கிலோ வெள்ளி 1,66,000 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் தொடர்ந்து ஏற்றத்திலேயே தினமும் ஜெட் வேகத்தில் ஏறிக்கொண்டிருக்கும் தங்கம் விலை கடந்த திங்கள்கிழமை (செப்.29) முதலே தொடர்ந்து உயர்ந்த வண்ணம் உள்ளது.

உலகளவில் நிலவும் பொருளாதார நிச்சயமற்றத் தன்மை காரணமாக உலக நாடுகள் தங்களது மத்திய வங்கிகளில் தங்கக்கட்டிகளை வாங்கிக் குவித்ததன் விளைவாகவும் தங்கத்தின் விலை விண்ணை முட்டும் வகையில் தொடர் ஏற்றம் கண்டுள்ளது.

அக்.3-இல் தங்கம் விலை சவரனுக்கு ரூ.400 குறைந்து ரூ.87,200-க்கு விற்பனையான நிலையில், சனிக்கிழமை விலை மீண்டும் உயர்ந்து, ஒரு சவரன் ரூ.87,600-க்கு விற்பனையானது.

நேற்று (திங்கள்கிழமை) காலையில் கிராமுக்கு ரூ.110-க்கும், சவரனுக்கு ரூ.880 உயர்ந்து சவரன் ரூ.88,480-க்கும் விற்பனை நிலையில், மீண்டும் மாலையில் வர்த்தகம் நிறைவடையும் தருவாயில் கிராமுக்கு ரூ. 65-க்கும், சவரனுக்கு ரூ. 520-ம் உயர்ந்து சவரன் ரூ. 89,000-க்கும் விற்பனையானது.

இந்த ஆண்டில் துவக்கத்தில் (ஜனவரி) சவரன் ரூ.60,000-க்கு விற்பனையான தங்கம் விலை, ஜூன் மாதத்தில் ரூ. 72,000-ஐயும், தற்போது கிட்டத்தட்ட ரூ. 90,000-ஐயும் நெருங்கியுள்ளது.

தங்கத்தின் விலை கடந்த 10 மாதங்களில் மட்டும் ரூ. 35,000 வரை ஒரு சவரன் தங்கம் விலை ஏற்றம் கண்டுள்ளது.

ஒருபுறம் விலை ஏறினாலும், தொடர்ந்து உயர்ந்து வருவதால் தங்கத்தின் மீது முதலீடு செய்ய பலரும் முனைப்பு காட்டுவதால் தீபாவளிக்கு முன்னதாகவே ஒரு சவரன் வரலாற்றில் இல்லாத நிலையில் ரூ. 1 லட்சத்தை எட்டும் என பொருளாதார நிபுணர்கள் கணித்துள்ளனர். நடுத்தர வர்க்கத்தினர் கலக்கமடைந்துள்ளார்.

# ‘மாநில வளர்ச்சியை தடுக்கும் சக்தியை போராடி வெல்வோம்’: கவர்னர் ஆர்.என்.ரவி விமர்சனத்துக்கு ஸ்டாலின் பதிலடி



**சென்னை, அக்.8:**

தமிழ்நாடு யாருடன் போராடும் என்று கவர்னர் ஆர்.என்.ரவி விமர்சித்துள்ளதற்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பதிலடி கொடுத்துள்ளார்.

கவர்னர் ஆர்.என்.ரவிக்கும், தமிழ்நாடு அரசுக்கும் இடையே தொடர்ந்து மோதல் போக்கு இருந்து வருகிறது. சட்டசபையில் நிறைவேற்றி அனுப்பும் மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்காமல் காலம் தாழ்த்தி வருவதாக அவர் மீது அரசு குற்றம் சாட்டி வருகிறது. இதற்காக சட்டப்போராட்டம் நடத்தி தமிழக அரசு வெற்றியும் பெற்றுள்ளது.

இதற்கிடையே மத்திய பா.ஜனதா அரசுக்கு எதிராக ‘தமிழ்நாடு போராடும், வெல்லும்’ என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடர்ந்து முழங்கி வருகிறார். அவருடைய முழக்கத்தை கவர்னர் ஆர்.என்.ரவி விமர்சித்துள்ளார்.

கவர்னருக்கு பதிலடி கொடுக்கும் வகையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று வெளியிட்ட சமூக வலைத்தள பதிவில் கூறியிருப்பதாவது:-

‘தமிழ்நாடு யாருடன் போராடும்?’ என கவர்னர் கேட்டுள்ளார். இந்தி மொழியை ஏற்றுக்கொண்டால்தான், கல்வி நிதியை கொடுப்போம் என இருக்கும் ஆணவத் திமிருக்கு எதிராகப் போராடும். அறிவியல் மனப்பான்மையை விதைக்கும் கல்வி நிலையங்களுக்குள் சென்று மூடநம்பிக்கைகளையும், புரட்டுக் கதைகளையும் சொல்லி, இளம் தலைமுறையை நூறாண்டு பின்னோக்கி இழுக்கும் சதிக்கு எதிராகப் போராடும்.

உச்சி மண்டை வரை மதவெறியை ஏற்றிக்கொண்டு, எதற்கெடுத்தாலும் மதத்தை பிடித்துக் கொண்டு நாட்டின் வளர்ச்சியைத் தடுக்கும் தந்திரக் கும்பல்கள் தலையெடுக்காமல் போராடும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளை, மக்களின் விருப்பத்துக்கு மாறாக நெருக்கும் ஜனநாயகவிரோதிகளுக்கு எதிராகப் போராடும். கவர்னரின் அதிகார அத்துமீறல்களுக்கு எதிராக ஒவ்வொரு முறையும் நீதிமன்றத்துக்கு சென்று மாநில உரிமைகளை நிலைநாட்டுகிறோம். அரசியல் சட்டத்தின் மாண்பை சிறுமைப்படுத்தும் எண்ணம் கொண்டவர்களுக்கு எதிராக தொடர்ந்து போராடும்.

தமிழ்நாட்டுக்கு வரவேண்டிய தொழிற்சாலைகளை, தொழில் வளர்ச்சியை, வேலைவாய்ப்புகளை, அடுத்த மாநிலத்துக்கு மிரட்டி அழைத்துச் செல்லும் சதிகாரர்களுக்கு எதிராக போராடும். ஆர்.எஸ்.எஸ். ஆசியுடன் இந்திய மக்களின் ஒற்றுமையை சீர்குலைத்து மீண்டும் மனுதர்மத்தை நிலைநாட்டத் துடிக்கும் ஆதிக்க வெறியர்களுக்கு எதிராக போராடும். உலகத்துக்கே பொதுவான வள்ளுவருக்கு காவிக்கறை பூசுவது முதல் கீழடியின் உண்மைகள் நிலத்துக்கடியிலேயே புதைந்துபோக வேண்டும் என்று நினைப்பது வரையிலான வன்மம் இருக்கிறதே, அதற்கு எதிராக போராடும். தொகுதி மறுசீரமைப்பு மூலம் தமிழ்நாட்டின் வலிமையை குறைக்கும் சதிக்கு எதிராக போராடும். ஏகலைவனின் கட்டை விரலைக் கேட்டதுபோல் திணித்திருக்கும் ‘நீட்’ எனும் பலிபீடத்துக்கு எதிராகப் போராடும். நாட்டையே நாசப்படுத்தினாலும், தமிழ்நாடு மட்டும் 11.19 சதவீதம் வளர்ச்சி பெற்று, பிற மாநிலங்களுக்கு ஒளிகாட்டுகிறதே என்று நாள்தோறும் அவதூறுகளை பரப்பி, கலவரம் நடக்காதா? என ஏங்கிக்கிடக்கும் நரிகளுக்கு எதிராகப் போராடும்.

நாகாலாந்து மக்கள் புறக்கணித்து அனுப்பிய பின்னும் திருந்தாமல், தமிழ்நாட்டு மக்களிடையே குழப்பத்தை உண்டாக்க மட்டுமே பணியாற்றும் கவர்னருக்கு எதிராகவும் போராடும். இறுதியில் தமிழ்நாடே வெல்லும். ஒட்டுமொத்த இந்தியாவையும் காக்கும். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## க்ரைம் கார்னர்

### அண்ணாமலை பெயரை சொல்லி ரூ.10 லட்சம் மோசடி: பாஜக நிர்வாகிகள் 3 பேர் கைது



**கோயம்புத்தூர், அக். 8:**

தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை பெயரைச் சொல்லி ரூ. 10 லட்சம் மோசடி செய்த பா.ஜ.க. நிர்வாகிகள் 3 பேரை போலீசார் கைது செய்துள்ளனர்.

கோவை மாவட்டம் அன்னூர் அடுத்த குமாரபாளையம் பகுதியைச் சேர்ந்தவர்கள் நாகராஜ் - நாகமணி தம்பதியினர். இவர்களது மூத்த மகன் திருமூர்த்தி கடந்த 2023 ஆம் ஆண்டு சாலை விபத்தில் உயிரிழந்தார். இது தொடர்பான வழக்கு நடைபெற்று, ரூ.50 லட்சம் இழப்பீடு நீதிமன்றம் மூலம் பெறப்பட்டுள்ளது. இந்த வழக்கில், சட்ட உதவி செய்ததற்காக அதே பகுதியைச் சேர்ந்த பா.ஜ.கவை சேர்ந்த கோகுல கண்ணன், சாமிநாதன், ராசுகுட்டி ஆகியோர் ரூ.10 லட்சம் பெற்றுள்ளனர்.

இந்த நிலையில், இந்த 3 பேரும் மேலும் ரூ.10 லட்சம் வழங்க வேண்டும் என, பா.ஜ.க. முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை பெயரை சொல்லி கொலை மிரட்டல் விடுவதாக இறந்த திருமூர்த்தியின் சகோதரர் அருணாச்சலம் வீடியோ ஒன்றை வெளியிட்டார். அந்த வீடியோவில், ‘தனது சகோதரன் திருமூர்த்தி உயிரிழந்த நிலையில், இதுதொடர்பான வழக்கிற்கு அதே ஊரை சேர்ந்த பாஜகவை சேர்த்த கோகுல கண்ணன், சாமிநாதன், ராசுகுட்டி ஆகியோர் உதவி செய்தனர். இதற்கு இழப்பீடு வந்தவுடன் ரூ.10 லட்சம் கட்டாயப்படுத்தி வாங்கிக்கொண்டனர். தற்போது மீண்டும் தேர்தல் செலவுக்கு ரூ.10 லட்சம் பணம் வேண்டும் என அண்ணாமலை பெயரை பயன்படுத்தி கொலை மிரட்டல் விடுக்கின்றனர்’ என குற்றம்சாட்டி இருந்தார். இந்த வீடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் வைரலானது.

இதுதொடர்பாக அருணாசலத்தின் தந்தை நாகராஜ், அன்னூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதேபோல், ‘எனது பெயரை சொல்லி பணம் வாங்கியதாக வெளியான வீடியோவிற்கும், எனக்கும் எந்த தொடர்பும் இல்லை’ என அண்ணாமலையும் விளக்கம் அளித்திருந்தார். தொடர்ந்து, இதுதொடர்பாக பணம் கேட்டு மிரட்டிய நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி அண்ணாமலை தனது உதவியாளர் மூலம் புகார் மனு அளித்தார்.

இந்நிலையில், நாகராஜ் அளித்த புகாரின் பேரில், அண்ணாமலை பெயரை பயன்படுத்தி ரூ.10 லட்சம் பணம் கேட்டு மிரட்டிய விவகாரத்தில், பாஜக கோவை வடக்கு மாவட்ட செயலாளர் சாமிநாதன், பாஜக உறுப்பினர் கோகுலகண்ணன், அன்னூர் குமாரபாளையத்தைச் சேர்ந்த ராசுகுட்டி ஆகிய 3 பேரை அன்னூர் போலீசார் கைது செய்தனர். தொடர்ந்து, 3 பேர் மீதும் கொலை மிரட்டல், பணம் பறித்தல் ஆகிய இருபிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். விசாரணையில், கைதான கோகுலகண்ணனிடம் இருந்து பாஜக, திமுக, அதிமுக, மக்கள் நீதி மய்யம், காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் உறுப்பினர் அட்டை இருப்பது தெரியவந்தது. அவற்றை பறிமுதல் செய்த போலீசார் தொடர்ந்து அவர்களிடம் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

### ஆவடியில் பள்ளிகளுக்கு வெடிகுண்டு மிரட்டல்: மிரட்டல் விடுத்த சிறுவனுக்கு போலீஸ் வலை



**ஆவடி, அக். 8:**

மளிகைக் கடைக்காரரிடம் செல்போனை வாங்கி ஆவடியில் உள்ள பள்ளிகளுக்கு வெடிகுண்டு வைத்திருப்பதாக மிரட்டல் விடுத்த சிறுவனை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர்.

ஆவடி காவல் கட்டுப்பாட்டு அறைக்கு இன்று காலை ஒரு செல்போன் அழைப்பு வந்தது. அதில் பேசிய நபர் ஆவடியில் பள்ளிகளில் வெடிகுண்டு வைத்திருப்பதாக கூறிவிட்டு போனை துண்டித்து விட்டார். இதைத் தொடர்ந்து ஆவடி பகுதியில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் போலீசார் விரைந்து சென்று சோதனை நடத்தினர்.

மேலும் போலீசார் மிரட்டல் விடுத்த செல்போன் எண்ணை ஆய்வு செய்தனர். அந்த செல்போன் எண் ஆவடி கன்னிகாபுரம் பகுதியில் உள்ள மளிகை கடைக்காரர் ஜெயக்குமார் என்ற முதியவருக்கு சொந்தமானது என்பது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து போலீசார் அந்த கடைக்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர். விசாரணையில், அந்த கடைக்கு வந்த பள்ளி சிறுவன் ஒருவன் தன்னிடம் அவசரமாக பேச வேண்டும் என்று கூறியதால் எனது செல்போனை கொடுத்தேன். ஆனால் அந்த சிறுவன் யாரிடம் பேசினான் என்ற விபரம் தனக்கு தெரியாது என்றும் அவர் கூறினார். இதைத் தொடர்ந்து அந்த பகுதியில் உள்ள சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்து அந்த சிறுவனை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர். காலாண்டு விடுமுறை முடிந்து இன்று மீண்டும் பள்ளி திறந்த முதல் நாளில் பள்ளிகளுக்கு சிறுவன் ஒருவன் வெடிகுண்டு மிரட்டல் விடுத்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## தொழில்நுட்ப / அறிவியல் செய்திகள்

### ஒரு வலைத்தளத்தில் குக்கீகளை ஏற்கலாமா? நிராகரிக்கலாமா?




இந்தியாவில் அரட்டை (Arattai) எனும் புதிய செயலி வாட்ஸ் அப்புக்கு போட்டியாக அறிமுகம் ஆகி உள்ளது. இது ஜோஹோ (Zoho) என்ற இந்திய நிறுவனம் உருவாக்கியது. இந்த செயலி மத்திய அரசின் ஆதரவுடன் உள்நாட்டு தொழில்நுட்ப தீர்வை தேடுபவர்களுக்கு ஒரு நம்பிக்கைக்குரிய மாற்றாக உருவாகியுள்ளது. உலக அளவில் மிகவும் பரவலாக பயன்படுத்தப்படும் மெசேஜிங் செயலியான Whatsapp-ற்கு போட்டியாக இந்தியாவில் தயாரிக்கப்பட்ட இந்த அரட்டை எனும் புதிய செயலி மக்களிடையே அதிக வரவேற்பை பெற்று வருகிறது.

அரட்டை செயலி முழுவதுமாக இந்தியாவில் தயாரிக்கப்பட்டதால் இது ஒரு ‘சுதேசி’ செயலியாக தேசப்பற்று மிக்க பயனர்களை அதிகம் ஈர்க்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. அரசியல்வாதிகள் திரையுலக பிரபலங்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் இந்த செயலியை பயன்படுத்த தொடங்கினால் இதன் பயன்பாடு உச்சத்தை தொடும் என்று கருதப்படுகிறது.

மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், மத்திய வர்த்தகத் துறை அமைச்சர்கள் இந்த செயலியை பயன்படுத்த தொடங்கியுள்ளனர். இதனால் தற்போது பலர் இந்த செயலியை பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர். இந்த அரட்டை செயலியை ஆண்ட்ராய்டு, ஐபோன், டெஸ்க்டாப் மற்றும் டிவிக்களில் பயன்படுத்த முடியும். அரட்டை செயலி வாட்ஸ்அப்பைப் போலவே மெசேஜ் அனுப்புவது, ஆடியோ மற்றும் வீடியோ அழைப்புகள், போட்டோக்கள், ஆவணங்கள் மற்றும் வாய்ஸ் மெசேஜ்களை பகிரும் அம்சங்களை கொண்டு சிறப்பாக விளங்குகிறது. நெட்வொர்க் குறைவான பகுதிகளிலும் இந்த செயலியை பயன்படுத்த முடியும்.

இதன் எளிய மற்றும் நம்பகமான செயல்பாடும், தனியுரிமைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கும் இதன் போக்கும் மக்களைக் கவர்ந்துள்ளது. பயனர்களின் தரவு தனிப்பட்டது என்றும், மூன்றாம் தரப்பினருடன் பகிரப்படாது என்று ஜோஹோ நிறுவனம் உறுதியளிக்கிறது. இருப்பிட தகவல்கள், தனிப்பட்ட விவரங்கள் உட்பட சில தரவுகளை சேகரித்தாலும், அவை என்க்ரிப்ட் (Encrypt) செய்யப்பட்டு, தேவைப்பட்டால் பயனர்கள் அவற்றை நீக்கவும் கோரலாம். அரட்டை செயலியின் பாதுகாப்பு அம்சங்கள் சிறப்பாக உள்ளன.

கடந்த மூன்று நான்கு நாட்களில் அரட்டை செயலியின் தினசரி பதிவுகள் 3000திலிருந்து 3,50,000 ஆக அதிகரித்துள்ளது. மத்திய அரசின் ஆதரவு, சமூக வலைதளங்களின் கவனம் மற்றும் தனி உரிமைக்கு முக்கியத்துவம் தரும் இதன் கொள்கைகள் ஆகியவை, உலகளாவிய செயலிகளுக்கு ஒரு சிறந்த மாற்றாக இதனை நிலைநிறுத்தி உள்ளது.

whatsapp தொடர்ந்து புதிய அம்சங்களான குழு உரையாடல்களில் ஆன்லைனில் யார் இருக்கிறார்கள் என்பதை அறியும் வசதி, நிகழ்வுகளை அமைக்கும் RSVP அம்சம், ஸ்டேட்டஸ் ஷார்ட்கட்கள் மற்றும் புதிய ஈமோஜிக்கள் போன்ற பல அம்சங்களை whatsappல் அறிமுகப்படுத்தியுள்ளது. இம்மாதிரியான புதிய அம்சங்கள் அரட்டை செயலியில் இன்னும் வரவில்லை.

இந்த செயலியை டவுன்லோட் செய்து பயன்படுத்துவது எளிது. ஆண்ட்ராய்டை பொறுத்தவரை கூகுள் ப்ளே ஸ்டோரில் இந்த செயலியை டவுன்லோட் செய்யலாம். இல்லாவிட்டால் அரட்டையின் அதிகாரப்பூர்வ இணையம் சென்று டவுன்லோட் செய்யலாம். ஐபோன் என்றால் ஆப்ஸ்டோரில் இந்த செயலி கிடைக்கும். டவுன்லோடு செய்யும் பொழுது அது ஜோஹோ நிறுவனத்தின் அரட்டை செயலிதானா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

# திருவண்ணாமலை கோவிலில் கட்டுமான இடங்கள்: சென்னை ஐகோர்ட் நீதிபதிகள் ஆய்வு

**திருவண்ணாமலை, அக்.8:**

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவிலில் கட்டுமான இடங்களை சென்னை ஐகோர்ட் நீதிபதிகள் ஆய்வு செய்தனர்.

பஞ்சபூத ஸ்தலங்களில் அக்னி ஸ்தலமாகவும், நினைத்தாலே முக்தி அளிக்கும் திருத்தலமாக விளங்கும் திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவிலில் அனுதினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்து வருகின்றனர். தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், ஆந்திரா தெலுங்கானா கர்நாடகா உள்ளிட்ட பல்வேறு வெளி மாநிலங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்து வருகின்றனர்.

இந்நிலையில் அண்ணாமலையார் கோயில் ராஜகோபுரம் எதிரே கடைகள் கட்டுவதற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. அதே போல் அண்ணாமலையார் கோவிலுக்கு உள்ளே புதியதாக அன்னதான கூடம் மற்றும் கழிவறை ஆகியவற்றை கட்டும் பணிகள் நடைபெற்று வந்தது. 1000 ஆண்டுகள் பழமை வாய்ந்த அண்ணாமலையார் கோவிலில் லட்சக்கணக்கான சிற்ப கலைகளுடன் ராஜ கோபுரம், அம்மணி அம்மன் கோபுரம், திருமஞ்சன கோபுரம் மற்றும் பே கோபுரம் என ஒன்பது கோபுரங்கள் உள்ளது.

குறிப்பாக கோவில் வளாகம் மற்றும் கோவிலுக்குள் கட்டுமானங்கள் நடக்க கூடாது என சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டதை தொடர்ந்து கட்டுமான பணிகள் மேற்கொள்ள கூடாது என சென்னை ஐகோர்ட் உத்தரவு பிறப்பித்தது.

இதனை தொடர்ந்து சென்னை ஐகோர்ட் நீதிபதிகள் சுரேஷ், சௌந்தர் ஆகியோர் நேற்று தொடர்ந்து 4 மணிநேரம் ஆய்வு மேற்கொண்டனர். கோவில் ராஜ கோபுரம் எதிரே, அண்ணாமலையார் கோவில் வளாகம், யானை மண்டபம் உள்ளிட்ட பல்வேறு இடங்களிலும் ஆய்வு செய்தனர். அப்போது நீதிபதிகள் கோவில் வளாகத்திற்குள் நிரந்தரமான எந்தவிதமான கட்டுமான பணிகளும் மேற்கொள்ளக்கூடாது கோவிலுக்குள் கழிவறை கட்டிடங்கள் கட்டக்கூடாது கோவில் வெளிப்புறத்தில் கோவிலின் சுற்றுச்சுவரை பாதிக்காத வகையில் காத்திருப்பு அறை, கழிவறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மேற்கொள்ளலாம் என சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினர்.

இந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சியர் க.தர்ப்பகராஜ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுதாகர் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ராமபிரதீபன் கோட்டாட்சியர் எஸ்.ராஜ்குமார் கோவில் இணை ஆணையர் பரணிதரன் தாசில்தார் சு.மோகனராமன் மற்றும் நெடுஞ்சாலை பொதுப்பணி உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# மெரினா கடற்கரையில் பாரம்பரிய கலை நிகழ்ச்சி: ஆர்வமுடன் பொதுமக்கள் பார்வையிட்டனர்



**சென்னை, அக்.8:**

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், மெரீனா நீலக்கொடி கடற்கரைப் பகுதியில் நடைபெற்ற தமிழ்நாடு பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டு மகிழ்ந்தனர்.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில் உள்ள மெரினா கடற்கரை, பெசன்ட் நகர் கடற்கரை, திருவான்மியூர் கடற்கரை உள்ளிட்ட அனைத்து கடற்கரைப் பகுதிகளில் மக்களின் வசதிக்காகவும், சிறந்த சுற்றுச்சூழலை ஏற்படுத்திடும் வகையிலும், பல்வேறு கட்டமைப்பு வசதிகளும், மேற்கொள்ளப்பட்டு தூய்மையாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. மெரினா கடற்கரையில், மொரினா நீச்சல் குளம் அமைந்துள்ள பகுதியில் உலகத்தரம் வாய்ந்த நீலக்கொடி சான்றுக்கான மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, இந்த நீலக்கொடி கடற்கரைப் பகுதிக்கு, மக்கள் பெருமளவில் வருகை தருகின்றனர். இங்கு வரும் மக்களின் மகிழ்விற்காகவும், தமிழ்நாட்டின் பாரம்பரியக் கலைகளை மக்களிடம் கொண்டு செல்லும் வகையிலும், கலைஞர்களுக்கு ஆதரவளித்து அவர்களை ஊக்கப்படுத்திடும் வகையிலும் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில், மெரினாவில் உள்ள நீலக்கொடி கடற்கரைப் பகுதியில், தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் உள்ள நாட்டுப்புறக் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

இந்த பாரம்பரிய கலைநிகழ்ச்சிகள் ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமையன்று பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக நேற்று தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் உள்ள நாட்டுப்புறக் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இந்த கலை நிகழ்ச்சியில், விருதாச்சலம் பத்மநாதன் கலைக்குழுவினரின் கரகம், காவடி ஆட்டங்களும், பொள்ளாச்சி விஜயகுமார் கலைக்குழுவினரின் இசையின் ஒலிநயத்தை கொண்டு ஆடப்படும் ஜிக்காட்டம் கலை நிகழ்ச்சியும், திருவண்ணாமலை பாலமுருகன் கலைக்குழுவினரின் பெரிய மேளம் கலை நிகழ்ச்சியும், மதுரை சோழவந்தான் வரதராஜன் கலைக்குழுவினரின் மரக்கால் ஆட்டம் கலை நிகழ்ச்சியும், விருதுநகர் ராஜபாளையம் ராஜ் கலைக்குழுவினரின் தப்பாட்டம் கலை நிகழ்ச்சியும், சென்னை கஜேந்திரன் கலைக்குழுவினரின் பொய்க்கால் குதிரை ஆட்டம் கலை நிகழ்ச்சியும் சிறப்பாக நடைபெற்றது.

இந்த கலை நிகழ்ச்சிகளில் 70க்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கேற்று சிறப்பாக கலை நிகழ்ச்சிகளை நடத்தினர். மாலை 6 மணி முதல் நடைபெற்ற இந்த கலை நிகழ்ச்சியினை ஆயிரக்கணக்கான மக்கள் ஆர்வமுடன் பார்வையிட்டு மகிழ்ந்தனர்.

# சபரிமலை கவச முறைகேடு விவகாரம்: சிறப்பு புலனாய்வு குழு அமைத்து கேரள ஐகோர்ட்டு உத்தரவு

**திருவனந்தபுரம், அக்.8:**

ரகசியமாக விசாரணை நடத்தப்பட்டு, அறிக்கைகளை நேரடியாக கோர்ட்டில் சமர்ப்பிக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

சபரிமலை அய்யப்பன் கோவிலின் வெளியே 12 துவாரபாலகர் சாமி சிலை உள்ளது. இந்த சிலையில் தங்க முலாம் பூசப்பட்ட கவசங்கள் பொருத்தப்பட்டு இருந்தது. கடந்த 1999-ம் ஆண்டு வடிவமைக்கப்பட்ட சிலையின் கவசம் பொலிவு இழந்ததால், கவசத்தை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்காக தொழில் அதிபர் உன்னிகிருஷ்ணன் தலைமையில் சென்னையில் செயல்படும் ஒரு தனியார் நிறுவனத்திடம் கவசம் ஒப்படைக்கப்பட்டது. அப்போது அந்த கவசத்தின் எடை 42.800 கிலோவாக இருந்தது.



பணிகள் முடிந்து சபரிமலைக்கு திரும்ப கொண்டு வரப்பட்டபோது, எடை குறைவாக இருந்தது. இதுதொடர்பாக கேரள ஐகோர்ட்டு தாமாக முன்வந்து வழக்குப்பதிவு செய்து விசாரித்தது. அப்போது தங்க முலாம் பூசப்பட்ட கவசங்கள் எடை குறைந்த விவகாரத்தை விசாரிக்க திருவிதாங்கூர் தேவசம்போர்டு, விஜிலென்ஸ் குழுவுக்கு உத்தரவிட்டது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது திருவிதாங்கூர் தேவசம் போர்டுவின் விஜிலென்ஸ் குழு இந்த விவகாரத்தில் அதன் முதல்கட்ட விசாரணையின் இடைக்கால அறிக்கையை சமர்ப்பித்தது. முன்னதாக திருவிதாங்கூர் தேவசம் போர்டு விஜிலென்ஸ் குழு உன்னிகிருஷ்ணனிடம் 2 நாட்கள் விசாரணை நடத்தியது. அதன் அறிக்கையை கோர்ட்டில் தாக்கல் செய்தது.

இதைத்தொடர்ந்து கேரள ஐகோர்ட்டு, போலீஸ் சூப்பிரண்டு சசிதரன் தலைமையில் சிறப்பு புலனாய்வு விசாரணை குழு அமைக்க உத்தரவிட்டது. மேலும் சைபர் போலீஸ் அதிகாரிகளும் குழுவில் இடம்பெறுவர். இதுகுறித்த விசாரணை ரகசியமாக நடத்தப்பட வேண்டும். அறிக்கைகளை நேரடியாக கோர்ட்டில் சமர்ப்பிக்க வேண்டும் என உத்தரவிட்டது.

கேரள ஐகோர்ட்டின் சிறப்பு விசாரணை குழுவை அமைக்கும் உத்தரவை சபரிமலை தேவசம்போர்டு மந்திரி வாசவன் வரவேற்றுள்ளார். ஏற்கனவே கடந்த வாரம் சபரிமலை தங்க கவசங்கள் எடை குறைந்த விவகாரத்தில் கேரள ஐகோர்ட்டு ஓய்வு பெற்ற நீதிபதி கே.டி. சங்கரன் தலைமையில் விரிவான விசாரணை நடத்த வேண்டும் என்று உத்தரவிட்டு இருந்தது.

இதற்கிடையே கேரள சட்டசபையில் சபரிமலை அய்யப்பன் கோவிலின் தங்க முலாம் பூசப்பட்ட கவசங்கள் எடை குறைந்த விவகாரம் எதிரொலித்தது.

இந்த பிரச்சினையை எழுப்பி காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி கூட்டணி கட்சி எம்.எல்.ஏ.க்கள் கடும் அமளியில் ஈடுபட்டனர். கையில் பதாகைகளை ஏந்தியவாறு சபாநாயகர் இருக்கையை முற்றுகையிட்டு அவர்கள் கோஷங்களை எழுப்பினர்.

முறைகேட்டுக்கு பொறுப்பேற்று தேவசம்போர்டு மந்திரி வாசவன் பதவி விலக வேண்டும் என்று கோஷம் எழுப்பினர். இதனால் சபையில் சிறிது நேரம் சலசலப்பு ஏற்பட்டது. மேலும் சட்டசபைக்கு வெளியே காந்தி சிலைக்கு அருகேயும் காங்கிரஸ் கட்சி எம்.எல்.ஏ.க்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## விளையாட்டு செய்திகள்

### மகளிர் உலகக்கோப்பை: நியூசிலாந்துக்கு எதிராக தென் ஆப்பிரிக்கா 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி

**இந்தூர், அக்.8:**

மகளிர் உலகக்கோப்பை கிரிக்கெட் இந்தியா, இலங்கையில் நடைபெற்று வருகிறது. இதில் மத்தியபிரதேசத்தின் இந்தூரில் இன்று நடைபெற்று வரும் 7வது லீக் ஆட்டத்தில் தென்னாப்பிரிக்கா , நியூசிலாந்து மோதி வருகின்றன.

இந்த ஆட்டத்தில் டாஸ் வென்ற தென் ஆப்பிரிக்கா பந்து வீச்சை தேர்வு செய்தது. இதையடுத்து நியூசிலாந்து தொடக்க வீராங்கனைகளாக சுசி, ஜார்ஜியா களமிறங்கினர். ஆட்டத்தின் முதல் பந்திலேயே சுசி ரன் எதுவும் எடுக்காமல் (0) அவுட் ஆனார். ஜார்ஜியா 31 ரன்னில் அவுட் ஆனார். அடுத்து வந்த அமிலியா 23 ரன்னில் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார்.

இதையடுத்து, ஹெலிடேவுடன் ஜோடி சேர்ந்த கேப்டன் சோபியா பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். ஹெலிடே 45 ரன்னிலும், கேப்டன் சோபியா 85 ரன்னிலும் ஆட்டமிழந்தனர். பின்னர் வந்த வீராங்கனைகள் சொற்ப ரன்களில் அவுட் ஆகி ஏமாற்றம் அளித்தனர்.

இறுதியில் நியூசிலாந்து 47.5 ஓவரில் 231 ரன்கள் எடுத்திருந்த நிலையில் ஆல் அவுட் ஆனது. தென் ஆப்பிரிக்கா தரப்பில் அந்த அணியின் மெலபா அதிகபட்சமாக 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இதையடுத்து 232 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தென் ஆப்பிரிக்க அணி களமிறங்கியது.

தொடக்க வீராங்கனையாக களமிறங்கிய லாரா வோல்வார்ட் 14 ரன்களில் அவுட் ஆன நிலையில், அடுத்து வந்த சுனே லுஸ், மற்றொரு தொடக்க வீராங்கனை தஸ்மின் பிரிட்ஸ் உடன் ஜோடி சேர்ந்தார். நிலைத்து நின்று அதிரடி காட்டிய இந்த ஜோடி, நியூசிலாந்து அணியின் பந்துவீச்சை நாலாபக்கமும் சிதறடித்தது.

சதமடித்து அசத்திய தஸ்மின் பிரிட்ஸ் 89 பந்துகளில் 101 ரன்கள் விளாசினார். அரைசதம் கடந்த சுனே லுஸ் 83 ரன்கள் எடுத்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார். இறுதியாக தென் ஆப்பிரிக்கா அணி 40.5 ஓவர்களில் 4 விக்கெட் இழப்பிற்கு 234 ரன்கள் எடுத்தது. இதன் மூலம் நியூசிலாந்து அணியை 6 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி தென் ஆப்பிரிக்கா அணி வெற்றி பெற்றது.

### சுப்மன் கில்லுக்கு கேப்டன் பதவி வழங்கியது சரிதான் - ஆரோன் பின்ச்

**மெல்போர்ன், அக்.8:**

சுப்மன் கில் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணியானது தற்போது வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் ஆடி வருகிறது. இந்த தொடர் நிறைவடைந்ததும் இந்திய அணி ஆஸ்திரேலிய நாட்டிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள், 5 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் ஆட உள்ளது.

இந்த தொடருக்கான இந்திய அணியை பி.சி.சி.ஐ கடந்த சில தினங்களுக்கு முன்னர் அறிவித்தது. அதில் ஒருநாள் அணியின் கேப்டனாக இருந்து வந்த ரோகித் சர்மா நீக்கப்பட்டு அவருக்கு பதிலாக சுப்மன் கில் புதிய ஒருநாள் கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். சுப்மன் கில் ஒருநாள் அணியின் கேப்டனாக நியமிக்கப்பட்டது பலரது மத்தியிலும் ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது.

ஏனெனில் கடந்த ஓராண்டிற்குள் இரண்டு ஐ.சி.சி கோப்பையை கைப்பற்றிய ரோகித் சர்மாவை நீக்கிவிட்டு அவரை புதிய கேப்டனாக கில்லை நியமித்ததற்கு ஒரு பக்கம் எதிர்ப்பு இருந்தாலும் மற்றொரு பக்கம் ஆதரவும் இருந்து வருகிறது. அந்த வகையில் இந்திய அணியின் ஒருநாள் கேப்டனாக சுப்மன் கில் நியமிக்கப்பட்டது சரியான ஒன்றுதான் என ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் கேப்டன் ஆரோன் பின்ச் கருத்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது, ஏற்கனவே இங்கிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் தான் மிகச்சிறந்த கேப்டன் என்பதை சுப்மன் கில் நிரூபித்து காண்பித்தார். அதுமட்டுமின்றி டி20 போட்டிகளுக்கான அணியிடம் துணை கேப்டனாக இருக்கிறார். எனவே என்னை பொறுத்தவரை ஒருநாள் போட்டிகளிலும் அவர் கேப்டனாக இருப்பது இந்திய அணிக்கு நல்லதுதான். இவ்வாறு அவர் கூறினார்.

## கரூர் கூட்ட நெரிசல் சம்பவம்: சிபிஐ விசாரணை கோரி சுப்ரீம் கோர்ட்டில் மனு

**புதுடெல்லி, அக்.8:**

கரூரில் தவெக தலைவர் விஜய் செப்.27-ல் பங்கேற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் நெரிசலில் சிக்கி 2 வயது குழந்தை, பெண்கள் உட்பட 41 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவம் நாட்டையே உலுக்கியது. கரூர் கூட்ட நெரிசல் விவகாரத்தில் அதிகாரிகள் அலட்சிய போக்குடன் செயல்பட்டதே காரணம் என்றும் சிபிஐ விசாரணை கோரியும் ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை கோர்ட்டு தள்ளுபடி செய்த நிலையில், சுப்ரீம் கோர்ட்டில் மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளது. பாஜக நிர்வாகி உமா தாக்கல் செய்த இந்த மனுவை விசரணைக்கு ஏற்ற சுப்ரீம் கோர்ட்டு, வரும் 10ம் தேதி விசாரிக்க உள்ளது. மேல் முறையீட்டு மனுவில், விஜய் பிரசாரத்திற்கு முறையான பாதுகாப்பு அளிக்கப்படவில்லை என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## கேரள ஓணம் லாட்டரி: பெயிண்ட் கடை தொழிலாளிக்கு ரூ.25 கோடி அடித்த யோகம்



**ஆலப்புழா, அக்.8:**

கேரளாவில் ஓணம் பண்டிகை பம்பர் சிறப்பு குலுக்கல் நடந்தது. இதற்கான டிக்கெட்டுகள் விற்பனை ஒரு மாதத்திற்கும் மேலாக நடைபெற்றது. ஒரு டிக்கெட் ரூ.500-க்கு விற்கப்பட்டது. முதல் பரிசு ஒரு நபருக்கு ரூ25 கோடி, இரண்டாம் பரிசாக 20 பேருக்கு தலா ரூ1. கோடி, மூன்றாம் பரிசாக 20 பேருக்கு தலா ரூ.50 லட்சம் என அறிவிக்கப்பட்டிருந்தது.

மேலும் பலருக்கு ரூ5 லட்சம், ரூ2 லட்சம் மற்றும் பல தொகைகள் பரிசாக அறிவிக்கப்பட்டது. பம்பர் பரிசு கோடிகள் மற்றும் லட்சங்களாக இருந்ததால் லாட்டரி சீட்டுகளை பலர் போட்டிபோட்டு வாங்கினர். இதனால் ஓணம் பண்டிகை பம்பர் குலுக்கல் லாட்டரி சீட்டுகள் 70 லட்சத்துக்கும் மேல் விற்பனையாகின. இந்தநிலையில் ஓணம் பண்டிகை பம்பர் சிறப்பு குலுக்கல் கடந்த 4-ந்தேதி நடைபெற்றது. இதில் TH577825 என்ற எண்ணிற்கு முதல் பரிசு அடித்துள்ளது. ஆலப்புழா மாவட்டத்தை சேர்ந்த சரத் நாயர் என்பவருக்குதான் ஓணம் லாட்டரியில் ரூ.25 கோடி பரிசு அடித்திருப்பது தெரியவந்தது. பரிசுத்தொகை அடித்த சரத் நாயர், நிப்பான் பெயிண்ட் கடையில் வேலை பார்த்து வருகிறார்.

## பீகார் தேர்தலில் போட்டியிடுவேன்; பிரசாந்த் கிஷோர் அறிவிப்பு

**பாட்னா, அக்.8:**

பீகார் சட்டசபைக்கு அடுத்த மாதம் (நவம்பர்) 6 மற்றும் 11-ந் தேதிகளில் 2 கட்டமாக தேர்தல் நடக்கிறது. தேர்தல் வியூக வகுப்பாளராக இருந்து அரசியல்வாதியாக மாறியுள்ள பிரசாந்த் கிஷோரின் ஜன் சுராஜ் கட்சியும் களம் காண்கிறது. இதுதொடர்பாக நேற்று பிரசாந்த் கிஷோர் நிருபர்களிடம் கூறுகையில், 'ஜன் சுராஜ் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் வருகிற 9-ந் தேதி (வியாழக்கிழமை) அன்று அறிவிக்கப்படுவார்கள்.

வேட்பாளர் பட்டியலில் என்னுடைய பெயரும் இடம்பெறும். வேட்பாளர் பட்டியல் ஆச்சரியம் நிறைந்ததாக இருக்கும்' என்று கூறினார்.இருப்பினும் எந்த தொகுதியில் போட்டியிடுவேன் என்பதை பிரசாந்த் கிஷோர் தெரிவிக்கவில்லை. அதற்கு 9-ந் தேதி வெளியிடப்படும் வேட்பாளர் பட்டியலில் பதில் கிடைக்கும்.

## தவறான சிகிச்சையால் சிறுமியின் கை அகற்றம்: அரசு டாக்டர்கள் 2 பேர் பணியிடை நீக்கம்

**பாலக்காடு, அக்.8:**

கேரள மாநிலம் பாலக்காடு மாவட்டம் பல்லசனா பகுதியை சேர்ந்தவள் வினோதினி (வயது 9). இவள் தனது சகோதரனுடன் விளையாடி கொண்டிருந்த போது வலது கையில் படுகாயம் ஏற்பட்டது. உடனே சிறுமியை பெற்றோர் சித்தூர் தாலுகா அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் மேல் சிகிச்சைக்காக பாலக்காடு அரசு மருத்துவமனையில் சிறுமி அனுமதிக்கப்பட்டாள்.

அங்கு சிறுமிக்கு எக்ஸ்ரே எடுத்து பார்த்த போது, கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது தெரியவந்தது. பின்னர் சிறுமியின் கையில் டாக்டர்கள் பிளாஸ்டர் போட்டு உள்ளனர். அதன் பிறகு சிறுமி வலது கையில் வலி தாங்க முடியாமல் துடித்தாள். மேலும் வலது கையில் ரத்த ஓட்டம் குறைந்து இருந்ததோடு, கருப்பாக இருந்தது. அதோடு அந்த கையில் வீக்கம் ஏற்பட்டதோடு, நீர் கட்டி இருந்ததாக தெரிகிறது.

இதையடுத்து சிறுமி கோழிக்கோடு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டாள். அங்கு டாக்டர்கள் சிறுமியின் வலது கையை (முழங்கை வரை) வெட்டி அகற்றினர். பாலக்காடு அரசு மருத்துவமனையில் டாக்டர்களின் தவறான சிகிச்சையால் சிறுமியின் கை அகற்றப்பட்டதாக குடும்பத்தினர், உறவினர்கள் புகார் தெரிவித்தனர். இந்த சம்பவத்தை கண்டித்து எதிர்க்கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதைத்தொடர்ந்து இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்த சுகாதாரத்துறை மந்திரி வீணா ஜார்ஜ் உத்தரவிட்டு இருந்தார். அதன்படி, மாவட்ட மருத்துவ அலுவலர் விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்தார். அதன் அடிப்படையில், பாலக்காடு அரசு மருத்துவமனையில் தவறான சிகிச்சையால் சிறுமியின் கை அகற்றப்பட்ட சம்பவத்தில், டாக்டர்கள் முஸ்தபா, சர்பராஸ் ஆகிய 2 பேர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டு உள்ளனர். தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

## 8 மாதங்களில் பி.எஸ்.என்.எல். 5ஜி சேவை - மத்திய மந்திரி தகவல்

**புதுடெல்லி, அக்.8:**

இந்தியாவின் அரசு தொலைதொடர்பு நிறுவனமாக பி.எஸ்.என்.எல். உள்ளது. கடந்த மாத இறுதியில் நாடு முழுவதுமாக பி.எஸ்.என்.எல். நிறுவனத்தின் அதிவேக இணையவசதியை பெறுவதற்கான 4ஜி சேவை அமல்படுத்தப்பட்டது.




இந்தநிலையில் அடுத்த 8 மாதங்களில் அனைத்து பி.எஸ். என்.எல். நிறுவனத்தின் அனைத்து 4ஜி செல்போன் கோபுரங்களும் 5ஜியாக மாற்றப்பட உள்ளது. இதுதொடர்பாக தொலைதொடர்பு மந்திரி ஜோதிராதித்ய சிந்தியா டெல்லியில் நடந்த பொருளாதார மாநாட்டில் கலந்து கொண்டு பேசினார்.

அப்போது அவர், "இதுவரை இல்லாத அளவுக்கு மிகப்பெரிய தொலைதொடர்புசீர்திருத்தத்தை மேற்கொள்ள உள்ளோம். அதன்படி அடுத்த 6 முதல் 8 மாதங்களில் பி.எஸ்.என்.எல். நிறுவனத்தின் 4ஜி செல்போன் கோபுரங்கள் அனைத்தும் 5ஜியாக மாற்றப்படும்.

இதன்மூலம் அதிவேக இணையத்தை இன்னும் சிறப்பாக அனுபவிக்க முடியும்" என்றார்.

## டிஜிட்டல் கைது மோசடி; ரெயில்வே அதிகாரியிடம் ரூ.20 லட்சம் பறித்த பெண்ணுக்கு போலீஸ் வலைவீச்சு

**மும்பை, அக்.8:**

தொழில்நுட்ப வளர்ச்சியால் நமது வாழ்வை எளிமையாக்கும் வகையில் பல்வேறு நவீன கண்டுபிடிப்புகள் நாள்தோறும் பயன்பாட்டிற்கு வந்து கொண்டிருக்கின்றன. அதே சமயம், தொழில்நுட்ப வளர்ச்சியை தவறான நோக்கத்துடன் பயன்படுத்தி, அப்பாவி மக்களிடம் இருந்து பணம் பறிக்கும் கும்பலும் மற்றொரு புறத்தில் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது.



அந்த வகையில் மோசடிக்காரர்கள் பயன்படுத்தும் 'டிஜிட்டல் கைது' என்ற மோசடி வலையில் சிக்கி பலர் தங்கள் பணத்தையும், நிம்மதியையும் இழந்துள்ளனர். 'டிஜிட்டல் கைது' என்பது, மோசடி கும்பல் சி.பி.ஐ., அமலாக்கத்துறை, வருமான வரித்துறை அதிகாரிகளை போல பேசி பொதுமக்களை வீட்டில் சிறை பிடித்து பணம் பறிப்பதாகும். இதுபோன்ற டிஜிட்டல் கைது மோசடிகள் நாடு முழுவதும் நடந்து வருகின்றன.

இந்த நிலையில், மராட்டிய மாநிலம் ஜல்காவ் மாவட்டம் புசாவல் பகுதியில் ஓய்வுபெற்ற ரெயில்வே அதிகாரி ஒருவர், டிஜிட்டல் கைது மோசடியில் ரூ.20 லட்சம் பணத்தை இழந்துள்ளார். 69 வயதான இவருக்கு, கடந்த மாதம் 17-ந் தேதி அடையாளம் தெரியாத செல்போன் எண்ணில் இருந்து வீடியோ கால் வந்தது. இந்த அழைப்பை ஏற்றபோது, எதிர்முனையில் போலீஸ் சீருடை அணிந்த பெண் ஒருவர் தோன்றினார். அப்போது, அவர் தன்னை மும்பை போலீஸ் என அறிமுகப்படுத்தி கொண்டார்.

பின்னர் அவர், ரெயில்வே அதிகாரியிடம், "உங்கள் வங்கிக்கணக்கில் இருந்து பயங்கரவாதிகளுக்கு ரூ.2 கோடியே 50 லட்சம் பரிமாற்றம் செய்யப்பட்டு உள்ளது. இதற்காக உங்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்படும்" என்று கூறி மிரட்டினார். மேலும் அவரை டிஜிட்டல் முறையில் கைது செய்துள்ளதாககூறிய அப்பெண், இந்த வழக்கில் இருந்து விடுவிக்க வேண்டுமெனில் ரூ.20 லட்சம் பணம் அனுப்பவேண்டும் என்று கேட்டுள்ளார்.

இதனால் பயந்துபோன ரெயில்வே அதிகாரி அப்பெண் கூறிய வங்கிக்கணக்குகளுக்கு ரூ.20 லட்சத்தை பரிமாற்றம் செய்தார். இதன் பின்னர் தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த ரெயில்வே அதிகாரி, சம்பவம் குறித்து போலீசில் புகார் அளித்தார். புகாரின்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து, ரூ.20 லட்சம் பறித்த மோசடி பெண்ணை வலைவீசி தேடி வருகின்றனர்.

## ‘இப்படியொரு பயணத்துக்கான சூழல் உருவானதே ஓர் அவலம்’ - கிரெட்டா தன்பெர்க் வேதனை!

**ஏதென்ஸ், அக்.8:**

“இனப்படுகொலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை ஒரு நாடு தடுக்கையில் அவர்களை எதிர்த்து கடல் வழியாக செல்ல வேண்டிய சூழல் உருவானதே ஒரு பெரும் அவல நிலை தான்.” என்று சூழலியல் செயற்பாட்டாளர் கிரெட்டா தன்பெர்க் தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீனத்தின் காசா பகுதி வாழ் மக்களுக்கு வேண்டிய நிவாரண உதவி பொருட்களுடன் பார்சிலோனாவில் இருந்து 50 படகுகளில் சூழலியல் செயற்பாட்டாளர் கிரெட்டா தன்பெர்க் உள்பட சுமார் 500 செயற்பாட்டர்கள் கடந்த ஆகஸ்ட் மாத இறுதியில் பயணம் மேற்கொண்டனர். இந்தப் படகுகளை இஸ்ரேல் கடற்படையினர் இடைமறித்தனர். அதிலிருந்தவர்கள் சிறைப்பிடிக்கப்பட்டனர்.

இவர்கள் படிப்படியாக நாடுகடத்தப்பட்ட நிலையில், கிரெட்டா தன்பெர்க் உள்பட 160 பேர் ஞாயிற்றுக்கிழமை கிரீஸுக்கு நாடுகடத்தப்பட்டனர். அவர்கள் ஏதென்ஸ் விமான நிலையம் வந்தபோது ஏராளமான சமூக செயற்பாட்டாளர்கள் அவர்களை வரவேற்றனர்.

அப்போது பேசிய கிரெட்டா, “கடல் வழியாகக் கூட நிவாரணம் காசா சென்று சேரக் கூடாது என்று மனிதமற்ற இஸ்ரேலின் முயற்சியை முறியடிக்கும் மிகப்பெரிய முயற்சிதான ஃப்ளோட்டிலா பயண,. ஆனால், இப்படியொரு மிஷனை நாங்கள் மேற்கொள்ள வேண்டிய சூழல் உருவானதே ஒரு அவலம் தான். இஸ்ரேலின் இனஅழிப்பைத் தடுக்க உலக நாடுகள் செயல்பட வேண்டும். ஆனால், உலக அரசுகள் குறைந்தபட்ச அளவில் கூட செயல்படுவதாகத் தெரியவில்லை.” என்றார். முன்னதாக விமான நிலையத்துக்கு வந்தபோது கிரெட்டா பாலஸ்தீன கொடியைக் கையில் ஏந்தியடி, “பாலஸ்தீனத்துக்கு விடுதலை வேண்டும்; ஃப்ளோட்டிலா வாழ்க” என்று முழங்கினார்.

முன்னதாக, கிரெட்டா தன்பெர்க்கை காவலில் இருந்தப்போது இஸ்ரேலியப் படையினர் தலைமுடியைப் பிடித்து இழுத்து தாக்கியதாகவும், அவரை இஸ்ரேல் கொடியை முத்தமிட நிர்பந்தித்ததாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன. ஆனால் அதுபற்றி கிரெட்டா ஏதும் சொல்லவில்லை. ஆனால். ஃப்ளோட்டிலா பயணத்தில் இருந்த யாஸ்மின் அகார் என்ற செயற்பாட்டாளர் கூறுகையில். ”எங்களை மிருகங்கள் போல், பயங்கரவாதிகள் போல் நடத்தினார்கள். நாங்கள் தாக்கப்பட்டோம். தூங்கவிடவில்லை. முதல் 48 மணி நேரம் எங்களுக்கு உணவு, சுத்தமான குடிதண்ணீரும் கூட கிடைக்கவில்லை.” என்றார்.

இந்தக் குற்றச்சாட்டுகளை எல்லாம் இஸ்ரேல் திட்டவட்டமாக மறுத்து வருகிறது. ஃப்ளோட்டிலா பயணத்தில் வந்த சமூக செயற்பாட்டாளர்களில் கிரெட்டா உள்பட 170-க்கும் அதிகமானோரை கிரீஸ் மற்றும் ஸ்லோவேகியா வழியாக நாடு கடத்தியுள்ளதாகத் தெரிவித்தது.

### 15 மனைவிகள், 30 குழந்தைகள், 100 உதவியாளர்களுடன்

## தனி விமானத்தில் அமீரகம் சென்ற ஆப்பிரிக்க அரசரின் வீடியோ வைரல்

**துபாய், அக்.8:**

ஆப்பிரிக்காவின் தெற்கு பகுதியில் உள்ள எஸ்வாட்டினி நாட்டின் அரச பரம்பரையில் வந்தவர் மெஸ்வாட்டி-3. பரம்பரை வழி அரசரான மெஸ்வாட்டி, கடந்த ஜூலை மாதம் தனது 15 மனைவிகள், 100 உதவியாளர்கள் புடைசூழ தனி விமானத்தில் அபுதாபியில் வந்திறங்கினார். அங்கு அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. தற்போது அரசராக உள்ள மெஸ்வாட்டியின் தந்தை சோபுசா-2-வுக்கு 125 மனைவிகள் என்ற விஷயமும் தற்போது தெரிய வந்துள்ளது.

15 மனைவிகளுடன் அரசர் மெஸ்வாட்டி வந்திறங்கிய வீடியோ அண்மையில் வெளியானது. தற்போது அந்த வீடியோ இணையத்தில் வைரலாகியுள்ளது. இந்தப் பயணத்தின் மெஸ்வாட்டியின் 30 குழந்தைகளும் வந்திருந்தனர்.

அதேநேரத்தில் சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வரும் அரசர் மெஸ்வாட்டி குறித்து அந்நாட்டு மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். எஸ்வாட்டினி நாட்டில் மக்கள் வாழ்வாதாரத்துக்கே கஷ்டப்பட்டு வரும் நிலையில் அவர் மட்டும் 15 மனைவிகள், 30 குழந்தைகள், 100 உதவியாளர்களுடன் தனி விமானத்தில் வலம் வருவாரா என்று சமூக வலைதளங்களில் அந்நாட்டு மக்கள் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். எஸ்வாட்டினி நாட்டின் கடைசி அரசராக மெஸ்வாட்டி-3 உள்ளார். இவர் அரசர் என்ற அந்தஸ்தை கடந்த 1986-ம் ஆண்டு அடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈகுவடாரில் அதிபருக்கு எதிராக போராட்டம் வலுத்ததால் அவசர நிலை அறிவிப்பு



**குயிட்டோ, அக்.8:**

தென் அமெரிக்க நாடான ஈகுவடாரில் சமீப காலமாக கடும் பொருளாதார நெருக்கடி நிலவுகிறது. இதனால் பட்ஜெட்டில் பல்வேறு செலவினங்களை அரசாங்கம் குறைத்துள்ளது. அந்தவகையில் டீசலுக்கு வழங்கப்பட்டு வந்த மானியத்தை ரத்து செய்வதாக அதிபர் டேனியல் நோபோவா அறிவித்தார். இதனால் டீசலின் விலை லிட்டருக்கு ரூ.25 அதிகரித்தது.

இதற்கு நாடு முழுவதும் எதிர்ப்புகள் கிளம்பின. எனவே டீசல் மானியத்தை திரும்ப வழங்க கோரி தலைநகர் குயிட்டோவில் ஆயிரக்கணக்கான மக்கள் போராட்டத்தில் குதித்தனர். அதேசமயம் அதிபர் டேனியல் நோபோவாவின் ஆதரவாளர்களும் அங்கு அதிகளவில் திரண்டனர்.

அப்போது அதிபருக்கு எதிராக முழக்கம் எழுப்பிய போராட்டக்காரர்கள் பாதுகாப்பு வளையத்தை மீறி அங்கிருந்த பூங்காவுக்குள் நுழைய முயன்றனர். இதனால் ஏற்பட்ட வன்முறையில் பலருக்கு காயம் ஏற்பட்டது. எனவே போராட்டக்காரர்கள் மீது போலீசார் கண்ணீர் புகைக்குண்டு வீசினர். பின்னர் போராட்டத்தில் ஈடுபட்ட 100-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

இதுகுறித்து அதிபர் டேனியல் நோபோவா சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், போராட்டக்காரர்களின் அழுத்தத்துக்கு அரசாங்கம் அடிபணியாது. மேலும் போராட்டத்தில் வன்முறையை கையில் எடுப்பவர்கள் குற்றவாளியாகவே கருதப்படுவார்கள் என எச்சரிக்கை விடுத்துள்ளார். எனினும் அதிபருக்கு எதிரான போராட்டம் பல இடங்களில் தீவிரமடைந்து வருகிறது. எனவே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 10 மாகாணங்களில் அவசர நிலை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது. இதனால் அதிபர் மாளிகை உள்ளிட்ட முக்கிய இடங்கள் ராணுவ கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டு உள்ளன.

## போர் நிறுத்த திட்டத்தை விரைவாக செயல்படுத்த வேண்டும்; இஸ்ரேல் - ஹமாசுக்கு டிரம்ப் வலியுறுத்தல்



**வாஷிங்டன், அக்.8:**

இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனத்தின் காசாமுனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையேயான போரை முடிவுக்கு கொண்டு வர முயற்சித்து வரும் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் 20 அம்ச திட்டத்தை சமீபத்தில் பரிந்துரைத்தார். இதை இஸ்ரேல் ஏற்றுக்கொண்டது. இந்த போர் நிறுத்த ஒப்பந்தத்தின்படி இஸ்ரேல் பிணைக்கைதிகளை விடுவிப்பது உள்ளிட்ட சில பரிந்துரைகளை ஹமாஸ் ஏற்றுக்கொண்டது. மற்ற பரிந்துரைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்ததயாராக இருப்பதாக தெரிவித்தனர்.

இதற்கிடையே பாலஸ்தீன கைதிகளை விடுவிக்க இஸ்ரேலும் ஒப்புக்கொண்டது. இரு தரப்பும் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் முதல் கட்டத்தை செயல்படுத்த தயாராகி வருகின்றன. இது தொடர்பாக இஸ்ரேல் - ஹமாஸ் அமைப்பு பிரதிநிதிகள் இடையே இன்று எகிப்தில் பேச்சுவார்த்தை நடக்கிறது, இதில் அமெரிக்க பிரதிநிதியாக ஸ்டீவ் விட்காப் பங்கேற்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் போர் நிறுத்த திட்டத்தை இருதரப்பும் விரைவாக செயல்படுத்த வேண்டும் என்று டிரம்ப் தெரிவித்து உள்ளார். இது தொடர்பாக அவர் தனது சமூக வலைதள பக்கத்தில் கூறியிருப்பதாவது:-

இந்த வார இறுதியில், ஹமாஸ் அமைப்பினர் வசம் உள்ள பிணைக்கைதிகளை விடுவிப்பது, காசாவில் போரை முடிவுக்கு கொண்டுவருவது குறித்து மிகவும் முக்கியமான விவாதங்கள் நடந்து உள்ளன. இந்த பேச்சுவார்த்தைகள் மிகவும் வெற்றிகரமாகவும்,விரைவாகவும் நடந்து வருகின்றன. மேலும் அனைவரும் விரைவாக செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நூற்றாண்டு பழமையான மோதலை நான் தொடர்ந்து கண்காணிப்பேன். நேரம் மிகவும் முக்கியமானது. இதில் விரைவாக இல்லையென்றால் யாரும் பார்க்க விரும்பாத பெரிய ரத்தகளரி தொடர்ந்து விடும் என்று கூறியுள்ளார்.

## மத்திய தரைக்கடலில் 32,000க்கும் மேற்பட்ட அகதிகள் பலி

2014 முதல் மத்திய தரைக்கடலில் 32,700 க்கும் மேற்பட்ட அகதிகள் உயிரிழந்துள்ளனர் என ஐ.நா தெரிவித்துள்ளது. அமெரிக்கா ஐரோப்பிய நாடுகளால் ஆப்பிரிக்க நாடுகளில் உருவாக்கப்பட்டுள்ள உள்நாட்டு போர் வறுமையின் காரணமாக கடந்த பல ஆண்டுகளாக அந்நாட்டு மக்கள் பெரும் வறுமையில் வாழ்கிறார்கள். இதனால் சிறிய படகுகளில் வாழ்வாதாரம் தேடி மத்திய தரைக் கடல் வழியாக அதிக மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு செல்லும் வழியில் ஏற்படும் விபத்தில் பலியாகி வருகின்றனர்.

## வெனிசுலா வான் எல்லைக்குள் அமெரிக்க போர் விமானங்கள்

அமெரிக்கப் போர் விமானங்கள் வெனிசு லாவின் வான் எல்லைக்குள் அத்து மீறி நுழைந்துள்ளன. இந்த செயலுக்கு வெனிசுலா பாதுகாப்பு மற்றும் வெளியுறவுத் துறை அமைச்சகங்கள் கடுமையான கண்டனம் தெரிவித்துள்ளன. வெனிசுலா வின் ஆட்சியை கவிழ்க்க அமெரிக்கா திட்டமிட்டு வருகிறது. இதற்காக வெனிசுலா எல்லையில் போர் கப்பல்களையும், ராணுவ விமானங்களையும் நிலை நிறுத்தி அந்நாட்டை மிரட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

## சூடானில் கனமழை வெள்ளம் 6.4 லட்சம் பேர் பாதிப்பு

சூடானின் தெற்கு பகுதியில் கனமழை வெள்ளத்தில் சிக்கி 19 பேர் உயிரி ழந்துள்ளனர். வெள்ளத்தால் அப்பகுதியில் உள்ள ஆறு மாகாணங்களில் சுமார் 6,39,225 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 1,75,000 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர் என ஐ.நா அவையின் மனிதாபிமான அமைப்பு தெரிவித்துள்ளது. இந்த பகுதியில் ஏற்கனவே மலேரியா, சுவாச நோய்த்தொற்றுகள் மற்றும் வயிற்றுப்போக்கு போன்ற நோய்களின் பாதிப்புகள் அதிகரித்துள்ள நிலையில் தற்போது சுகாதார நெருக்கடி மேலும் அதிகரித்துள்ளது.

## பள்ளி கட்டடம் இடிந்து 14 பேர் பலி

இந்தோனேசியாவில் பள்ளி கட்டடம் இடிந்து விழுந்ததில் 14 பேர் பலியாகியுள்ளனர். திங்களன்று இந்த விபத்து நடந்த நிலையில் ஒரு வாரமாக மீட்பு பணி நடைபெற்று வரு கிறது. முதலில் 10 க்கும் குறைவான எண் ணிக்கையில் இருந்த பலி எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கட்டட இடிபாடுகளுக்குள் பல மாணவர்கள் உடல் சிக்கியுள்ளது. 50 மாணவர்கள் காணாமல் போயுள்ள நிலையில் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சோமாலியாவுக்கு உணவு உதவியை குறைக்கும் ஐ.நா.

நிதிப் பற்றாக்குறை காரணமாக சோமாலியாவில் அவசரகால உணவு உதவியை குறைக்க உள்ளதாக ஐ.நா உலக உணவுத் திட்டம் அறிவித்துள்ளது. வறுமை, காலநிலை மாற்றம், பஞ்சத்தால் அந்நாடு மிக மோசமான நிலையில் உள்ளது. தற்போது 1 கோடியே 10 லட்சம் மக்களுக்கு ஐ.நா அவை நிவாரண உதவிகளை கொடுத்து வருகிறது. நிதிப் பற்றாக்குறையின் காரணமாக இந்த அளவானது வரும் நவம்பர் மாதம் 3,50,000 ஆகக் குறையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எவரெஸ்ட் பனிப்புயலில் சிக்கி ஒருவர் உயிரிழப்பு - 137 பேர் பத்திரமாக மீட்பு

உலகின் மிக உயரமான மலைப்பகுதியான எவரெஸ்ட் சிகரத்தின் கிழக்கே திபெத் பிராந்தியம் அமைந்துள்ளது. சீனாவின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியான திபெத்தில் அமைந்துள்ள எவரெஸ்ட் மலை சரிவுகளில் பனிப்புயல் நிலவி வருகிறது. இந்த மலைச்சரிவுகளில் வெவ்வேறு நாடுகளை சேர்ந்த மலையேற்ற வீரர்கள் முகாம்களை அமைத்து தங்கியிருந்த நிலையில் இந்த பனிப்புயலால் ஏற்பட்டது. இந்த பனிப்புயலில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் சிக்கினர். இந்தநிலையில் பனிப்புயலில் சிக்கி சீனாவை சேர்ந்த 41 வயது மலையேற்ற வீரர் உயிரிழந்தார். இதுவரை 137 பேர் மீட்கப்பட்டனர். எவரெஸ்ட் பனிப்புயலில் சிக்கி தவித்து வரும் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களை மீட்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

## அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் லாரிகளுக்கு 25% வரி: அடங்காத டிரம்ப்



**வாஷிங்டன்:** அமெரிக்க அதிபராக டிரம்ப் பொறுப்பேற்றதிலிருந்து பல்வேறு நாடுகளின் மீது வரி விதித்து வருகிறார். இந்தியாவுக்கும் 50 சதவீத வரியை விதித்துள்ளார். அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் பல்வேறு பொருட்கள் மீதான வரியையும் அவர் உயர்த்தி வருகிறார். அண்மையில், அவர் சமையலறை மற்றும் கழிவறை உபகரணங்களுக்கு 50 சதவீத வரியும், பர்னிச்சருக்கு 30 சதவீத வரியும் விதித்தார். தற்போது, அதே வகையில், லாரி இறக்குமதிக்கும் வரி விதித்துள்ளார் அமெரிக்க அதிபர் டிரம்ப். இதுகுறித்து அவர் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: “நவம்பர் 1ம் தேதி முதல், பிற நாடுகளில் இருந்து அமெரிக்காவிற்கு வரும் அனைத்து நடுத்தர மற்றும் கனரக லாரிகளுக்கும் 25 சதவீத வரி விதிக்கப்படும்,” என டிரம்ப் தெரிவித்துள்ளார். இந்த புதிய வரி விதிப்பால் பாதிக்கப்படும் நாடுகளின் பட்டியலில் கனடா மற்றும் மெக்சிகோ அடங்குகின்றன.

## “4 லட்சம் பெண்களை பாலியல் வன்கொடுமை செய்து கொன்ற நாடு” - ஐநாவில் பாக். மீது இந்தியா குற்றச்சாட்டு




**நியூயார்க், அக்.8:**

“சொந்த நாட்டுப் பெண்கள் 4 லட்சம் பேரை பாலியல் வன்கொடுமை செய்து கொன்ற நாடு பாகிஸ்தான்” என்று ஐநா பாதுகாப்பு அவையில் நடைபெற்ற விவாதத்தில் இந்தியா குற்றம் சாட்டியது.

ஐநாவுக்கான பாகிஸ்தானின் நிரந்தர பிரதிநிதி சைமா சலீமின் பேசும்போது, “ஜம்மு காஷ்மீரை சுட்டிக்காட்டி இந்தியாவுக்கு எதிராகப் பேசினார். இதற்கு பதில் அளிக்கும் வகையில் பேசிய ஐநாவுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி பர்வதனேனி ஹரிஷ், துரதிருஷ்டவசமாக ஒவ்வொரு ஆண்டும் எனது நாட்டுக்கு எதிராக குறிப்பாக அவர்கள் (பாகிஸ்தான்) விரும்பும் எங்கள் ஜம்மு காஷ்மீருக்கு எதிராக பாகிஸ்தான் பொய்யான குற்றச்சாட்டுக்கள் முன்வைப்பதை கேட்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

பெண்கள், அமைதி, பாதுகாப்பு விஷயத்தில் எங்களின் சாதனை தன்னிகரில்லாது, கறையற்றது. தனது சொந்த மக்களுக்குஎதிராககுண்டுவீசி இனப்படுகொலையை நடத்தும் ஒரு நாடு, தவறான மற்றும் மிகைப்படுத்தப்பட்ட கருத்துக்கள் மூலம் உலகை திசைதிருப்ப முயல்கிறது.

1971-ல் கிழக்கு பாகிஸ்தானில், பாகிஸ்தான் நடத்திய ஆபரேஷன் சர்ச்லைட் ராணுவ நடவடிக்கையின்போது பல லட்சம் அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டனர். (30 லட்சம் பேர் என வங்கதேச அரசு குறிப்பிடுகிறது), 4 லட்சம் பெண்கள் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொல்லப்பட்டனர். இப்படி ஒரு திட்டமிட்ட இனப்படுகொலையை அனுமதித்த நாடு பாகிஸ்தான். இன்று அந்த நாடு எத்தகைய பிரச்சாரத்தை மேற்கொள்கிறது என்பதை உலகம் பார்க்கிறது” என தெரிவித்தார். ஆயுத மோதல்களின்போது பெண்கள் பாதிக்கப்படுவதைத் தவிர்க்கும் விவகாரத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இதற்கான தீர்மானம் ஐநா பாதுகாப்பு அவையில் கடந்த 2000-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. அதன் 25-ம் ஆண்டை முன்னிட்டு பெண்கள் பாதுகாப்பு குறித்த விவாதம் முன்னெடுக்கப்பட்டது. இதில், பாகிஸ்தான் பிரதிநிதி இந்தியாவுக்கு எதிராகப் பேசியதை அடுத்து, இந்தியா தக்கபதிலடி கொடுத்துள்ளது.